June '49 Regd. No. M. 4975

மஞ்சரி

விரோதி - ஆனி

காந்தி மகராஜ்		1
காமன்வெல்த்தில் இந்தியா		2
பாகிஸ்தானின் எதிர்காலம்	அஸ்ட்ராலாஜிகல் மகஸீன்	10
ஆக்ஸ்போர்டு	பிரிட்டிஷ் இன்பர்மேஷன்	14
உலகப் பிரளயம்	கர்மவீர	19
நாகர்கள்	ப்ரபாஸி	22
தெருவில் தூங்குவோர்	ஸவுண்ட்	27
ராஜா எப்படி?		30
நோய் தீர்க்கும் சங்கீதம்	பீப்பிள்ஸ் ஹெல்த்	33
முனிவரும் அலெக்ஸாண்டரும்	பாரதி	38
அறிவில் சிறந்த பட்சி		41
அற்புதப் பச்சிலை	அமிர்த பஜார் பத்திரிகா	45
எதையும் விளக்கும் புள்ளி விவரம்	பிஸினெஸ் வீக்	51
மாங்காய்	இந்தியன் உமன்	52
பெண்ணின் வலிமை	மெர்க்யூர் தெ பிரான்ஸ்	54
புனித கங்கை	பிரீ இந்தியா	57
தொழிலில் சிறந்த ஹைதராபாது	ஆந்திர பத்திரிகா	59
ஆளும் முறை		63
வீர ஒதேனன்	மாத்ருபூமி	65

விசேஷப் பகுதிகள்

பிழையைத் திருத்துங்கள்		9
க்விஸ்		17
பாபுராவ் பதில் சொல்லுகிறார்		25
குழந்தைகள் குறும்பு		36
பரமஹம்ஸர்: வாழ்வும் வாக்கும்		48
கார்ட்டூன் கதம்பம்		68
சிறுகதை : சினிமா பேரம்	சரத் பந்த்யோபாத்யாய	70
புத்தகச் சுருக்கம் : திவான் மகள்	'குமுதினி'	77

அணா 6

ஆடி எடுத்த பொருள்

செக்கிலே எள்ளைப் போட்டு அதன் சத்தான எண்ணெயை ஆடி எடுக்கிறான் தொழிலாளி (படம்). பல பத்திரிகைகளின் சத்தையும் பிழிந்து தருவது 'மஞ்சரி'.

'அறிவில் சிறந்த பட்சி' (பக். 41) எல்லாருக்கும் தெரிந்ததுதான்; ஆனால் அதன் குணாதிசயம் தெரியுமா? இந்தப் பருவத்தில் காய்க்கும் ஒரு காய் பற்றிய ரசமான கற்பனை 'மாங்காய்' (பக். 52). ஆனந்தம் தருவதோடு 'நோய் தீர்க்கும் சங்கீதம்' (பக். 33). 'சினிமா பேரம்' (பக். 70) எப்படி நடக்கிறது என்பதை விளக்கும், ஒரு சிறுகதை.

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன் — கா. ஸ்ரீ. ஸ்ரீ.

த. நா. ஸேனாபதி — 'குமுதினி'

வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி — கி. சாவித்திரி அம்மாள்

சீதா தேவி — 'ஆர்வி'

கௌரி அம்மாள் — மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி; சங்கர்; மகான்.

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/- சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 2] [இதழ் 7

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

காந்தி மகராஜ்

காந்தி மகராஜைப் பின்பற்றும் நம் அனைவர்க்கும் பொது வாக ஒரு குணம் உண்டு.

ஏழைகளின் பணத்தைப் பறித்து நம் ஜேபியை நிறைக்கவும் மாட்டோம்; பணக்காரனுக்குப் பணியவும் மாட்டோம்.

முஷ்டியை ஓங்கியும் தடியால் மிரட்டிக்கொண்டும் வரும் துஷ்டர்களைக் கண்டு நாம் புன்முறுவல் புரிவோம்; 'உங்கள் செந்தழல் கண்கள் சிறுவர்களைத் துயிலெழச் செய்யலாம். பயத்தை ஒழித்தவர்களை அது எப்படிப் பயமுறுத்த முடியும்?' என்றே அவர்களிடம் சொல்வோம்.

நேர்மையும் சரளமும் கலந்திருக்கும் நம் பேச்சிலே.

சிலேடையும் சிக்கலும் அதிலே இருக்க மாட்டா.

தண்டனை விதிக்கும் சட்டங்களையெல்லாம் திணறச் செய்து, துன்புறும் மக்களை வெகு சுலபமாய்ச் சிறைக்கு இட்டுச் சென்றுவிடும் அது.

சிறை வாசலிலே இந்தக் கூட்டம் நிறைந்துவிடும்போது, அவர்கள் மீதுள்ள நிந்தையெல்லாம் நீங்கிவிடும்.

எத்தனையோ ஆண்டுகளாய் அவர்களைத் தளைத்திருக்கும் விலங்குகள் பொடிப் பொடியாய் நொறுங்கி மண்ணோடு மண்ணாகும்; அவர்கள் நெற்றியிலே காந்திஜியின் ஆசி முத்திரை துலங்கும்.

—ரவீந்திரநாத் டாகுர்

காமன்வெல்த்தில் இந்தியா

★

இரண்டொரு மாதத்தில் இந்தியா 'ரிபப்ளிக்' என்ற சுதந்தரக் குடியரசாகப் போகிறது. அதன் பிறகும் அது 'காமன்வெல்த்' உறவை அறுத்துக்கொள்ளாது. இந்தக் காமன்வெல்த்தில் அடங்கிய டொமினியன் மந்திரிகள் மகாநாடு இதுவரைக்கும் பிரிட்டனிலேயே நடப்பது வழக்கம். இனி அது அந்த அந்தச் சமய சௌகரியத்துக்கு ஏற்றபடி வெவ்வேறு டொமினியனில் கூடும். காமன்வெல்த் இனிச் சுயேச்சையான அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு சங்கம் போல் இருக்கும். இந்த அற்புதத்தை நிகழ்த்தியவர் நேருவே.

சமீபத்தில் இரண்டு அற்புத நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. இந்தியாவின் பிரதம மந்திரியாகிய ஜவாஹர்லால் நேரு, லண்டனில் நடந்த காமன்வெல்த் மகாநாட்டில் எல்லாருடைய நன்மதிப்புக்கும் ஆளானார். இந்தியாவை அநாகரிகமான தேசம் என்று இரண்டு வருஷங்களுக்கு முன்பு வரையில் பறையடித்துக்கொண்டிருந்த வெள்ளைக்காரர்கள் இந்தியாவின் பெருமையையும் உண்மை நிலையையும் உணர்ந்துகொண்டு, அதைச் சரி சமானமான நிலையில் வைத்துப் பாராட்டினார்கள். அது தவிர, எப்படியாவது இந்தியாவானது தங்கள் காமன்வெல்த் குடும்பத்துக்குள் இருக்க வேண்டுமென்று கட்டுக்கடங்காத ஆவல் கொண்டார்கள். "நாங்கள் உங்கள் குடும்பத்தோடு உறவாடுவோம். ஆனால் உங்களுடைய அதிகாரம் எங்களிடத்தில் செல்லாது. உங்கள் குடும்பத்தலைவனைக் குடும்பத்தின் ஒட்டுறவுக்குக் காரணமான தலைவனென்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். ஆனால் எங்கள் கூட்டத்துக்கும் அவனுக்கும் சம்பந்தம் ஒன்றும் இல்லை. நீங்கள் யாரோடாவது சண்டைக்குப் போனால், நாங்கள் உங்களுடன் சேர்வதோ, சேராமல் இருப்பதோ எங்கள் இஷ்டத்தைப் பொறுத்தது" என்று இந்தியாவின் பிரதம மந்திரி பேசினார். "நீங்கள் என்ன சொன்னாலும் கேட்கிறோம். வழக்கத்துக்கு மாறாக இருந்தாலும் குற்றமில்லை; புதிய வழக்கம் உண்டாகட்டும். எப்படியாவது நீங்கள் எங்களோடு இருந்தால் போதும்" என்று மற்றவர்கள் சொன்னார்கள். காமன்வெல்த்துடன் இந்தியக் குடியரசின் உறவு எப்படி இருக்க வேண்டும் என்ற விஷயத்தில் ஒரு முடிவு ஏற்பட்டுவிட்டது. இந்தியா சுதந்தரக் குடியரசாகவே

ஆதாரம்:

'அமிர்த பஜார் பத்திரிகை'.
'மாடர்ன் ரெவ்யு.'
'இந்தியன் ரெவ்யு.'
பென்னேர் பிராக்வே,
நேருவின் பிரசங்கங்கள்.

காமன்வெல்த்தில் இருக்கும். பிரிட்டிஷ் அரசர் இந்தக் காமன் வெல்த் உறவுக்கு இணைப்பாக, சபைத் தலைவரைப் போல இருப்பார். வேறு எந்த வகையிலும் இந்தியாவின் போக்கைத் தடைப் படுத்தவோ, உத்தரவிட்டு மாற்றவோ யாருக்கும் அதிகாரம் இராது.

இந்த முடிவைச் சர்ச்சில் துரை கூட ஏற்றுக்கொண்டு பாராட்டிவிட்டார். "இந்தச் சிறப்பான தீரச்செயல் வெற்றி பெறுவதற்கு நம்மால் முடிந்த எல்லாவற்றையும் செய்வோம்" என்று அவர் பேசியிருக்கிறார்.

காமன்வெல்த் என்பது ஒரு குடும்பம் போன்றது. அது வர வர விரிந்தது. குடும்பத்தில் உள்ளவர்களின் இடையே உள்ள உறவு நாளடைவில் வெவ்வேறு விதமாக மாறியது.

17, 18 - ஆம் நூற்றாண்டுகளில் பிரிட்டிஷ் மக்கள் குடியேறிய காலனிகள் ஒரு வகையில் பிரிட்டனின் அதிகாரத்துக்கு அடங்கியே நின்றன. காலனிகளிலுள்ள மக்களுக்குச் சுதந்தர உணர்ச்சி உண்டாயிற்று. இந்த உணர்ச்சி முதல் முதலில் அமெரிக்காவில் உருக்கொள்ளத் தொடங்கியது. அங்கே அது வரையில் இங்கிலாந்தின் ஆணைக்கு அடங்கியிருந்த பகுதிகள் தமக்குள் ஒரு சமஷ்டி உறவை ஏற்படுத்திக் கொண்டன. அப்போது தான் ஐக்கிய அமெரிக்க ராஜ்யம் உதயமாயிற்று. சுதந்தரக் குடியரசாக ஐக்கிய அமெரிக்கா பிரிந்து விவகாரங்களை நடத்தத் தொடங்கியது. அமெரிக்காவின் வடபகுதியாகிய கானடா மாத்திரம் பிரிட்டனின் அதிகாரத்தின்கீழ் இருந்தது. ஆனால் ஐக்கிய அமெரிக்காவின் நிர்மாணத்துக்கு 50 வருஷத்துக்குப் பிறகு, கானடாவிலும் புரட்சி ஏற்பட்டது. அதை ஒருவாறு பிரிட்டன் அடக்கிவிட்டது. ஆயினும், காலனிகளை அடக்கியாள்வது இனி முடியாத காரியம் என்றும், அவைகளில் பொறுப்பாட்சி ஏற்படுத்த வேண்டுமென்றும் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் உணர்ந்தார்கள். இந்த ஏற்பாட்டால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பலம் அதிகமாகும் என்பதையும் அறிந்தார்கள். லார்டு டர்ஹாம் என்பவர் இந்தக் கருத்தை ஓர் அறிக்கை மூலம் வெளியிட்டார். சாம்ராஜ்யப் பித்தும் அடக்கியாளும் ஆசையும் உடைய பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. மிதவாத புத்தியும் கட்டுக்கிடையான சம்பிரதாயப் பற்றும் குறுக்கே நின்றன.

நாளடைவில் உண்மை வெல்லத்தான் வெல்லும். 1855 - இல் முதல் முதலாக ஆஸ்திரேலியக் காலனிகளுக்குச் சுய ஆட்சி உரிமையை வழங்கினார்கள். 1900-இல் அந்தக் காலனிகள் எல்லாம் தம்முள் இணைந்து ஆஸ்திரேலியக் காமன்வெல்த் என்ற பெயரோடு சமஷ்டியாயின. 1855 - இல் நியூஜீலந்தும் சுய ஆட்சியைப் பெற்றது. 50 வருஷங்களுக்குப் பிறகு அது நியூஜீலந்து டொமினியன் ஆயிற்று. 1867 - இல் கானடாவும் 1909-இல் தென் ஆப்பிரிக்க யூனியனும் சுய ஆட்சியுள்ள டொமினியன்கள் ஆயின. 1922 - இல் அயர்லாந்து சுய ஆட்சி பெற்றது.

பல ஆண்டுகளாகத் தாயகமாகிய பிரிட்டனும் காலனிகளும் நெருங்கிய உறவு கொள்வதற்காகப் பலவகை முயற்சிகள் நடைபெற்றன. 1887 - இல் விக்டோ

ரியா மகாராணியின் ஜூபிலி நடந்த போது காலனிகள் மகாநாடு ஒன்று நடைபெற்றது. பிறகும் சில கூட்டங்கள் நடந்தன. "நாலு வருஷத்துக்கு ஒரு முறை தாயகத்தின் சர்க்காரும், கடல் கடந்த காலனிகளின் சர்க்கார்களும் கூடித் தங்களுக்குப் பொதுப் படையாக உள்ள விஷயங்களைப் பற்றி ஆலோசித்தால் சாம்ராஜ்யத்துக்கு நன்மை ஏற்படும்" என்ற தீர்மானம் 1907-இல் கூடிய காலனிகள் மகாநாட்டில் நிறைவேறியது. அப்படிக் கூடும் கூட்டங்களுக்குச் சாம்ராஜ்ய மகாநாடு என்ற பெயரை அளித்தார்கள்.

இந்தத் திட்டத்தின்படி முதல் சாம்ராஜ்ய மகாநாடு 1911-இல் நடைபெற்றது. இடையிலே சாம்ராஜ்யப் பாதுகாப்பு விஷயமாக 1909-இல் ஒரு விசேஷ மகாநாடு நடந்தது.

முதல் உலக மகாயுத்தத்துக்கு முன்பெல்லாம் சுய ஆட்சி பெற்ற டொமினியன்கள் தமக்குத் தாமே தலைமை பூண்ட நிலையில் இருக்கவில்லை. சர்வதேச விவகாரங்களில் இந்த நாடுகளுக்குத் தனி உரிமை இல்லை. பிரிட்டிஷ் கொடியோடு தனி அடையாளம் ஒன்றை ஒட்டின கொடிகளை இந்தக் காலனிகள் வைத்துக்கொண்டன. சொந்த நாணயங்களை அச்சிட்டன. ஆனாலும் இவை சர்வதேச உறவில் தனித்து நிற்கும் உரிமைக்கு அடையாளங்களாக இருக்கவில்லை.

முதல் மகாயுத்தம் ஆரம்பமாயிற்று. சுய ஆட்சி பெற்ற காலனிகள் சாம்ராஜ்யத்துக்குப் பலத்தை உண்டாக்கும் என்று லார்டு டர்ஹாம் சொன்ன வாக்குப் பலித்தது. சுய ஆட்சி பெற்ற காலனிகள் தாயகத்தைச் சார்ந்து நின்று போர் செய்தன. சாம்ராஜ்யத்தின் பாதுகாப்பில் தாமாகவே முன் வந்து ஈடுபட்டன. விசேஷ சாம்ராஜ்ய யுத்த மகாநாடு ஒன்று 1917-இல் கூடியது. யுத்த நிகழ்ச்சிகளை நடத்த ஒரு சாம்ராஜ்ய நிர்வாக சபை அமைந்தது.

இப்படி நெருங்கி உறவு கொள்ள நேர்ந்ததால் சாம்ராஜ்யத்தின் கௌரவமும் செல்வாக்கும் அதிகமாயின. 1919-இல் யுத்த நிறுத்தத்துக்கு முன் சமாதான மகாநாடு நடைபெற்றது. அதில் சுய ஆட்சி பெற்ற காலனிகள் தனித் தனியே தங்கள் பிரதிநிதிகளைக் கலந்துகொள்ளச் செய்தன. சமாதான ஒப்பந்தத்தில் தனித் தனியே அவர்கள் கையெழுத்துப் போட்டார்கள். சர்வதேச சங்கத்தில் காலனிகள் தனித்தனியே அங்கம் பெற்றன. மற்ற உரிமைகளையும் பெற்றன. முதல் மகாயுத்தத்துக்குப் பிறகு பிற நாடுகளுடன் உடன்படிக்கை செய்து கொள்ளும் உரிமையைப் பெற்றன. 1923-இல் கானடா ஐக்கிய அமெரிக்காவுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டது. 1923, 1926, 1930-ஆம் வருஷங்களில் நடந்த சாம்ராஜ்ய மகாநாடுகளின் பலனாக, பிரிட்டனின் சம்மதத்தை எதிர்பாராமலே சுயேச்சையாக ஒப்பந்தம் செய்து கொள்ளும் உரிமை டொமினியன்களுக்குக் கிடைத்தது.

சர்வதேச விவகாரத்தில் சுயேச்சையாகக் காரியங்களை நடத்தும் அதிகாரம், முதல் மகாயுத்தத்துக்குப் பிறகே டொமினியன்களுக்குக் கிடைத்தது. தமக்குத் தாமே நாயகமாக நிற்பதற்குரிய பல உரிமைகளை அவை பெற்றன. 1926 - இல் நடைபெற்ற சாம்ராஜ்ய மகாநாடு டொமினியன்களின் புதிய அந்தஸ்தை ஒப்புக்கொண்டது.

"அவை பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குள்ளே, தம்மைத்தாமே ஆளும் பகுதிகள்; தாயகத்துக்குச் சமானமான அந்தஸ்து உள்ளவை. உள்நாட்டு விவகாரத்திலும் வெளிநாட்டு விவகாரத்திலும் பரஸ்பரம் எந்த வகையிலும் உட்பட்டு நிற்பவை அல்ல. அரசரோடு பொதுவகையில் தொடர்புடையவைகளாய், பிரிட்டிஷ் காமன்வெல்த்தின் சுதந்தர அங்கங்களாய் இருக்கும்" என்ற தீர்மானம் அப்போது நிறைவேறியது. இந்தத் தீர்மானத்தின்படி டொமினியன் அந்தஸ்தின் இலக்கணத்தைப் பின்வருமாறு வகுக்கலாம்:

1. டொமினியன்கள் தம்மைத் தாமே ஆளும் தனிச் சமுதாயங்கள்.

2. அவை பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் அடங்கின உறுப்புக்கள்.

3. நிர்ப்பந்தத்தாலோ, பயமுறுத்தலாலோ இன்றித் தாமே விரும்பி அவை தமக்குள் உறவாடும்.

4. இங்கிலாந்தைப் போலவே அவை சர்வ சுதந்தரம் உடையவை. அவைகளின் உள்நாட்டு விவகாரத்திலும் வெளிநாட்டு விவகாரத்திலும் இங்கிலாந்து எந்த விதமான அதிகாரத்தையும் செலுத்த முடியாது.

5. அவைகளை இணைக்கும் ஒரே தொடர்பு, அரசரிடம் விசுவாசமாக இருப்பதுதான்.

1926-இல் சாம்ராஜ்ய மகாநாட்டில் நிறைவேறின தீர்மானத்தின் கருத்துக்களை 1930-இல் பின்னும் விரிவுபடுத்தினார்கள். இந்த மகாநாடுகள் கூடி ஆலோசனை கூறலாமே ஒழிய, இப்படிச் செய்யத்தான் வேண்டுமென்று அதிகாரம் செய்யவோ, அமலுக்குக் கொண்டு வரவோ முடியாது. ஆகவே தீர்மானங்களின் கருத்துக்கள் நாளடைவில் பிரிட்டனிலும் டொமினியன்களிலும் சட்ட பூர்வமாகவும் செயலிலும் அமலுக்கு வந்தன.

1931-ல்பிரிட்டிஷ்பார்லிமெண்டு, டொமினியன்களின் சுதந்தரத்தைச் சட்ட பூர்வமாக ஒப்புக்கொண்டது. வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம் என்ற ஒன்றை அப்போது நிறைவேற்றினார்கள். அது பின்கண்ட கொள்கைகளை ஒப்புக்கொண்டது:

1. பிரிட்டனின் பார்லிமெண்ட் சட்டத்துக்கு விரோதமானது என்பதற்காக டொமினியன்கள் செய்யும் எந்தச் சட்டமும் செல்லாமற் போகாது.

2. டொமினியனைப் பாதிக்கும் படியாக உள்ள பிரிட்டிஷ் பார்லிமெண்ட் சட்டத்தின் பகுதிகளை மாற்றுவதற்கு டொமினியன் பார்லிமெண்டுகளுக்கு அதிகாரம் உண்டு.

3. சம்பந்தப்பட்ட ஒரு டொமினியன் வேண்டிக்கொண்டாலொழியப் பிரிட்டிஷ் பார்லிமெண்டின் எந்தச் சட்டமும் அதைக் கட்டுப்படுத்தாது.

பிரிட்டிஷ் பார்லிமெண்ட் சட்டத்துக்கு உட்படும் நிலை ஒரு டொமினியனுக்கு ஏற்படலாம்; அப்படி உட்பட அது ஒப்புக்கொண்டால்தான் இந்த நிலை ஏற்படும். டொமினியன் பார்லிமெண்டுகளுக்கு உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்களில் தங்கள் இஷ்டம் போல நடக்கும் அதிகாரம் இந்தச் சட்டத்தால் கிடைத்தது.

பிரிட்டனுக்கும் டொமினியன்களுக்குமுள்ள பிணைப்புக்கு, அரசர் ஓர் அடையாளம்; மற்றொன்று இங்கிலாந்திலுள்ள பிரிவி கௌன்ஸில்.

அது டொமினியன்களின் அப்பீல் கோர்ட்டாக இருக்கிறது. ஆனால் இந்த உறவைக்கூட டொமினியன்கள் இஷ்டப்பட்டால் மாற்றிக் கொள்ளலாம். தன் மக்கள் பிரிவி கௌன்ஸிலுக்கு அப்பீல் செய்யக் கூடாது என்று அயர்லாந்து தடுத்து விட்டது. கிரிமினல் வழக்கு அப்பீல்களைக் கானடா தடுத்திருக்கிறது.

டொமினியன்களின் கவர்னர் ஜெனரல்களையும் தூதர்களையும் அரசர் நியமிக்கிறார். இந்த நியமனத்தில்கூடப் பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு எந்த விதத் தொடர்பும் இல்லை. அந்த அந்த டொமினியன் அரசாங்கம் யார் யாரைச் சிபாரிசு செய்கிறதோ, அவர்களையே அரசர் நியமிப்பார். தென் ஆப்பிரிக்காவில் 1934 - இல் ஏற்பட்ட சட்டத்தால் கவர்னர் ஜெனரலே அரசர் பெயரால் நடைபெறும் சில காரியங்களைச் செய்யும் அதிகாரம் பெற்றார். அயர்லாந்தில் உள்நாட்டு விவகாரங்களில் அடியோடு அரசர் தொடர்பை நீக்கிக் கொண்டார்கள். கடைசியில் இந்த வருஷம் ஏப்ரல் 18-ஆம் தேதிக்குப் பின் அயர்லாந்து சர்வ சுதந்தரக் குடியரசாகிவிட்டது.

இங்கிலாந்துக்கும் வேறொரு தேசத்துக்கும் போர் ஏற்பட்டு, யுத்தப் பிரகடனம் செய்துவிட்டால் டொமினியன்களெல்லாம், அந்த யுத்தப் பிரகடனத்துக்கு உட்பட வேண்டுமா? இங்கிலாந்து யுத்தத்துக்குச் சென்றால் எந்த டொமினியனும் நடுநிலையைச் சட்ட பூர்வமாக வகிக்க முடியாது என்பது கானடா, ஆஸ்திரேலியா, நியூஜீலந்து இந்த நாட்டினரின் கருத்து. "காமன்வெல்த் தலைவராகிய அரசர், தம்மிடம் விசுவாசமுள்ள சில டொமினியன்களினால் ஓர் அயல் நாட்டுக்குப் பகைவராகவும், வேறு சில டொமினியன்களின் நிலையினால் அதே தேசத்தோடு உறவாடுபவராகவும் இருக்கமுடியுமா? இது முரண்பாடான நிலை அல்லவா?" என்பது சிலர் வாதம். ஆனால் நடைமுறையில் சில விசித்திரங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

1939 செப்டம்பர் 3-ஆம் தேதி ஆஸ்திரேலியப் பிரதமர், "பிரிட்டன் ஜெர்மனியோடு போர் முழக்கம் செய்துவிட்டபடியால், நாமும் போருக்கு எழுவது முறை" என்று சொன்னார். ஆனால் தென் ஆப்பிரிக்காவும் கானடாவும் சில நாள் கழித்துத் தனித்தனியே யுத்தப் பிரகடனம் செய்தன. இதனால் இங்கிலாந்தின் யுத்தப் பிரகடனம் தங்களைக் கட்டுப் படுத்தாது என்ற அவர்கள் கொள்கை தெளிவாகிறது. இரண்டு பிரகடனங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் காமன்வெல்தின் தலைவரான அரசருக்கும் ஜெர்மனிக்கும் இருந்த உறவு என்ன? இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, நியூஜீலந்து இவற்றைப் பொறுத்த மட்டில் அரசர் ஜெர்மனியோடு போர் முழக்கம் செய்த பகைவர்; தென் ஆப்பிரிக்கா, கானடா என்பவற்றைப் பொறுத்தமட்டில் பகையற்றவர்! இது வேடிக்கையான உறவல்லவா?

வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம் டொமினியன்கள் பிரிட்டனிலிருந்து பிரிவதைக் குறித்து வெளிப்படையாக ஒன்றும் சொல்லவில்லை. அநுஷ்டானத்தைக் கொண்டு பார்க்கும்போது, பிரியவேண்டும் என்ற அபிப்பிராயம் வலிவு பெற்றால் இங்கிலாந்து அதைத் தடுக்க முடியாது என்றே தெரிகிறது. இதற்கு அயர்லாந்தே உதாரணம்.

இதுவரையில் காமன்வெல்த்தில் சேர்ந்திருந்த டொமினியன் எல்லாம் ஒரே இனத்தைச் சார்ந்த மக்களை உடையவை. இப்போது இந்தியா, பாகிஸ்தான், இலங்கை என்ற மூன்று புதிய டொமினியன்கள் ஏற்பட்டுள்ளன. இவை வெள்ளை இனத்தைச் சேராத மக்களின் உறைவிடம்.

இந்தியாவுக்கு 1947 ஆகஸ்டு 15-ஆம் தேதி டொமினியன் அந்தஸ்து கிடைத்தது. பிற டொமினியன்களுக்கும் இந்த டொமினியனுக்கும் பல வேறுபாடு உண்டு.

இந்திய சுதந்தரச் சட்டத்தினால் இந்தியாவுக்குப் பல வகையான உரிமைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு எந்த வகையிலும் இந்தியா கட்டுப்பட்டதல்ல. பிரிட்டிஷ் அரசர் பெயரால் சில சம்பிரதாயமான காரியங்கள் நிகழும். கவர்னர் ஜெனரல் நியமனமும் அயல்நாட்டுத் தூதர் நியமனமும் அரசர் பெயரால் நடைபெறும். ஆனால் அவை இந்திய அரசாங்கத்தின் விருப்பப்படியே நடக்கும்.

"நான் ஒருவரை அயல்நாட்டுக்குத் தூதராகப் பொறுக்கி எடுத்து அந்த விஷயத்தை அரசருடைய அந்தரங்கக் காரியதரிசிக்குத் தெரிவிப்பேன். உடனடியாக அரசர் தம் அங்கீகாரத்தைத் தெரிவித்து விடுவார்" என்று இந்த நியமனத்தைப்பற்றி ஜவாஹர்லால் நேரு ஒரு சமயம் சொன்னார்.

*　　*　　*

இந்தியா சமீபத்தில் குடியரசாகப் போகிறது. குடியரசாக இருந்தாலும் காமன்வெல்த்தில் சேர்ந்தே இருக்கும் என்பதே இங்கிலாந்தில் செய்துள்ள முடிவு. காமன்வெல்த்தின் சம்பிரதாயத் தலைவர் அரசர் என்பதை இந்தியா ஒப்புக்கொள்ளும். ஆனால் அவர் பெயரால் எந்த வேலையும், சம்பிரதாயத்துக்குக்கூட இங்கே நடைபெறாது. கவர்னர் ஜெனரல் பதவி இனி இராது. இந்தியக் குடியரசின் ஜனாதிபதியே இனி வெளிநாட்டுத் தூதர் நியமனம் முதலியவற்றை அங்கீகரிப்பார்.

இங்கிலாந்து எந்த நாட்டோடாவது யுத்தம் தொடங்கினால் இந்தியக் குடியரசு எந்தக் கட்சியிலும் சேராது. வியாபார சம்பந்தம், பொருளாதார நிலை இவற்றில் காமன்வெல்த் நாடுகளின் உறவினால் இந்தியாவுக்கு நன்மை உண்டாகும். "அமெரிக்கா இங்கிலாந்துக்கு உதவி செய்ய முன்வந்திருக்கிறது. அதற்காக இங்கிலாந்து அமெரிக்காவின் 49-ஆவது மாகாணம் ஆகிவிடவில்லையே! ஒப்பந்தம் செய்து கொண்டு அந்த உபகாரத்தைப் பெறுகிறதே! அப்படி அடியோடு இங்கிலாந்தின் தொடர்பையே அறுத்துக்கொண்டு, வேண்டுமானால் ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளலாமே!" என்று சிலர் வாதிக்கிறார்கள்.

அமெரிக்காவும் இங்கிலாந்தும் அரசியல் உறவில் யாதொரு தொடர்பும் அற்றவை. ஆகவே புதிதாக ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டியிருக்கிறது. இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் 200 வருஷங்களாகத் தொடர்பு இருந்துகொண்டே வந்திருக்கிறது. இந்தத் தொடர்பினால் வந்த மற்ற விளைவு எதுவாக இருந்தாலும், பிரிட்டிஷ் டொமினியன்களிலும் இங்கிலாந்திலும் இந்தியர்கள் குடியேறியிருக்கிறார்கள். வியாபாரம், தொழிற்பயிற்சி முதலியவற்றில் சில சலுகை பெற்றிருக்கிறார்கள். நெடுங்காலத் தொடர்பினால் வந்த

நன்மைகள் இவை. இவற்றை அடியோடு மாற்றுவதனால் லாபம் ஒன்றும் இல்லை. காமன்வெல்த்தில் இந்தியா இருப்பதனால் அதற்கு எந்த விதமான பாதகமும் இல்லை. இந்தியாவின் உண்மையான மதிப்பும், அமைதியை விரும்பும் இயல்பும் இப்போது உலகம் முழுவதும் தெரிந்துகொண்டு வருகிறது. டொமினியன்களின் உறவினால் இந்த நல்லெண்ணம் பின்னும் அதிகமாகும்.

இங்கிலாந்திலிருந்து பிரிந்து போக வேண்டிய அவசியம் ஒரு சந்தர்ப்பத்தில் நேரும். அதாவது இங்கிலாந்துக்குப் பகைநாடு ஏதாவது ஏற்பட்டு யுத்தம் ஆரம்பமானால், அந்தப் பகைநாட்டோடு சேர வேண்டும் என்ற எண்ணம் இந்தியாவுக்கு இருந்தால், இங்கிலாந்தின் தொடர்பை அறுத்துக்கொள்ள வேண்டும். இன்று பிரிய வேண்டும் என்று சொல்லும் கூட்டத்தார், அந்தரங்கத்தில் இந்தியா தனித்து நிற்க வேண்டும் என்ற நோக்கத்தோடு சொல்லவில்லை. இங்கிலாந்தும் அமெரிக்காவும் தலைமை வகிக்கும் கட்சி ஒன்று; ருஷ்யாவின் தலைமையில் அமைந்த கட்சி ஒன்று. இந்த இரண்டு கட்சியிலும் சேராமல் நடுநிலையில் இருக்க விரும்புகிறது இந்தியா. அதனால்தான் ஜவாஹர்லால் நேரு, "அமைதியையும் நட்பையும் நாடியே இந்தியா இந்த ஏற்பாட்டுக்கு இணங்கியது" என்று சொல்கிறார். சமீபத்தில் போர் வரப் போகிறதென்று பூச்சாண்டி காட்டுபவர்கள் பலர் உண்டு. ஆனால் ஜவாஹர் அதை ஒப்புக்கொள்ளவில்லை. மூன்றாவது மகா யுத்தத்துக்கு உலகம் தயாராக இல்லை என்றே சொல்கிறார். ஆகவே, அமைதியை வளர்க்கும் விஷயத்தில் கட்சிப் பிரதிகட்சி இல்லை. இதுவரையிலும் உள்ள உறவின் நல்ல பயன்களை மாத்திரம் அநுபவிப்பதில் தவறு இல்லை. ஆட்சிமுறையில் இருந்த தொடர்பினால் நாம் துன்பம் அடைந்தோம். அது மாறிவிட்டது. இந்தியக் குடியரசு யாருக்கும் தலை வணங்காது. அதனால் இதுவரையில் தொடர்பு பூண்ட பிரதேசங்களிலிருந்து அடியோடு அறுத்துக் கொள்ள வேண்டும் என்பதில்லை. போர் வந்தால் இந்தியா தனித்து நிற்கும்; போருக்கு எதிரே அமைதியின் கட்சியிலே நிற்கும். இது இந்தியப் பிரதமர் சாதித்த சாதனை. இந்த முறையை மகாத்மா காந்தி இருந்தால் ஒப்புக்கொள்வார் என்று ஜவாஹர்லால் சொல்கிறார். "இந்திய ஜனங்கள் ஒப்புக்கொண்டார்கள் என்பது எனக்குத் தெரியும்" என்றும் சொல்கிறார். "நான் நினைக்கிறபடி நல்லது விளையாவிட்டால், அப்போது பார்த்துக் கொள்ளலாமே. அறுத்துக்கொள்வதற்கு யாரையும் கேட்க வேண்டாம். 'உமக்கும் உம்முடைய காமன்வெல்த்துக்கும் ஒரு நமஸ்காரம். போய் வாருங்கள்' என்று சொல்ல எப்போதும் நமக்கு உரிமை உண்டு" என்று அவர் நியாயம் காட்டுகிறார்.

குழந்தைக்குத் தண்டனை

பெற்றோர்கள் கொடுக்கும் தண்டனை குற்றத்துக்கு ஏற்றதாக இருக்கக்கூடாது; குழந்தைக்கு ஏற்றதாகவே இருக்க வேண்டும்.

— ஏ. வொர்த்தி, 'வொர்ல்ட் டைஜெஸ்ட்'

பிழையைத் திருத்துங்கள்

கீழே உள்ள ஒவ்வொரு பகுதியிலும் எழுத்து, சொல், பொருள், வாக்கியப் பிழை ஏதாவது ஒன்று இருக்கும். அதைக் கண்டு பிடித்துத் திருத்துங்கள்.

1. காந்தியடிகள் அவருக்கென்று அதிகமான பொருள்களைச் சேர்த்து வைத்துக்கொள்ளவில்லை.

2. பட்டினத்துப் பிள்ளையார் பிறந்த இடத்துக்கு அருகுள்ள திருவொற்றியூரிலே சமாதியானார்.

3. கம்பும் சோளமும் ராகியும் நெல் பயிரிடுதலும் போன்ற காரியங்களிலே கவனம் வைத்தால் தான் இப்போதைய உணவுப் பஞ்சம் தீர ஏதாவது வழி பிறக்கும்.

4. பர்ப்பாடகம் என்ற அருமையான உப்பிலிருந்து வடித்தெடுக்கும் பானம் நீர்த் தாகத்தைப் போக்க வல்லது.

5. பாரத யுத்தம் ஆரம்பித்த பிறகு, உலகம் அமைதி பெற வேண்டு மென்று நாற்பத்தெட்டு நாள் விரதம் காத்த ஒரு முனிவர் சரியாக விரதம் முடித்த அன்றே யுத்தமும் நின்றது என்று கேட்டு அளவற்ற திருப்தி அடைந்தார்.

6. சங்கரபகவத்பாதாள் இயற்றி யிருக்கும் அற்புதமான கிரந்தங்களை மேல்நாட்டுத் தத்துவ சாஸ்திர நிபுணர்களெல்லாம் கண்டு வியந்து பாராட்டுகிறார்கள்.

7. இலங்கையிலுள்ள போராபுதூர்ச் சிற்பங்களில் ராமாயண சம்பந்தமான காட்சிகளைச் சிற்பக் கலை வல்லுநர் மிக அழகாக அமைத்திருக்கிறார்கள்.

8. நளனுடைய கதையை மிக அருமையாகப் பாடிய புகழேந்தியின் பெருமையை, "நைடதம் புலவர்க்கு ஒளடதம்" என்ற பழமொழியே தெரிவிக்கிறது.

9. அழகுக்குத் தலைவன் என்ற பொருளில் காமனைக் குறிக்கும் பெயராகிய அழகேசன் என்பதை அளகேசன் என்று எழுதுவது தவறு.

10. சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் ஒவ்வொரு முகம் இருக்கவும், தன்க்கு நான்கு முகம் இருப்பதைக் கருதிக் கர்வங் கொண்டான் பிரமதேவன்.

11. கன்யாகுமரியில் சூரியாஸ்தமனத்தையும் சூரியோதயத்தையும் ஒரே சமயத்தில் பார்க்கலாம்.

12. பல நாடுகளில் பழங் காலத்தில் அரசும் அமைச்சும் சேர்ந்துகொண்டு உலகத்தைப் பாழாக்கி வந்தார்கள்.

13. அறம் பொருள் இன்பம் வீட்டைப்பற்றித் திருக்குறளில் திருவள்ளுவர் விரிவாகச் சொல்லியிருப்பதைச் சிலர் கவனிப்பதில்லை. இவற்றால் அன்றாட வாழ்க்கையில் என்ன பயன் என்று கேட்கிறார்கள்.

'காஷ்மீர் விஷயத்தில் சமரசம் ஏற்படும்; ஆனல், அது நிலைக்காது' என்கிறது ஜோஸ்யம்.

பாகிஸ்தானின் எதிர்காலம்

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே உள்ள சச்சரவில் 1949 - ஆம் வருஷத்து முக்கியமான பிரச்னை காஷ்மீர் விஷயம். 1949 ஜனவரி முதல் தேதி ஐ. நா. கமிஷன் சொன்ன நிபந்தனைகளின் மேல் 'போர் நிறுத்தம்' ஏற்பாடாயிற்று. ஆனல் அந்த நிபந்தனைகளுக்கு இந்தியாவும் பாகிஸ்தானும் வெவ்வேறு வியாக்கியானம் செய்வதால் அரசியல் தகராறு மறுபடியும் உண்டாகியிருக்கிறது. "பேருக்கு ஒரு சமாதானம் ஏற்படும். ஆனல் பாகிஸ்தானிகள் அதைக் குலைத்துவிடுவார்கள்; பெரிய அளவில் மீண்டும் போர் தொடங்கும்" என்று முன்பு எழுதியிருந்தோம். அந்த ஜோஸ்யத்தின் முதற் பகுதி பலித்துவிட்டது. இரண்டாவது பகுதியும் பலிக்கும் என்பதற்கு அறிகுறிகள் இல்லாமல் போகவில்லை. ஜோஸ்யர்களைக் கலந்துகொண்டு நல்ல வேளையில் சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்தால் நிச்சயமாக நல்ல பலன் ஏற்பட்டிருக்கும். வானில் உள்ள கிரகங்களும் நட்சத்திரங்களும் தங்களுடைய சேர்க்கையினல் மனிதனுடைய உடம்பிலிருக்கும் கண்ணறைகளையும் புத்தியையும் பாதிக்கும் என்று ருஷ்யாவில் உள்ள பிராணி விஞ்ஞானம், வான பௌதிக நூலறிவு ஆகியவற்றில் வல்லலக்கோவ்ஸ்கி சொல்கிருர்.

உலகத்தில் மிகப் பெரிய முஸ்லிம் அரசு மிகவும் தாமதமாக உருவாகி வருகிறது. அது பிறந்தபோதே சஸ்திரப் பிரயோகம் செய்யவேண்டியிருந்தது. அதனல் ரத்தம் அதிகமாக ஓடியது; இன்னும் புண் முற்றும் ஆறினபாடில்லை. வளர்ப்புப் பிதாவாகிய ஜின்னுவின் பாதுகாப்பில் குழந்தை தேறி வந்தது. ஆனல் அது கண்ணைத் திறப்பதற்குள் தந்தையை இழந்து அநாதையாகிவிட்டது!

பாகிஸ்தானின் லக்னம் மேஷம். லக்னதிபதியாகிய செவ்வாய் மிதுனத்தில் இருக்கிறது. பாபகர்த்தரி யோகத்துக் குட்பட்டிருக்கிறது. ஐந்து கிரகங்கள் சேர்ந்தாற்போல் ஒரு வீட்டில் இருக்கின்றன. லக்னதிபதி மிதுனத்தில் இருப்பதனல், பாகிஸ்தான் அரசியல் நிபுணர்கள் மனக்கோட்டை கட்டுவார்கள்; அநுஷ்டானத்தில் எவ்வளவு நடத்துவார்களோ!

ராகு இரண்டாவது ராசியில் இருந்தாலும் பாவ சக்கரத்தில் முதல் ராசியில் இருக்கிருன். இதனல் பாகிஸ்தான் பிரமுகர்கள், சிறுபான்மையினர் விஷயத்தில் கவனமுள்ளவர்களாக நடிப்பார்கள். ஆனல் அதற்கு மாறாக, பெரிய முஸ்லிம் ராஜ்யம் உருவாகவேண்டு

[காப்பிரைட் : அஸ்ட்ரலாஜிகல் மகஸீன் (ஆங்கிலம் : ஜூன் '49), பெங்களூர்.

மென்று, சிறுபான்மையோரை ஒழித்துவிட முயற்சிகள் நடைபெறும்.

ஹிட்லர் பதவிக்கு வந்து அமைத்த மூன்றாவது ரீஷ் சபையின் ஜாதகமும், இந்தப் பாகிஸ்தான் ஜாதகமும் பல வகையில் ஒற்றுமையாக இருக்கின்றன. ரீஷின் ஜாதகத்திலும் லக்னம் மேஷந்தான். இரண்டு ஜாதகங்களிலும் மூன்றும் இடத்தில் மாந்தி இருக்கிறது. இவற்றைப் போன்ற பல கிரகசார ஒற்றுமைகள் இருக்கின்றன. இவை இந்த இரண்டின் நடவடிக்கைகளும் ஒரே மாதிரி இருக்குமென்று தெரிவிக்கின்றன. பாகிஸ்தானின் ஜாதகத்தில் சந்திரனுடைய நிலையின்படி முஸ்லிம் ஜாதியைத் தனியே ஒதுங்கி நிற்க வைக்கும் முயற்சி அங்கே நிகழும். பத்தாம் இடத்தைச் சனியும் சூரியனும் பார்ப்பதால் அங்கே ஜனநாயகம் வெறும் கேலிக் கூத்தாகத்தான் இருக்கும்.

சந்திர லக்னத்துக்குச் செவ்வாயின் பலமான பார்வை ஏற்பட்டிருக்கிறபடியால் ராணுவ பலத்தை அதிகமாக்குவதில் பிரமாதமான உற்சாகம் ஏற்படும். செவ்வாயும் சனியும் ஏழாம் இடத்தைப் பார்ப்பதால் பாகிஸ்தான் தன் தகிடுதத்த வாதங்களை விடாமல் பற்றும்; ஆக்கிரமிப்புக்குத் திட்டம் போடும்; இதனால் இழிவுற்றுத் தன் தலையில் தானே மண்ணைப் போட்டுக் கொள்ளும்.

இந்தியா பாகிஸ்தான் இரண்டின் கிரக நிலைகளும் ஒன்றாகவே இருக்கின்றன. ஆனால் லக்னம் மாத்திரம் வேறு வேறு. இதனால் இரண்டு தேசங்களின் வழிகளும் லட்சியங்களும் ஒன்றுக்கொன்று அதிக வித்தியாசப்படுகின்றன. இந்தியாவின் ஜாதகத்தில் மூன்றும் வீட்டில் ஐந்து கிரகங்கள் சேர்ந்திருப்பது முதலில் சச்சரவுகளும் சங்கடங்களும் இருந்தாலும் சுபிட்சமான எதிர்காலம் உண்டு என்பதைப் புலப்படுத்துகிறது.

நவாம்ச சக்கரத்தின்படி பாகிஸ்தானின் எதிர்காலம் சுகமாயில்லை. சண்டை சச்சரவுகளுக்குப் பின் ஒரு புதிய அரசியல் கட்சி அங்கே தோன்றும். இந்தியாவோடு பாகிஸ்தான் சேர்வது என்பது, இப்போதைக்கு நடக்காவிட்டாலும், ஒரு காலத்தில் நடந்தே தீரும் என்பதற்கு அறிகுறிகள் இல்லாமற் போகவில்லை.

இனி லியாகத் அலிகானின் ஜாதகத்தை ஆராய்வோம். கும்ப ராசியில் சந்திரராகு சம்பந்தம் இருப்பதால் ஓரளவுக்கு இவருக்கு மத வெறி இருக்கும். மனத்தில் கோட்டை கட்டுவது பலமாக இருக்கும். தலைகீழ்ப் பாடம் படிப்பார். இவர் பிரதமராக இருக்கும் வரையில் எல்லாம் ஒருவாறு அமைதியாக நடக்கும். 1950 செப்டம்பரில் சனி நிலைபெயர்கிறான். 1951 ஜனவரி மாதத்திலிருந்து மே மாதத்துக்குள் சூரியனும் செவ்வாயும் மாறுகிறார்கள். இவை உள்ளத்தைப் பாதிப்பவை. பலாத்காரச் செயல்கள் நடைபெறும். அரசியல் விவகாரங்களில் அதிகாரம் வகிப்பவர்களோடு சண்டை சச்சரவுகள் ஏற்படும். ராகு மீனத்துக்குப் போகும்போது திடீர் மாறுதல்கள் நேரும்.

சமீபத்தில் நடந்த லண்டன் மகாநாட்டில் காமன்வெல்த்தின் தொடர்பு இந்தியாவுக்கு இருக்கும் என்று தீர்மானமாயிற்று. அரசியல் வட்டாரங்களில் இது பெரிய ராஜதந்திர வெற்றி என்று சொல்

கிறார்கள். அது எப்படி இருந்தாலும் ஜோஸ்யரீதியில் பார்த்தால் இந்தத் தீர்மானத்தால் இந்தியாவுக்குப் பெரிய நன்மை ஏதும் விளையப் போவதில்லை. காமன்வெல்த் மகாநாட்டின் ஜாதகத்தைப் பார்த்தால், இந்த மகாநாட்டில் நடந்த பேச்சு வார்த்தைகளில் பாதுகாப்பு விஷயம் அதிகமாக அடிபட்டிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. காமன்வெல்த்தின் அங்கங்களான இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே அமைதியான உறவுக்குப் பங்கம் நேரும். காஷ்மீர் விஷயத்தில் பட்சபாதமின்றி நடக்கவேண்டிய பிரிட்டிஷ் அதிகாரிகள் பாகிஸ்தான் சார்பில் நிற்பார்கள். காமன்வெல்த்தின் உறவினாலோ, ஐ. நா. கமிஷனாலோ காஷ்மீர் விஷயத்தில் எந்த விதமான உபகாரமும் ஏற்படப் போவதில்லை.

பாகிஸ்தானுக்கு இப்போது சனி தசை நடக்கிறது; அதில் புத புக்தி. உள்நாட்டு நிலை குழப்பமாகவே இருக்கும். ஆனால் பத்திரிகைகளை அடக்கி வைப்பதனால் வெளியுலகத்துக்கு ஒரு விஷயமும் தெரியாது. இருவேறு சாதி என்ற பயங்கரமான கொள்கையில் மாறுபாடு இருக்குமென்று தோன்றவில்லை.

1949 டிசம்பரில் செவ்வாய் சனி சமாகமம் நேர்கிறது. பாகிஸ்தானத்தை ஆள்பவர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டிய காலம் அது. இன்னும் உள்நாட்டுச் சச்சரவுகள் ஏற்படலாம்; நஷ்டங்கள் நேரும். முக்கியமான மனிதர் ஒருவர் மரணமடைவார். அக்கம் பக்கத்தாருடன் சச்சரவு உண்டாகும்.

சனி கன்னியிலிருந்து பெயர்கிற வரைக்கும் இந்தியாவில் ஏதாவது தொந்தரவு இருந்துகொண்டே இருக்கும். காஷ்மீர் ஒரு முள்ளைப் போல இருக்கும். இந்திய அரசியல் நிபுணர்கள் ஜாக்கிரதையாகவும் சாமர்த்தியமாகவும் நடக்கவேண்டும்.

பொதுஜன வாக்கெடுப்பு மிகவும் சிரமப்படும். காஷ்மீரிலிருந்து ஓடிப்போன அகதிகள் திரும்பி வந்து பழையபடி குடியேறவோ, வாக்களிக்கவோ அநுகூலமான நிலை ஏற்படுவது அரிது. அட்மிரல் நிமிட்ஸுக்கு மிகவும் கஷ்டமான கடமை ஏற்பட்டிருக்கிறது. அவருக்கு வெற்றி உண்டாக வேண்டுமென்றே நாம் விரும்புகிறோம். ஆனால் கிரகநிலை சரியாக இல்லை. பலவிதமான பித்தலாட்டங்களால் பாகிஸ்தான் இந்தப் பொதுஜனவாக்கெடுப்பைக் குலைக்க முயற்சி செய்யும். இத்தகைய சங்கடங்களுக்கு ஏற்ற பாதுகாப்பை நேரு சர்க்கார் செய்ய வேண்டியிருக்கும். அடுத்த மூன்று வருஷங்களில் காஷ்மீரை ஏதோ ஒருவிதமாகப் பிரிப்பதற்கு வேண்டிய முயற்சிகள் நடைபெறும். நம் தலைவர்கள் அவைகளுக்கு இடங் கொடுக்காமல் பலமாக எதிர்க்க வேண்டும்.

பொதுவில் ஜோஸ்ய ரீதியாகப் பார்த்தால் சமீபகாலத்தில் இந்தியா பாகிஸ்தான் உறவில் அமைதியும் நேசபாவமும் ஏற்படப் போவதில்லை. தகராறுகள் நேரும் என்ற குறிப்பு இருக்கிறது. ஆகையால் இந்திய அரசியல் நிபுணர்கள் முன் கூட்டியே தக்கபடி பாதுகாப்புகளை அமைத்துக் கொள்ளவேண்டும்.

௦௦

இதுதான் பிழை

[9-ஆம் பக்கத்தில் உள்ள வாசகத்தை நீங்களே திருத்திப் பார்க்குமுன் இதைப் படிக்க வேண்டாம்.]

1. காந்தியடிகள் தமக்கென்று... என்று இருப்பதே சிறப்பு.

2. பட்டினத்துப் பிள்ளையார் பிறந்த பட்டினம் சென்னபட்டினம் என்ற தவறான கருத்தினால், திருவொற்றியூர் பிறந்த இடத்துக்கு அருகுள்ளதென்று இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. அவர் ஊர் காவிரிப் பூம்பட்டினம்; பட்டினம் என்றால் அந்தக் காலத்தில் அதற்குத்தான் பெயர்.

3. கம்பும் சோளமும் ராகியும் நெல்லும் பயிரிடுதல் போன்ற... என்று இருக்க வேண்டும். நெல்லிலே சேரவேண்டிய உம், பயிரிடுதலிலே சேர்ந்திருப்பது தவறு.

4. பர்ப்பாடகம் என்பது ஒரு சிறு பூண்டு; உப்பு அன்று.

5. பாரத யுத்தம் பதினெட்டே நாள் நடந்திருக்கும்போது நாற்பத்தெட்டாவது நாளில் முடிந்ததென்பது எப்படி?

6. சங்கரபகவத்பாதாள் என்பது பேச்சுவழக்கு; சங்கரபகவத்பாதர்கள் என்று சொல்லவேண்டும். பிராமணர்கள் என்பதைப் பிராமணாள் என்றும், பிள்ளையவர்கள் என்பதைப் பிள்ளைவாள் என்றும் எழுதுவது இந்தப் பிழைக்கு இனம்.

7. போராபுதூர் இலங்கையைச் சார்ந்ததன்று; ஜாவாவில் உள்ளது.

8. புகழேந்தி பாடியது நள வெண்பா; நைடதம் அன்று. அதைப் பாடியவர் அதிவீரராம பாண்டியர்.

9. அளகேசன் என்பது அழகேசன் என்பதன் தவறான உருவம் அன்று. அளகா ஈசன் என்னும் இரண்டும் சேர்ந்து அளகேசன் என்று ஆயின. குபேரனுக்குப் பெயர். அளகாபுரிக்கு ஈசன் என்பது பொருள். "அளகேசன் நிகராக அம்பொன்மிக வைத்த பேரும்" என்பது தாளமானவர் வாக்கு.

10. சிவபெருமானுக்கு ஐந்து முகங்கள் உண்டு. அந்த ஐந்து முகங்களாலும் இருபத்தெட்டு ஆகமங்களையும் திருவாய் மலர்ந்தருளியதாகப் புராணம் கூறும்.

11. எந்த இடத்திலும் சூரியோதயத்தையும் சூரியாஸ்தமனத்தையும் ஒரே சமயத்தில் பார்க்க முடியாது. காலையில் சூரியோதயத்தையும் மாலையில் சூரியாஸ்தமனத்தையும் கன்யாகுமரியில் நன்றாகப் பார்க்கலாம். ஏனென்றால், கரையிலுள்ள மற்ற ஊர்களில், கிழக்கு அல்லது மேற்கு ஒரு திசையில் மாத்திரம் கடல் இருக்கும். கன்யாகுமரியில் கிழக்கு, தெற்கு, மேற்கு மூன்று திசைகளிலும் கடல் இருப்பதால் சூரியோதயம் அஸ்தமனம் இரண்டும் அங்கே தெரிகின்றன.

12. அரசு, அமைச்சு என்னும் இரண்டு சொற்களும் பொருளால் மனிதர்களைக் குறித்தாலும், சொல்லளவில் அஃறிணை. ஆகவே, பாழாக்கி வந்தன...என்று முடியவேண்டும்.

13. திருவள்ளுவர் அறம் பொருள் இன்பம் என்ற மூன்றுக்கும் மூன்று பால்கள் வகுத்துப் பாடியிருக்கிறார். வீட்டைப்பற்றி அவர் பாடவில்லை. இதை உரையின் ஆரம்பத்தில் பரிமேலழகரே எடுத்துக் காட்டியிருக்கிறார்.

ஆக்ஸ்போர்டு

புரொபஸர் டபிள்யூ. ஏ. பாண்டின்

****

உலகம் விஞ்ஞானத்திலும் கைத்தொழிலிலும் முன்னேறி வருகிறது. அந்தத் துறைகளில் புதிய புதிய ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. அதற்கு உதவியாக இருப்பவை அங்கங்கே உள்ள சர்வகலாசாலைகள். ஒவ்வொரு சர்வகலாசாலையின் சரித்திரத்திலும் விசேஷ நிகழ்ச்சிகள் உண்டு; தனித்தனிப் பெருமை உண்டு. உலகத்துச் சர்வகலாசாலைகளைப் பற்றிய கட்டுரைகள் தொடர்ந்து வெளியாகும். முதலில் இங்கிலாந்தின் பழம் பெரும் சர்வகலாசாலையாகிய ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடியைப் பற்றிய செய்திகளைக் கொண்ட இதை வெளியிடுகிறோம்.

****

ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடி, இங்கிலீஷ்காரர்கள் உயர்வாக எண்ணும் மரபுக்கும் சுதந்தரத்துக்கும் அறிகுறியாக நிற்கிறது. பிரிட்டிஷ் பிரதம மந்திரிகளில் பாதிக்கு மேற்பட்டவர்கள் ஆக்ஸ்போர்டில் பயின்றவர்கள். உலகத்தின் பழைய சர்வகலாசாலைகளுள் இன்னும் நடந்துகொண்டிருப்பவற்றுள் ஒன்று அது. சுதந்தரம், மானியங்கள், பழைய கட்டிடங்கள் இவற்றை இழக்காமல் மத்திய காலத்தையும் கடந்து நிலவுகிறது. 12-ஆம் நூற்றாண்டில் புதிய அறிவுக் கிளர்ச்சி உண்டாயிற்று. அப்போது ஆக்ஸ்போர்டு உதயமாயிற்று. ஆக்ஸ்போர்டை எந்தத் தனி மனிதனும் ஏற்படுத்தவில்லை. ஆசிரியர் கூட்டத்தினரின் முயற்சியால், தானே அரும்பி மலர்ந்தது. பிறகு சமயத் தலைவர்களும் அரசர்களும் அதற்கு ஆதரவளிக்கலானார்கள். அது எப்போதும் சுதந்தரமாகத் தன் காரியத்தைத் தானே நிர்வகித்துக்கொண்டு வருகிறது. பொதுமக்களுக்குரிய ஸ்தாபனந்தான் அது; ஆயினும் அது அரசாங்கத்தைச் சேர்ந்தது அன்று.

மத்தியகாலத்தில் அதைச் சர்ச்சைச் சார்ந்த நிலையமாகவே எண்ணியிருந்தார்கள். சர்ச்சின் நடைமுறைகளை நடத்தவும் ஆளவும் வல்ல சமய சாஸ்திர நிபுணர்களை உண்டாக்குவதே அதன் முக்கிய வேலை. சமயம், சாஸ்திரம், தத்துவ நூல், இலக்கியம், சரித்திரம் கலைகளையே ஆக்ஸ்போர்டு கற்பித்து வந்தது. 13-ஆம் நூற்றாண்டிலிருந்து அரிஸ்டாடலின் தத்துவ நெறியைக் கற்பிப்பதில் சிறந்த நிலையமாக இருந்தது.

ஆக்ஸ்போர்டின் சரித்திரத்தில் மூன்றுகாலப் பகுதிகளை வகுத்துச் சொல்லலாம். முதற்பகுதி 13, 14-ஆம் நூற்றாண்டுகள். அப்போது ஆசிரியர்கள் அரிஸ்டாடிலின்

காப்பிரைட்: பிரிட்டிஷ் இன்பர்மேஷன் ஸெர்விஸ், ஈஸ்டெர்ன் ஹௌஸ், மான்ஸிங் ரோடு, புது டில்லி.

தத்துவங்களை விளக்குவதில் ஈடுபட்டிருந்தார்கள்.

இரண்டாவது பகுதி 17-ஆம் நூற்றாண்டாகும். மறுமலர்ச்சியின் வேகம் அந்தக் காலத்தில் நன்றாக உறைத்தது. 18-ஆம் நூற்றாண்டிலும் அதன் உறைப்புக் குறையவில்லை. 19-ஆம் நூற்றாண்டிலிருந்து மூன்றாவது பகுதி ஆரம்பமாயிற்று. இந்தப் பகுதி நம் காலம் வரையிலும் இருக்கிறதென்றே சொல்லவேண்டும். இந்தப் பகுதியில் சமயத் துறையிலும் அறிவுத் துறையிலும் புத்துயிர் உண்டாயிற்று; சர்வகலாசாலைச் சீர்திருத்தம் தோன்றியது; புதிய பாடங்களும் கல்வி முறைகளும் புகுந்தன.

இப்போது உள்ள ஆக்ஸ்போர்டில் காலேஜ் முறை விசேஷமாக இருக்கிறது. மற்ற நவீன யூனிவர்ஸிடிகளோடு ஒப்பு நோக்கினால் இந்த முறையின் சிறப்புத் தெரியவரும். காலேஜ்களில் மாணுக்கர்கள் வாழ்கிறார்கள்; ஆசிரியர்களும் நிர்வாகம் செய்பவர்களும் காலேஜிலிருந்தே வருகிறார்கள். வைஸ் சான்ஸலரே யூனிவர்ஸிடியின் நிர்வாகத் தலைவர். யூனிவர்ஸிடி காலேஜ், பாலியல் காலேஜ், மெர்டன் காலேஜ் என்னும் மூன்றும் இங்குள்ள பழைய கல்லூரிகள். இவற்றின் தலைவர்களே மாறி மாறி வைஸ் சான்ஸலர் பதவியை வகிக்கிறார்கள். இந்த மூன்று கல்லூரிகளும் 13-ஆம் நூற்றாண்டில் தோன்றியவை. மற்றவை பின்பே ஏற்பட்டன.

மத்திய காலத்தில் காலேஜ்களுக்கு இன்றுள்ள சிறப்பு இருக்கவில்லை. பட்டம் பெற்றவர்களும் மாணுக்கர்களும் காலேஜின் அங்கத்தினர்களாக இருக்கவில்லை. நகரத்தில் அங்கங்கே உள்ள வீடுகளில் வசித்தார்கள். யூனிவர்ஸிடிக்கு வெகு காலம் வரையில் சொத்தே இல்லை; சொந்தக் கட்டிடங்களும் இருக்கவில்லை. பிரசங்கம் நடைபெறவும், யூனிவர்ஸிடி வேலைகள் நடைபெறவும் சர்ச்சுகளையும் வாடகை இடங்களையும் உபயோகித்துக் கொண்டார்கள்.

முதல் முதலில் காலேஜ்கள், பட்டம் பெற்றவர்களுக்கு விசேஷக் கல்விப் பயிற்சி வழங்க ஏற்பட்டன. சில பேர்களே அந்தப் பயிற்சியைப் பெற்றார்கள். அவர்களை, 'பெல்லோக்கள்' (Fellows) என்று அழைத்தார்கள். அவர்களுக்குச் சமயசாஸ்திரமாவது தத்துவ நூலாவது சொல்லித் தந்தார்கள். இந்தமாதிரி காலேஜ் ஒன்றே ஒன்றுதான் இப்போது இருக்கிறது. அதற்கு 'ஆல் ஸோல்ஸ் காலேஜ்' என்று பெயர். அதில் முன்பே பட்டம் பெற்றவர்கள் மட்டும் பயிற்சி பெறுகிறார்கள்.

16-ஆம் நூற்றாண்டில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டது. பட்டம் பெறுவதற்காகப் படிக்கும் யாவரும் ஏதாவது ஒரு காலேஜின் அங்கத்தினராக வேண்டும் என்ற நிபந்தனை ஏற்பட்டது. இப்போது ஆக்ஸ்போர்டில் 23 காலேஜ்கள் உள்ளன. ஒவ்வொன்றிலும் 100 முதல் 200 வரையில் மாணுக்கர்கள் படிக்கிறார்கள். பெண்களுக்கென்று 4 காலேஜ்கள் இருக்கின்றன. ஆக்ஸ்போர்டில் செலவு அதிகந்தான். ஆனால் மாணுக்கர்களுக்குப் பல வகையில் உபகாரச் சம்பளங்கள் கிடைக்கின்றன. பாதிப் பேருக்கு மேல் ஏதாவது உபகாரச் சம்பளம் பெறுகிறார்கள். காலேஜ்களிலிருந்தும் அரசாங்கத்திலிருந்தும் நகரசபைகளிலிருந்தும் வேறு பொது ஸ்தாபனங்களிலிருந்தும் இந்த உபகாரச் சம்பளம் கிடைக்கிறது.

ஆக்ஸ்போர்டின் மற்ருெரு விசேஷம், அங்கே பாடம் சொல்லும் முறை. காலத்துக்குக் காலம் கல்விப் பயிற்சி முறை வேறுபடுகின்றது. மத்திய காலங்களில் பாடமாக உள்ள நூல்களைப் பற்றி ஆசிரியர்கள் பொதுவாகப் பிரசங்கம் செய்தார்கள்; விவாதங்கள் நடைபெற்றன. மத்திய காலத்தின் இறுதியிலும் அதன் பின்பும் இந்த முறைகளோடு தனி உபந்நியாசங்களும், காலேஜுக்குள் பாடம் சொல்லிக் கொடுப்பதும் சேர்ந்தன. ஒவ்வொரு மாணுக்கனும் ஒவ்வோர் ஆசிரியனது பார்வையின்கீழ் இருந்தான். அவன் பணம், ஆடை முதலியவற்றைக்கூட அவர் கவனித்து வந்தார். இதிலிருந்து இந்தக் காலத்துப் பாடஞ் சொல்லும் முறை எழுந்தது. ஒவ்வொரு மாணுக்கனும் தன் ஆசிரியரிடம் வாரத்துக்கு ஒரு முறையோ இரு முறையோ போவான். திட்டப்படி சில புத்தகங்களைப் படித்துவிட்டு ஒரு கட்டுரையை எழுதிக் கொண்டு போய்க் காட்டுவான். பிரசங்கங்களும் கேட்பான். சொல்லிக் கொடுத்த பாடத்துக்கு உதவியாக அவை இருக்கும். பாடம் சொல்லும் முறை ஆசிரியருக்குச் சிரமமானதுதான். ஆனுலும் ஒவ்வொரு மாணுக்கனையும் தனித் தனியே கவனிக்கும் நன்மை இதில் உண்டு. தானே தன் வேலைகளைக் கவனித்துக்கொள்ளும்படி யிருப்பதால் மாணுக்கன் தானே முயன்று திட்டமிட்டு ஒழுங்காக வேலை செய்யும் பழக்கத்தைப் பெறுகிருன். பிரசங்கங்களைக் காட்டிலும் புத்தகசாலைகள் முக்கியமாக இருக்கின்றன. ஒவ்வொரு காலேஜிலும் தனியே புத்தகசாலை இருக்கிறது. அதில் மிகப் பழங் காலத்துக் கையெழுத்துப் பிரதிகள் முதல் இந்தக் காலத்தில் அச்சிட்ட பாடப் புத்தகங்கள் வரையில் ஏராளமான நூல்கள் இருக்கின்றன. 17 - ஆம் நூற்ருண்டில் நிறுவப்பெற்ற பாட்லீயன் புத்தகசாலை வேறு இருக்கிறது. அது உலகத்திலுள்ள பெரிய நூல் நிலையங்களில் ஒன்று.

ஆக்ஸ்போர்டு தன்னைத் தானே நிர்வகித்துக் கொள்கிறது. மத்திய காலத்தில் சான்ஸலரும் இரண்டு பிராக்டர்களும் நிர்வாகம் செய்தார்கள். அதன்பின் யூனிவர்ஸிடிக்கு வெளியே வசிக்கும் பெரிய மனிதர்கள் சான்ஸலராக வருகிருர்கள். ஆகவே, உண்மையில் யூனிவர்ஸிடியின் நிர்வாகத் தலைவர் வைஸ் சான்ஸலர்தான். பிராக்டர்கள் சிலரும் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரும் அடங்கிய சபை ஒன்று அவருக்குத் துணையாக இருக்கிறது. பிராக்டர்களுக்குப் பல வேலைகள் உண்டு. மாணுக்கர்களிடையே கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் நிலை நிறுத்தும் பொறுப்பு அவர்களைச் சார்ந்தது. அதற்காக அவர்கள் ஒவ்வோர் இரவும் வீதிகளில் 'ரோந்து' செய்வார்கள்.

இந்த யூனிவர்ஸிடியில் காலடைவில் எவ்வளவோ மாற்றங்கள் நேர்ந்திருக்கின்றன. புதிய பாடங்கள் வந்துள்ளன. இயற்கை விஞ்ஞானம், நவீன கால சரித்திரம், நவீன பாஷைப் பயிற்சி, பொருளாதாரம் முதலியவை சேர்ந்திருக்கின்றன. பெண்களைச் சேர்த்துக் கொள்ளத் தொடங்கினுர்கள். பழைய மரபிலும் உத்வேகத்திலும் குறையாமல் ஆக்ஸ்போர்டு விளங்கும் என்றே சொல்லவேண்டும்.

க்விஸ்

[நமக்கு மிகவும் தெரிந்த விஷயங்களில்கூடச் சில சமயம் திட்டமான விவரங்கள் ஞாபகம் இருப்பதில்லை. இதோ சில கேள்விகள்: எங்கே, உங்கள் கவனசக்தியைச் சோதித்துப் பாருங்கள். பிறகு, 96-ஆம் பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக் கொள்ளுங்கள்.]

நம் நாடு:

1. இந்தியாவுக்குள்ளேயே பெரிய ஜில்லா (அ) விசாகபட்டணம், (ஆ) மான்பூம், (இ) ஸாதாரா இந்த மூன்றில் எது?

2. இந்தியாவில் ஆட்சி புரிந்தவர்களில் ஒருவன் சிலந்திப் பூச்சிக்குக் கூட ஆஸ்பத்திரி கட்டினதாகக் கல்வெட்டு ஆதாரம் இருக்கிறது. அவன் யார்?

3. பாகிஸ்தான் உள்பட இந்தியாவிலுள்ள மொத்த (அ) கிராமங்கள் எத்தனை? (ஆ) நகரங்கள் எத்தனை?

விஞ்ஞானம்:

1. (அ) ஹார்மோனியம், (ஆ) டிராம்வே, (இ) டைப்ரைட்டர், (ஈ) தையல் மெஷின் இந்த நாலினும், பின் கண்டவர்களில் யார் யார் எது எதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்:—பிரான்ஸிஸ் ட்ரெயின், எலியாஸ் ஹவ், போகால்ட், விட்ஸ்டோன், டிபெயின்.

2. வயது வந்த மனிதன் ஒரு நிமிஷத்துக்குச் சராசரி (அ) 16 முதல் 18, (ஆ) 78 முதல் 84, (இ) 90 முதல் 100 தடவை மூச்சை இழுத்து வெளியே விடுகிறான். இந்த மூன்றில் எது சரி?

3. படத்தில் கண்டபடி இரண்டு ஆப்பிள், பந்து, ஆரஞ்சு எதையாவது, இரண்டு கயிறுகளில் ஓர் அங்குலம் இடைவெளி விட்டுக் கட்டித் தொங்கவிடுங்கள். இப்போது அந்த இடைவெளியில் வாயைக் குவித்துக் காற்றை ஊதினால் அந்த இரண்டும், (அ) ஒன்றோடு ஒன்று மோதும்; (ஆ) ஒன்றைவிட்டு ஒன்று அதிகமாக விலகும்; (இ) இருந்தபடியே இருக்கும் - இந்த மூன்றில் எது சரி?



இந்துமத தத்துவம்:

1. இணை பிரியாத இரண்டு பறவைகள் சமமான ஒரு விருட்சத்தில் அமர்ந்திருக்கின்றன. ஒன்று சுவையுள்ள அரசம் பழத்தைத் தின்கிறது. மற்றது அதைத் தின்னாமலே ஒளி வீசிக்கொண்டிருக்கிறது. இந்த உவமை நம் உபநிஷத்துக்களில் எதில் வருகிறது? இதில் குறிப்பிட்ட பறவைகள் எவை?

2. கடோபநிஷத்தில் வரும் நசிகேதஸ் யமலோகத்துக்குச் சென்று யமனிடம் மூன்று வரம் பெற்றான். இந்தக் கதை அநேகமாய்

எல்லாருக்கும் தெரிந்திருக்கும். யமன் நசிகேதனைக் கண்டவுடன் பணிந்ததில் ஒரு சூட்சமம் இருக்கிறது. அது என்ன?

போது:

1. நேபாள மகாராஜாவுக்கும் மகாராஜாதிராஜாவுக்கும் என்ன வித்தியாசம்?

2. தமிழ் நாட்டில் (அ) குறுவை நெல், (ஆ) மிளகாய், (இ) கேழ்வரகு இந்த மூன்றுக்கும் உழவு, விதைப்பு, அறுவடைக் காலங்கள் எவை?

3. பிரளயம் வந்தபோது கடவுளின் எச்சரிக்கையால் நோவா என்பவன் ஒரு படகில் ஏறிப் பல ஜீவப்பிராணிகளுடன் தப்பியதாகப் பைபிளில் ஒரு கதை உண்டு. இதே போல நம் பாரத பாகவதங்களிலும் ஒரு கதை இருக்கிறது. அதில் இப்படித் தப்பியவர் யார்?

தப்பு விடை:

பின்கண்ட கேள்விகளுக்குச் சரியான விடை ஒன்றும் தப்பான விடை ஒன்றும் இருக்கின்றன. தப்பான விடை எது?

1. அமெரிக்கக் கொடியில் எத்தனை நட்சத்திரங்கள் இருக்கின்றன?—64; 48.

2. இருபதாம் நூற்றாண்டின் முதல் தேதி எது?— 1-1-1900; 1-1-1901.

3. சூரியன், சந்திரன் இந்த இரண்டில் எது பூமிக்கு அருகில் இருக்கிறது?—சந்திரன்; சூரியன்.

4. அரை டஜன் டஜனும் ஆறு டஜன் டஜனும் சமமா, இல்லையா?—சமம்; இல்லை.

யுக்தி:

சென்னையிலிருந்து விழுப்புரம் வரை ஒரு ரெயில் வண்டியும் ஒரு விமானமும் ஒரே சமயத்தில் புறப்பட்டு நிற்காமல் போகின்றன. ரெயில் பாதைக்கு நேர்மேலே 5000 அடி உயரத்தில் ரெயில் வேகத்திலேயே விமானம் பறந்து செல்கிறது. இரண்டும் ஒரே சமயத்தில் போய்ச் சேருமா; இல்லையா? ஒரே தூரந்தான் பிரயாணம் செய்யுமா? ஒன்றைவிட ஒன்று அதிகமா?

டெலிபோன் பேச்சு

"ஹல்லோ!"
"ஹல்லோ!"
"யாரது, தம்புவா?"
"ஆமாம். தம்புதான்."
"தம்புமாதிரி தோன்றவில்லையே?"
"தம்புவேதான், ஐயா!"
"நிச்சயமாகவா?"
"நிச்சயமாகத்தான்."

"சரி, தம்பு! மணி பேசுகிறேன். ஓர் ஐம்பது ரூபாய் கடன் தர முடியுமா? ஒரு வாரத்தில் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்."

"சரிதான். தம்பு வந்ததும் இதைக் கட்டாயம் அவனிடம் தெரிவிக்கிறேன்."

புராண வரலாறும் விஞ்ஞான ஆராய்ச்சியும் ஒரே விதமாய் ஒப்புக்கொள்வது இந்த விஷயம்.

உலகப் பிரளயம்

★

சுமார் பன்னிரண்டு கோடி வருஷங்களுக்கு முந்திய கதை. பதினான்கு மநுக்களில் ஏழாவது மநுவாகிய வைவஸ்வத மநு ஒரு நாள் சமுத்திரத்தில் சந்தியாவந்தனம் செய்துகொண்டிருந்தார். சூரியனுக்கு அர்க்கியம் விடுவதற்காக உள்ளங் கையில் தண்ணீரை எடுத்தார். அந்தத் தண்ணீரில் குட்டித் திமிங்கிலம் ஒன்றைக் கண்டு அவர் திடுக்கிட்டார். திமிங்கிலம் அவரைப் பார்த்து, "மநுவே! எனக்கு அடைக்கலம் கொடுங்கள். எங்கள் இனத்தில் எளியோரை வலியோர் விழுங்கிப் பிழைப்பது வழக்கமாக இருக்கிறது. இந்தப் பரந்த சமுத்திரத்தில் நான் இருக்கப் பத்திரமான இடம் கிடையாது. இந்தச் சமயத்தில் என்னை நீங்கள் காப்பாற்றிவிட்டால் பிற்காலத்தில் உங்களுக்கு நான் உபகாரம் செய்வேன்" என்றது.

திமிங்கிலத்தின் வேண்டுகோளின்படி மநு அதைக் கொண்டு போய் ஒரு சிறிய கிணற்றில் விட்டார். கொஞ்ச நாளைக்கெல்லாம் திமிங்கிலத்துக்குக் கிணறு போதவில்லை. அதனால் அதைக் குளத்தில் எடுத்துவிட்டார். பிறகு அந்தக் குளமும் போதாமல் திமிங்கிலம் பெரிதாக வளர்ந்துவிட்டது; அதனால் அதை ஒரு பெரிய ஏரிக்கு மாற்றினார். அந்த ஏரியும் போதவில்லையாம்; அதன் பிறகு நதிக்கு மாற்றினார். இப்போது திமிங்கிலம் நன்றாக வளர்ந்துவிட்டது. அது மநுவைக் கூப்பிட்டு, "இனிமேல் எனக்குப் பயமில்லை. என்னைச் சமுத்திரத்துக்கே அனுப்பிவிடு. எனக்கு இங்கே இடம் போதாது. நீ செய்த உபகாரத்தை மறக்கமாட்டேன். கொஞ்ச காலத்தில் பிரளயம் வரப் போகிறது. அப்போது நான் உன்னைக் காப்பாற்றி உலகத்துக்கே சக்கரவர்த்தியாகும்படி செய்வேன்" என்று சொல்லிவிட்டுச் சமுத்திரத்தில் மறைந்தது.

வெகு நாளைக்குப் பின் அந்தத் திமிங்கிலம் மநுவைக் கண்டு, "பிரளயம் சமீபித்துவிட்டது; நீ ஒரு படகைத் தயார் செய்து அதில் உட்கார்ந்துகொண்டு பிரளயம் தொடங்குவதற்கு முன் மேரு மலைக்குப் போய்விட வேண்டும். தயாராக இரு" என்று எச்சரித்தது. மநு அப்படியே ஒரு பெரிய படகைத் தயாரித்து அதற்குள் அவசியமான எல்லாப் பொருள்களையும் சேர்த்து வைத்துக்கொண்டார். நீருண்ட மேகங்கள் ஆகாயத்தை மறைத்தன. பூமி நடுங்கியது. வடவைத் தீ திக்கென்று எரிந்தது. அது எல்லாச் சமுத்திரங்களையும் கலக்கியது. குல

காப்பிரைட்: கர்மவீர (கன்னடம்), பெங்களூர்.

பர்வதங்கள் நடுங்கின. சூரியன் இருக்கிற இடமே தெரியவில்லை. எரி நட்சத்திரங்கள் ஜொலித்தன; அவை பல இடங்களிலும் சிதறின. சமுத்திர நீர் மட்டம் உயர்ந்து மலைகளெல்லாம் முழுகிவிட்டன. எல்லா ஜீவராசியும் இந்த உற்பாதங்களின் நடுவில் அழிந்து கொண்டிருக்கும்போது திமிங்கிலம் வைவஸ்வத மநுவின் படகை இழுத்துக்கொண்டு போய் மேரு மலைச் சிகரத்தில் வைத்துக் காப்பாற்றியது. அப்போது உலகத்தின் மற்றப் பாகங்களி லெல்லாம் பயங்கரமான சுழல் காற்று அடித்தது. இரவு பகல் விடாமல் மழை பெய்தது. பிரளயம் ஓய்ந்த பிறகு வைவஸ்வத மநு க்ஷேமமாகத் தம் பழைய இருப்பிடத்துக்கு வந்து சேர்ந்தார். தாம் சேமித்து வைத்திருந்த எல்லாத் தானியங்களையும் திரும்பவும் பயிர் செய்தார். பிறகு கங்கைக் கரையில் தவம் செய்தார். அதன் பலனாக ஒரு பெண் கிடைத்தாள். அவளை மணந்து மனிதர்களைச் சிருஷ்டித்தார்.

இந்தக் கதை இந்தியப் புராணங்களில் மட்டுமல்ல; பைபிள் போன்ற பிற மத நூல்களிலும் இருக்கிறது. மத்தியதரைக் கடலில் இது போன்ற பிரளயம் நிகழ்ந்ததற்கு அறிகுறிகள் பல நிதரிசனமாக இருக்கின்றன; ஆனாலும் பூமி முழுவதும் பிரளயத்தின் கோபாவேசத்துக்கு இலக்காகிப் பல ஆயிர வருஷங்கள் கடந்துவிட்டன என்பதைச் சமீப காலத்தில் ஆதாரங்களுடன் நிரூபித்திருக்கிறார்கள்; இது சரித்திராசிரியர்கள், ஆராய்ச்சியாளர், உயிர் நூல் சாஸ்திரிகள் எல்லோரும் ஒருமுகமாக ஒப்புக்கொண்ட விஷயம்.

சென்ற பிரளயத்தில் சமுத்திர மட்டத்திலிருந்து பல ஆயிர அடிகள் உயரத்துக்குத் தண்ணீர் ஏறியிருப்பதாகத் தெரிகிறது. மிகவும் உயரமாகத் தண்ணீர் ஏறிய காலத்தில் அடியில் தங்கிய மை போன்ற வண்டல்மண்ணின் குவியல் பல இடங்களில் கிடைக்கிறது. தென் அமெரிக்காவைச் சேர்ந்த பொலீவியா முதலிய பிரதேசங்களில் 13,000 அடி உயரத்துக்குச் சேறு நிரம்பிய வட்டத்தில் 'தியாஹ்வாங்கம்' என்னும் புராதன நகரம் அமிழ்ந்திருந்தது. அங்கே அப்படிச் சேறு தங்க வேறு காரணம் ஒன்றும் இல்லை.

எச். எஸ். பெல்லமி என்ற பிரிட்டிஷ்காரர் வேறு வேறு தேசங்களில் பிரசுரமாகிய 500 பிரளய விவரங்களை ஒப்பிட்டுப் பார்த்தபோது, எல்லாத் தேசங்களுக்கும் பொதுவாகச் சில பிரளய லட்சணங்கள் தெரிந்தன. எதிர்பாராத அந்த விபரீத விளைவு, அதன் எல்லை, பூகம்பம், தூமகேதுக்களின் வீழ்ச்சி, பெருமழை, வெள்ளப் பெருக்கம் இவற்றைப் பற்றி எல்லாக் கதைகளிலும் ஒரே மாதிரி வர்ணித்திருந்தது.

இதைப் பார்க்கும்போது பெரிய பிரளயம் உண்மையில் சில ஆயிர வருஷங்களுக்கு முன் நேர்ந்ததென்றே தெரிகிறது. ஹியான்ஸ் ஹோர்பிக் என்னும் ஆஸ்திரிய வான சாஸ்திரி, பிரளயத்தின் முன் பின் இருந்திருக்கவேண்டிய நிலைமையை நன்றாக எடுத்துக் காட்டியிருக்கிறார்.

இப்போது இருக்கும் நம் சந்திரன் முன்பு சுதந்தரக் கிரகமாக இருந்தது; சூரியனைமட்டும் சுற்றிக்கொண்டிருந்தது. ஆனால் விசுவ

அணுக்களின் (காஸ்மிக் பார்ட்டி கிள்ஸ்) அமுக்கத்தினுல் அதன் பாதை வட்டம் சிறுத்துக்கொண்டே வந்து, கடைசியில் அது பூமியின் ஆகர்ஷண வட்டத்தில் சிக்கிவிட்டது. இதற்கு முன்னுல் பூமியை வேருெரு சந்திரன் சுற்றிக் கொண்டிருந்தது. அந்தச் சந்திரன் அணுக்களின் அமுக்கத்தால் தன் பாதை வட்டத்திலிருந்து நீங்கிப் பூமியை நெருங்கிக்கொண்டே வந்தது. ஒரு முளையில் நீளக்கயிற்ருல் கட்டிய மாட்டை உதாரணமாகக் கொண்டால் இது புரியும். கயிறு எவ்வளவு நீளமோ அவ்வளவு தூரம் வரையில் சென்று பசு மேய்கிறது. மேய்ந்தபடியே சுற்றிச் சுற்றி வருகிறது; ஆரம்பத்தில் தூரத்திலேயே அப்படிச் சுற்றும். ஆனுல், வர வர முளையில் கயிறு சுற்றிக் கொள்ளுகிறது. இப்படிச் சுற்றிக்கொண்டேயிருந்தால் சுற்றும் வட்டப் பாதையும் கொஞ்சங் கொஞ்சமாக நெருங்கிக்கொண்டுதானே வரும்? முதல் சந்திரனுக்கு இந்தக் கதிதான் நேர்ந்தது. கடைசியில் சுற்ற இடம் இல்லாமல் அந்தச் சந்திரன் பூமியில் வந்து மோதிக்கொண்டது.

அப்போதுதான் யுகப்பிரளயம் ஏற்பட்டது. பூமியின் ஆகர்ஷண சக்தியின் வேகத்தால் பழைய சந்திரன் மோதிச் சுக்கு நூருய் நொறுங்கிவிட்டது. அப்போது ஏற்பட்ட உற்பாதம் சொல்லிமுடியாது. வலுவான ஆகர்ஷணசக்தியால் சமுத்திரத்தின் நீர் என்றும் இல்லாதபடி பொங்கிப் பெருகிப் பூமத்திய ரேகை வரைக்கும் பரவியது.

எங்கும் ஒரே வெள்ளக்காடு; சந்திரனுடைய துகள்கள் ஆகாயத்திலெல்லாம் பரவிச் சூரியனை மறைத்துவிட்டன. இருள் சூழ்ந்தது. இரவும் பகலும் எரி நட்சத்திரங்கள் மழைபோல் பெய்தன. பூகம்பத்தால் பூமியின் மேல்பாகம் தத்தளித்தது. அதே சமயம் பூமியைச் சுற்றி ஒரு போராட்டம் நிகழ்ந்தது. சுழல் காற்றுப் பொருமியது. விடாமல் மழை பெய்தது.

இப்போதைய சந்திரனுக்கும் ஒரு காலத்தில் இதே கதிதான் நேரும். அப்போது தோன்றும் புதிய பிரளயமும் பூமியை ஆட்டி வைக்கத்தான் போகிறது. ஆனுல் அது இன்ருே, நாளையோ நடக்கப் போகும் சம்பவம் அல்ல. விசுவ புருஷனுடைய கால சக்கரத்தின் சுழற்சி மிக மெதுவாகச் செல்கிறது. சில லட்ச வருஷங்கள் வரையில் இந்தக் கண்டம் வராது. அது வரைக்கும் விஞ்ஞானிகள் மட்டும் மனித வர்க்கத்தை நாசமாக்காமல் விட்டு வைத்திருந்தால், அதிலிருந்தும் தப்ப வழி கிடைத்தாலும் கிடைக்கலாம்.

ஞாபக முடிச்சு

"என்னப்பா, அங்கவஸ்திரத்தில் ஏதோ முடிச்சுப் போட்டுக்கொண்டிருக்கிருயே, என்ன சங்கதி?"

"அதுவா? என் பெண்டாட்டி போட்ட முடிச்சு; அவள் எழுதின கடுதாசியை மறக்காமல் தபாலில் போடத்தான்."

"போட்டுவிட்டாயா?"

"இல்லே; அவள் கடுதாசியைக் கொடுக்க மறந்து விட்டாள்."

'பெண்களுக்கழகு காட்டில் பிரசவித்தல்' என்று நம்பு பவர் இந்தச் சாதியார்.

நாகர்கள்

நளினீகுமார் பத்ர

அஸ்ஸாமிலுள்ள நாகர்களுக்குள் கலப்பில்லாத சாதியார் 'ரேங்கமா' என்பவர்கள். 1941-ஆம் வருஷ ஜனசங்கியைக் கணக்குப்படி இவர்கள் மொத்தம் 4968 பேர். இவர்களில் கிழக்கத்தியார், மேற்கத்தியார் என்று இரண்டு பிரிவு உண்டு. 25 வருஷத்துக்கு முன்னே தான் இவர்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு அடங்கினார்கள். அதனால் இவர்கள் பழக்கவழக்கம் அப்படியே இருக்கிறது.

இவர்கள் நிறம் பொதுவாகக் கறுப்பு; தலைமயிர் செம்பட்டை. நீக்ரோக்களைப்போல் தலைமயிர் சுருண்டு கறுப்பாகவும் இவர்களில் பல பேர் இருக்கிறார்கள். லேபோரி என்ற இடத்திலுள்ள கிழக்கத்தி ரேங்கமாக்கள் பகலில் மட்டும் கோவணம் கட்டிக்கொண் டிருப்பார்கள். மற்ற இடங்களில் இருப்பவர்கள் வெளியூருக்குப் போகும்போதும் குளிர் காலத்திலும் மட்டுமே இப்படி உடுப்பது வழக்கம்.

இவர்கள் ஓர் இடத்தில் மொத்தமாகக் குடியேறும்போது பேய் பிசாசுகளை விரட்ட, கூடவே ஒரு நாயும், பலியிட ஒரு கோழியும், பிறந்த ஊரிலிருந்து நீரும் கொண்டு வருவார்கள். அந்த நீரை ஊராருக்குத் தெரியாமல் ரகசியமாகக் கொண்டுவர வேண்டும்; இல்லா



மணம் ஆகாத வாலிபர் வாழும் மோராங் விடுதி

விட்டால் ஊரார், 'ஐயையோ! அதோடு எங்கள் ஊர் மகிமையே போய்விடும்' என்று அவர்களைத் தடுத்துவிடுவார்கள். மொத்தம் 12 கிராமங்களில் இந்தச் சாதியார் குடியேறியிருக்கிறார்கள். இப்படிக் குடியேறும்போது கோழியோடு ஆடு மாடுகளையும் பலியிடுவதுண்டு.

இவர்களில் வாலிபர்கள் மணம் ஆகிற வரைக்கும் தனியாக வசிப்பது வழக்கம். அவர்கள் இருக்கும் விடுதிக்கு 'மோராங்' என்று பெயர். அங்கே அவர்கள் சாதிப் பெரியவர்கள் வந்து தங்கள் குலப் பெருமையைப் பற்றிக் கதை

காப்பிரைட்: ப்ரபாஸி (வங்காளி: மே '49), கல்கத்தா.

கதையாகச் சொல்லி வாலிபர்களுக்கு வீர உணர்ச்சி ஊட்டுவார்கள். ஆனால் சமீப காலத்தில் பாதிரிகளின் பிரசாரத்தால் வாலிபர்களின் மனம் மாறிவிட்டது. இந்தப் பழைய வழக்கத்தை இவர்கள் மதிப்பதில்லை.

அரிசிதான் இவர்கள் பிரதான உணவு. மலையவ்வளவு சோற்றைக் குவித்துக்கொண்டு இவர்கள் சாப்பிடுவதைப் பார்த்தால் அசந்து விடுவோம். கிழக்கத்தி ரேங்கமாக்கள் சாப்பிடும்போது எலும்புத் துண்டைக் கரண்டியாக உபயோகிப்பார்கள். எந்த மாமிசமும் இவர்களுக்கு விலக்கில்லை. செத்த தவளையை உலரவைத்துச் சாப்பிடுவதென்றால் இவர்களுக்குப் பரம திருப்தி. கொஞ்சமாகத்தான் ஜலம் குடிப்பார்கள். இவர்களில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து வயல்களில் வேலை செய்வார்கள். சமூகத்தில் இருவருக்கும் சமமான அந்தஸ்து உண்டு. ஒவ்வொரு கிராமத்திலும் இவர்களுக்கென்று தனிப் பஞ்சாயத்து இருக்கிறது. அதில் மாறி மாறி ஒவ்வொருவரும் தலைவராக வருவார்கள். தலைவனைக் 'ககுகு' என்பார்கள். இந்தப் பதவி வகிப்பதென்றால் லேசல்ல; எல்லாப் பொறுப்பும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏதாவது தவறு செய்துவிட்டால் உடனே மற்றவர்கள் அவனைப் பதவியைவிட்டு நீக்கி, அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த எவனுக்கும் பின்னால் அந்தப் பதவி கிடைக்காதபடி செய்துவிடுவார்கள்.

இவர்கள் சம்பிரதாயத்தில் குருமார்களுக்கு இடமில்லை. சடங்குகளின்போது மந்திரமும் கிடையாது. 'ஸேங்கியூன்' என்ற குட்டித் தெய்வங்களை இவர்கள் வழிபடுகிறார்கள். அவைகளில் சக்தி உள்ள



நாகர் தம்பதி

தெய்வம் ஒன்றைச் சிருஷ்டிகர்த்தாவான தந்தையாகவும் பூமியைத் தாயாகவும் வழிபடுகிறார்கள்.

கிழக்கத்தி ரேங்கமாக்கள், 'செத்ததும் ஆத்மா ராஜாளியாக மாறி மேற்கே போய்விடும். அங்கே உள்ள மரணலோகத்தில் நாலைந்து தடவை பிறந்து இறந்த பிறகு மறுபடியும் பிறக்காது' என்று நம்புகிறார்கள். ரேங்கமாக்களுக்குப் பயிர்த்தொழில்தான் முக்கியம். அறுவடையின்போது, இவர்கள் விழாக்கொண்டாடுவது வழக்கம். மேற்கத்தி ரேங்கமாக்களில் சிலர் ஏழு வருஷத்துக்கு ஒரு முறை இப்படி ஒரு பெரிய விழாக் கொண்டாடுவார்கள்.

இவர்களில் கர்ப்பிணிகள், வயலில் வேலை செய்துகொண்டிருக்கும்போது பிரசவ நோய் எடுத்தால், அருகிலுள்ள காட்டில் போய்ப் பிரசவித்ததும் அப்படியே வீட்டுக்குப் புறப்பட்டுப் போவார்கள். 'இந்தமாதிரி பிரசவித்தால்தான் விசேஷம். குடும்பத்துக்கும்

நல்லது' என்று இவர்கள் நம்புகிறார்கள்.

இவர்களில் விவாகம் ஆகிற வரையில் எவரும் தனி வீடு கட்டிக் கொண்டு வாழக்கூடாது. 'மோராங்' என்ற விடுதியில் தம்மைப் போன்ற வாலிபர்களுடன் வசிக்க வேண்டும். வயல்களில் வேலை செய்யும்போது ஆண்கள் பெண்களுடன் ஓரளவு பழகினாலும் ஒழுங்கு மீறி நடக்கமாட்டார்கள்.

ரேங்கமா வாலிபன் ஒருவனுக்குப் பெண் பிடித்திருந்தால் அதை அவனே பெற்றோர்களுக்குத் தெரிவிக்கவேண்டும். அதுவரை அவர்கள் ஒன்றும் செய்யமாட்டார்கள். அவன் தெரிவித்ததும் ஒரு கிழவி - அவன் பாட்டி - பெண் வீட்டாரிடம் போய் அவர்கள் சம்மதத்தை அறிந்து வருவாள். வீடு திரும்பியதும் அதற்கு அறிகுறியாக வாழை யிலையைக் கிழித்து வாயிலில் கட்டிவிடுவாள். பிறகு பெண், தன் பெற்றோர்களுடன் புறப்பட்டுப் பிள்ளை வீட்டுக்குப் போய்வருவாள். இப்படியே பிள்ளையும் தன் பெற்றோருடன் பெண் வீட்டுக்கு வந்து போவான். சில நாள் கழித்து மறுபடியும் ஒரு பசு மாடும் கொண்டு போய்க் கொடுப்பான். இந்தக் காலத்தில் அவரவர் அந்தஸ்துக்குத் தகுந்தபடி ரூ. 50 முதல் 120 வரை கொடுக்கிறார்கள். அப்போதுதான் நிச்சயதார்த்தம் ஆகும். சம்பந்திகளுக்குள் பணத்தைக் குறித்துப் பேரம் நடக்கும் போது மத்தியஸ்தர்கள் இரு தரத்தாருக்கும் பொதுவாக முடிவு செய்வார்கள். பிறகு பெண் வீட்டார், சுற்றத்தார் எல்லாரையும் அழைத்துச் சம்பந்திகளோடு சேர்ந்து சாப்பிடுவது வழக்கம். அது ஆனதும் பிள்ளை வீட்டார், நன்றாகக் குடித்துவிட்டுப் புரளுவார்கள். அப்போது அவர்கள் கொண்டு வந்திருக்கும் சில பொருள்களைப் பெண் வீட்டார் பிடுங்கிக்கொள்வது வழக்கம். அதைத் திருப்பித் தரமாட்டார்கள். அதற்குப் பிறகு இரண்டு மூன்று வருஷம் கழித்துக் கூட விவாகம் நடக்கும்.

பிறகு இருவரும் தனியாகக் குடித்தனம் நடத்தவேண்டும். அப்போது பெண்ணோடு அவளுக்கு ஈடான ஒரு தோழியும், பிள்ளையோடு சில தோழர்களும் போவார்கள். இரண்டு மூன்று நாள் சமைத்துப் போட்டுவிட்டுத் தோழி ஒரு மூட்டை அரிசி வாங்கிக் கொண்டு திரும்பிவிடுவாள். அந்த மூன்று நாளும் பிள்ளையும் பெண்ணும் ஒருவரை யொருவர் நெருங்கவே முடியாது. அதற்குப் பிறகுதான் முறைப்படி விவாகச் சடங்குகள் நடக்கும்.

விளம்பர யோசனை

"என் நாய் காணமல் போய்விட்டது."

"பத்திரிகையிலே அதைப்பற்றி விளம்பரம் போடுகிறதுதானே?"

"போடலாம், ஆனல் அந்தச் சனியனுக்குப் படிக்கத் தெரியாதே!"

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

இந்திய ஸினிமாப் பத்திரிகை உலகத்திலே ஒரு புரட்சி உண்டாக்கியவர் பாபுராவ். வழவழவென்ற ஆர்ட் காகிதத்தில், சுடச் சுட ஸினிமா விஷயங்களை எழுதுகிறார். 'பிலிமிண்டியா'வில் கேள்விகளுக்கு அவர் எழுதிவரும் பதில்கள் நகைச்சுவையும் விறுவிறுப்பும் மிகுந்திருக்கின்றன. ஸினிமாபற்றி மட்டுமல்ல; வேறு விஷயங்கள்பற்றியும் அருமையாகப் பதில் தருகிறார்.

கேள்வி: மகாத்மா காந்தி சொர்க்கத்தில் பல உடைகளை அணிகிறாரா? அல்லது அங்கும் ஒரே துணியைத்தான் கட்டிக்கொண்டிருக்கிறாரா?

பதில்: சொர்க்கத்தில் புண்ணியத்தையே உடுத்துக்கொள்கிறார்கள். பூலோகத்தில்தான் மனிதன் மனச்சாட்சியை மறைக்க ஆடைகளை அணிகிறான்.

* *

கே: கல்வியின்மையை அடியோடு ஒழிக்க முடியுமா?

ப: படித்த மனிதன் ஒவ்வொருவனும் வருஷத்தில் ஐந்து பேருக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்றும், இல்லாவிட்டால் ரேஷன் கார்டை இழக்க நேருமென்றும் சட்டம் செய்து நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கினால் சூரியனைக் கண்ட பனிபோல் கல்வியின்மை விரைவில் ஒழிந்துவிடும். ஒவ்வொரு வீடும் ஒரு பள்ளிக்கூடம் ஆகி, படிக்கத் தெரிந்த ஒவ்வொருவனும் ஒரு வாத்தியாரானால்தான் 35 கோடி ஜனங்களும் கல்வி யறிவு பெறுவது சாத்தியமாகும்.

* *

கே: கான் சகோதரர்களின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

ப: இறந்துபோன மனிதர்களுக்கு இறந்த காலந்தான் உண்டு. இந்த இரண்டு தீர சகோதரர்களும் 1947-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15-ஆம்தேதி இறந்துவிட்டார்களே!

* *

கே: பற்றி எரிவது போன்ற பிரச்னை இந்தக் காலத்தில் எது?

ப: வயிறாகிய தூராக் குழியில் எரியும் அக்கினியை அவிப்பது தான்.

* *

கே: நோய் என்பது என்ன?

ப: வறுமையின் விலை; போகத்துக்குத் தண்டனை.

* *

கே: குருடன் தான் காணும் கனவில் எதைப் பார்ப்பான்?

ப: குருடனுடைய உலகம் இரவும் பகலும் இல்லாத நெடுங் கனவாக இருக்கவேண்டும். பல நிற வானவில்லோ ஆசாபங்கமோ அங்கே இராது. பார்க்கிறவர்களுக்கு ஒரே நீண்ட இரவாகத் தோன்றும்; ஆனால் குருடனுக்கோ நித்தியமான வெளிச்சம் அது.

* *

கே: பேசும் வார்த்தையா, எழுதும் சொல்லா - எது உள்ளத்தில் அதிகமாகப் பதிகிறது?

காப்பிரைட்: பிலிமிண்டியா (ஆங்கிலம்: மே '49), பம்பாய்.

ப: வார்த்தைகள் அணுக்குண்டு களைப் போன்றவை; எழுதும் சொல் நெடுந் தூரம் பரவுகிறது; பல கண் காணாத இடங்களிலுள்ள உள்ளங்களை ஆக்குகிறது; அல்லது அழிக்கிறது.

* *

கே: ஆண், பெண், ஒரு தேசத்தினர் ஆகியவர்களின் வாழ்க்கையில், இறந்த காலம் நிகழ் காலம் எதிர்காலம் என்ற மூன்றிலும் எது முக்கியமானது?

ப: நிகழ்காலந்தான். இறந்த காலத்தின் அநுபவமும் நிகழ் காலத்தின் வேதனையும் எதிர் காலத்தின் அறிகுறியும் அதில் இருக்கின்றன.

* *

கே: பணக்கார லோபி ஒருவன் ஒரு நடிகையைக் காதலித்தால் அவன் என்ன செய்யவேண்டும்?

ப: லோபிகள் திரவியத்தை விரும்புவார்களே யொழியத் தேனை அன்று.

* *

கே: பாதி ராஜ்யத்தையாவது ஒரு ராஜகுமாரியையாவது உங்களுக்குக் கொடுக்க விரும்புகிறார்கள்; நீங்கள் எதை எடுத்துக்கொள்வீர்கள்?

ப: ராஜகுமாரியைத்தான்; ராஜ்யம் அவளோடு வருமே...

* *

கே: கிழவன் சிரிக்கிறான்; குழந்தையும் சிரிக்கிறது; இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?

ப: இரண்டு சிரிப்பிலும் பல் கிடையாது. ஆனால் குழந்தையின் சிரிப்பில் எதிர்காலத்தின் நறுமணம் வீசும்; கிழவன் சிரிப்பிலோ இறந்த காலத்தின் வாசனைதான் இருக்கும்.

கே: முதலைக் கண்ணீர் என்றால் என்ன?

ப: முதலையை அவமானப் படுத்த மங்கையர் உதிர்க்கும் கண்ணீர்.

* *

கே: உண்மையான அன்பு என்பது உலகத்தில் இருக்கிறதா?

ப: ஆஹா! இருக்கிறது. நாய் குழைக்கிறதே, அந்த வாலில் காணலாம்.

* *

கே: கனவு, நாடகம் - இவற்றின் இலக்கணம் என்ன?

ப: தூங்கும் நேரத்தின் நாடகமே கனவு; விழித்திருக்கும் நேரத்தின் கனவே நாடகம்.

* *

கே: தாய்ப் பாலை எதைக் கொண்டு அளப்பது?

ப: குழந்தையின் புன்னகையைக் கொண்டு.

* *

கே: இந்த உலகத்தில் பொன்னை விடச் சிறந்த பொருள் ஏதாவது இருக்கிறதா?

ப: அதைச் சம்பாதிக்கும் வழியும், பெற்ற பிறகு உபயோகப் படுத்தும் மார்க்கமும் இருக்கின்றனவே.

* *

கே: குற்றம் எப்போது பாவம் ஆகிறது?

ப: உடனடியாக மன்னிப்புக் கேட்காவிட்டால்.

* *

கே: அழும் ஆடவனுக்கும், அழும் பெண்ணுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: அழும் மனிதன் அழிக்கிறான்; அழும் பெண்மணியோ ஆக்குகிறாள்.

தெருவில் தூங்குவோர்



ஹரீஷ் குமார்
மேஹ்ரா

வீடு சுலபத்தில் கிடைக்கவில்லையே என்று தவிப்பவர் இருக்கட்டும். வீடு என்ன என்றே அறியாத மக்கள் எத்தனை ஆயிரம் பேர் நடு வீதியில் வாழ்கிறார்கள்! இது பம்பாயில் மாத்திரம் அல்ல; நம் சென்னையிலும் பிற நகரங்களிலும் நிகழும் பரிதாபக் காட்சி.

குடியிருக்க வீடு இல்லை; படுக்கப் பாய் இல்லை; இந்தச் சங்கடத்தைச் சுலபமாகச் சமாளித்துக் கொள்ளலாம் என்றுதான் முதல் நாள் நினைத்தேன். நேராக ஸ்டேஷனுக்குப் போய், பிளாட்பாரத்தில் பெஞ்சில் படுத்துத் தூங்கினேன். சற்று நேரத்துக்கெல்லாம் போலீஸ்காரர்கள் வந்து என்னை எழுப்பினார்கள். கையில் இருந்த தடியினாலும் துப்பாக்கி முனையினாலும் அவர்கள் என் மண்டையைப் பிளந்துவிடுவார்கள் போல் இருந்தது. அவர்கள் என்னைப் பலவந்தமாகவும் முரட்டுத்தனமாகவும் ஸ்டேஷனை விட்டுத் துரத்தினார்கள். நான் எங்கும் போக்கிடமின்றி இங்குமங்கும் சுற்றினேன். வழியில் ஒரு போலீஸ்காரன் என்னைத் தடுத்து நிறுத்தி, “நீ எதற்காக ஊர் சுற்றுகிறாய்? உன்னைப் பார்த்தால் சந்தேகமாக இருக்கிறது. உடனே வீடு போய்ச்சேர்; இல்லாவிட்டால் கைது செய்வேன்” என்றான். எனக்கு வீடு வாசலே இல்லை என்று சொன்னதும் அவன் வாயை மூடினான்.

மறுநாள் இரவிலிருந்து நான் பாதி ராத்திரிக்குமேல் சந்தடி செய்யாமல் தாதர் ஸ்டேஷன் பிளாட்பாரத்துக்குப் போய், பெஞ்சில் படுத்துத் தூங்கினேன். என்னைப்போல அங்கே எத்தனையோ அநாதைகள் கிடந்தார்கள். நாங்கள் அசையாமல் படுத்திருந்ததைக் கண்ட போலீஸ்காரர்கள், நாங்கள் குடிமயக்கத்தில் சுய நினைவு இல்லாமல் கிடப்பதாக எண்ணி எங்கள் பக்கமே வரவில்லை. சாப்பாட்டையே கண்ணால் காணாத நாங்கள் குடிக்கு எங்கே போவது? ஆயினும் ‘குடிகாரர்கள்’ என்ற சாக்கில் இரவில் சுகமாகத் தூங்கினோம்.

அந்த நாளில்தான் நான் மித்துநாத் என்ற பாம்பாட்டியைச் சந்தித்தேன். அவனுக்கு 35 வயது இருக்கும். பம்பாய்ப் போலீசாரைக் கண்டாலே அவனுக்கு வெறுப்பு. “சினிமாவும் தியேட்டரும் பலமாக இருக்கும் இந்தக் காலத்திலே கூட எங்கள் தொழிலுக்கு மதிப்பு இருக்கத்தான் இருக்கிறது; ஆனால் இந்தப் போலீஸ்காரர்கள் எங்களை

காப்பிரைட்: ஸவுண்ட் (ஆங்கிலம்: மார்ச் ’49) பம்பாய்.

வேடிக்கை காட்ட விடுவதில்லை. ஜனங்கள் நிறையக் கூடியதும் நாங்கள் வேடிக்கையெல்லாம் காட்டுகிறோம்; எங்கள் வேடிக்கை முடியப்போகும் சமயத்தில் நாங்கள் பணம் வசூலிக்க முடியாதபடி ஜனங்களை இந்தப் போலீஸ்காரர்கள் விரட்டி விடுகிறார்கள்" என்று அந்தப் பிடாரன் சொன்னான். தான் காட்டில் எந்த விதமான பாம்பையும் பிடித்து வசப்படுத்தும் பிரதாபங்களையும், மிகவும் பயங்கரமான விஷப் பாம்புகளோடு நடத்திய போராட்டங்களையும் அவன் ஸ்வாரஸ்யமாக வர்ணித்தான். அன்றிரவு முழுவதும் என்னை அவன் தூங்க விடவில்லை. உலகத்திலேயே நிபுணரான எந்தப் பிராணி சாஸ்திர அறிஞரும் அவனுடைய அறிவைக் கண்டு ஆச்சரியப்படவேண்டும்.

நடுவிலே அவன் ஒரு ரசமான செய்தியைச் சொன்னான். ஒரு தடவை அவன் டிக்கட்டு இல்லாமல் பிரயாணம் செய்தபோது, நடுவழியில் அவனைப் பலவந்தமாக வண்டியை விட்டு இறக்கிவிட்டார்கள். அந்த அவசரத்தில் அவன் பாம்புப் பெட்டியை வண்டியிலேயே விட்டுவிட்டான். அந்தப் பெட்டியில் ஒரு பெரிய நாகப் பாம்பு இருந்தது. அதை அவன் பிடித்துச் சில மணி நேரமே ஆகியிருந்தது. அதன் விஷப் பல்லைப் பிடுங்கக்கூட அவனுக்குப் பொழுது இல்லை.

தாதர் ஸ்டேஷனில் ஒரு நாள் காலையில் எழுந்தபோது என் சட்டைப் பையில் பெரிய ஓட்டை இருப்பதைக் கண்டேன். என்னிடம் காலணாக்கூட இல்லாததால் அந்த ஜேபடியைப்பற்றி நான் கவலைப் படவில்லை. ஆனால் பத்து நாளைக்கு அப்புறம் என் உள் சட்டைப் பையைக் கத்தரிப்பதற்காக என்னிடமிருந்த ஒரு கோட்டை இன்னொரு ஜேபடித் திருடன் வீணாக்கி விட்டதுதான் எனக்கு வருத்தமாக இருந்தது.

தாதர் ஸ்டேஷனில் இனிமேல் தூங்க முடியாது என்ற நிலை ஏற்பட்டதும் நான் மறுபடி இரவில் தெருத் தெருவாகச் சுற்றவேண்டியதாயிற்று. நடைப்பாதையிலும் வீட்டுத் தாழ்வாரங்களிலும் வேறு இடங்களிலும் ஆயிரக்கணக்கான மக்கள் படுத்திருந்தார்கள். இந்தக் காட்சி, பார்க்கப் பயங்கரமாக இருந்தது. இவர்களில் பலரும் டி. பி., குஷ்டம் முதலிய கொடிய நோய்களுக்கும் தொற்று நோய்களுக்கும் இரையானவர்கள். நகரத்தின் ஆரோக்கிய நிலைக்கே இவர்கள் கேடு விளைவிப்பவர்களாக இருந்தார்கள். சில நாளைக்கெல்லாம், தாதர் ஸ்டேஷனில் இரவில் ஒருவன் மூன்று பேரைக் கத்தியால் குத்தி ஓடிவிட்டதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்தது. அதைப் படித்ததும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அந்த மூவரில் நான் ஒருவனாக இருந்திருக்கலாம்; நல்ல வேளையாகத் தப்பினேன்.

இன்னொரு நாள் இரவு என் நண்பன் பேச்சைக் கேட்டு, நான் விக்டோரியா டெர்மினஸ் ஸ்டேஷனில் உல்லாசமான 'வெயிடிங் ரூமி'ல் ஜோராகப் படுத்துத் தூங்கினேன். டிக்கட் பரிசோதகர் வந்து என்னை எழுப்பினார். என்னிடம் டிக்கட் இல்லாமையால், மற்றவர்களோடு என்னையும் போலீஸ் காவலில் ஆபீசுக்கு அழைத்துப் போனார். ஏதாவது பணம் கொடுத்தால் எங்களை விட்டுவிடுவதாகவும், இல்லாவிட்டால் போலீஸ் 'லாக் அப்'புக்கு அனுப்புவதாகவும் சொன்

ஞர்கள். வெளியே குளிரில் நடுங்கு வதைவிடப் போலீஸ் லாக் அப்பில் இருப்பதே நல்லது என்று எண்ணி, நான் பணம் கொடுக்க மறுத்தேன். என்னைச் சிறைக்கு அனுப்ப ஏற்பாடு நடப்பதற்குள் ஓர் ஆபீஸர் வந்து விடுவித்துவிட்டார்.

பாதித் தூக்கத்தில் நான் ஒரு பார்க்குச்குப் போய் அங்கே ஒரு பெஞ்சில் படுத்துக்கொண்டேன். உங்களுக்கு வீடுவாசல் இல்லாவிட்டால் நடைப்பாதையில் தூங்குவதைவிட, திறந்த வெளியில் பெஞ்சில் படுப்பது எவ்வளவோ நல்லது. பக்கத்தில் வியாதிக்காரர்கள் இருக்கமாட்டார்கள். திறந்த வெளியில் குளிர்ந்த காற்றை அநுபவிக்கலாம். காலையில் எழுந்திருக்கும் போது பனி உங்களைத் தெப்பமாக நனைத்துவிட்டாலுங்கூட, அது எவ்வளவோ தேவலை.

வழக்கமாக ஒருவர் ஒரு பெஞ்சில் தூங்கினால் அந்தப் பெஞ்சுக்கு இன்னொருவர் வரக்கூடாது. இது பம்பாய் நடைப்பாதை வாசிகளின் சட்டம். வழக்கமாக வந்து தூங்குகிறவர் ஒரு நாளைக்கு அந்த இடத்துக்கு வராவிட்டாலுங்கூட, அதற்காக இன்னொருவர் அங்கே படுக்கக் கூடாது. அப்படிப் படுத்தால் அவர் கோரமான விபத்துக்கு ஆளாக நேரும். ஒரு நாள் என் இடத்திலே ஒரு சாமியார் படுத்திருந்தார். அது வேறொருவருடைய இடமாக இருந்திருந்தால், அவர் அந்தச் சாமியாரைக் கத்தியால் குத்திப் போட்டிருப்பார்!

இந்த நடைப்பாதை வாசிகளில் பெரும்பாலானவர்கள் பம்பாயில் நிரந்தரமாக வாழ்பவர்கள். இவர்கள் தங்கள் பெண்டு பிள்ளைகளை எங்கே விட்டு வைக்கிறார்களோ, தெரியவில்லை. நடைப்பாதையில் ஆயிரக் கணக்கானவர்களை இரவில் நான் பார்த்திருக்கிறேன்; ஆனால் இவர்களில் யாருடனும் ஒரு பெண்ணை யாவது பார்த்ததில்லை. இவர்கள் தங்கள் உறவினர்கள் வீட்டில் பெண்டு பிள்ளைகளை விட்டு வைத்திருப்பது வழக்கமாம். என்னோடு இருந்தவர்கள் பலரும் கல்யாணமாகாதவர்கள். இவர்கள் ஹோட்டலில் சாப்பிட்டார்கள். சிலர் தாங்களே சமைப்பதும் உண்டு. விக்டோரியா டர்மினஸுக்கு வெளியில் ஒருவன் சமையல் செய்து போடுவதையும், அவனைச் சுற்றிப் பலர் சுடச்சுடச் சாப்பிடுவதையும் இரவு வேளைகளில் காணலாம்.

ஒரு நாள் இரவு இவர்களில் ஒருவன், சினிமா நடிகைகளைப் பற்றிய முழுத் தகவல்களையும் சொன்னதைக் கேட்டு நான் ஆச்சரியமடைந்தேன். பத்திரிகைகளுக்குள்ளே இன்ன இன்ன சச்சரவுகள் நடக்கின்றன, இன்ன பத்திரிகைகளில் இன்ன செய்திகள் வந்திருக்கின்றன என்பதெல்லாம் அவனுக்குத் தெரியும்; ஆனால் எழுதப் படிக்கத்தான் தெரியாது! இரவில் ஊர் சுற்றும் போது ஒருவருக்கு ஒருவர் பேசியே அவனுக்கு இத்தனை விஷயங்களும் தெரிந்தன.

பம்பாயில் வீடுவாசல்கள் இல்லாமல் தவிக்கும் நாலரை லட்சம் ஜனங்களோடு நானும் சேர்ந்து, பதினைந்து நாளைக்குமேல் இப்படி என் இரவு வாழ்க்கையைக் கழித்தேன். அது பரிதாபமான துன்ப வாழ்க்கை. பெரிய ஸ்டேஷன்களின் பிளாட்பாரங்களில் இவர்களுக்கு இரவில் தூங்க இடம் கொடுத்தும், நிறையச் சிறு குடிசைகள் கட்டிக் கொடுத்தும் இவர்களுடைய துன்பத்தைப் போக்குவது அவசியம்.

ராஜா எப்படி?

ஜான் ஸ்டீபென்ஸ்

இத்தனை சுதந்தரமும் ஜன நாயகமும் இந்தக் காலத்தில் வந்துவிட்டனவே, என்ன பயன்! ராஜாவாக இருப்பவனுக்குச் சுகத்தைக் காணவில்லை.

ஒரு காலத்தில் ராஜாக்கள் ஆனந்தமாயிருந்தார்கள்; அரபிக் கதையில் வரும் கற்பனையெல்லாம் தோற்கும்படி வாழ்ந்தார்கள். வைரத்தையும் தங்கத்தையும் தராசில் போட்டுத் தங்களை நிறுத்துக் கொண்டார்கள். மற்றவர்களைப் போலவே, ராஜாக்களிலும் நல்லவர்களும் உண்டு; கெட்டவர்களும் உண்டு.

நான் இருபது வருஷத்துக்கு மேல் இந்தியாவில் வாழ்ந்திருக்கிறேன். ஒன்றிரண்டு ராஜாக்களை நேரில் கண்டிருக்கிறேன்; காணாத பல ராஜாக்களைப்பற்றிக் கதை கதையாய்க் கேள்விப்பட்டிருக்கிறேன். நான் மட்டும் யுத்தத்துக்கு முன்னே பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுதும் சுதந்தர எழுத்தாளனாக இருந்திருந்தால், எத்தனையோ கதைகள் சேர்த்திருக்கலாம். அந்தக் கதைகளைப் பதிப்பித்தால் ஒரு லைப்ரரியே நிறைந்திருக்கும். ஆனால் அவைகளை அந்தரங்கமாய்த்தான் அச்சிட்டு வைத்துக்கொள்ள முடியும்; அப்படிப்பட்டவை அநேகம் கதைகள்.

இன்று ஒவ்வொருவராக மூலைக்குப் போய்க்கோண்டிருக்கிறார்களே, இந்த ராஜாக்கள் ஒரு காலத்தில் என்ன வாழ்வு வாழ்ந்திருக்கிறார்கள்! இது 'மென் ஒன்லி' என்ற சீமைப் பத்திரிகையிலிருந்து சுருக்கியது.

பம்பாய்க்குக் கொஞ்ச தூரத்தில் ஓர் அரண்மனை. அதைச் சற்றுப் பார்ப்போம். மகா அலங்காரமான கல்யாணப் பணியாரம் மாதிரி இருக்கும் அதன் தோற்றம். ஆனால் அதைச் சூழ ஒரே பாலைவனந்தான். சிறிது காலத்துக்கு முன்னே அதில் ஒரு மனிதர் வசித்தார். தம்மைப் 'பாதி மகான், பாதிப் பேய்' என்று அவர் வர்ணித்துக் கொண்டார். அப்போதிருந்த இந்திய சர்க்கார் இந்த வர்ணனையின் முன் பாதியை ஒப்புக்கொள்ளவில்லை; பின் பாதியைப் பரிபூர்ணமாய் ஒப்புக்கொண்டது. அவர் தொலைந்தார்.

அவர் எத்தனையோ தந்திரங்கள் செய்வார். அவரிடம் ஒரு வெள்ளைக்

கார பட்லர் இருந்தான். ராஜ சமுகத்துக்குப் போகும்போதெல்லாம் அவன் மண்டியிட்டுத் தவழ்ந்து கொண்டேதான் போவான். இதற்குப் பழிக்குப் பழியாக, ராஜாவின் சாராயத்தையெல்லாம் அவன் குடித்துவிடுவான். அவனுக்கும் தனியாக ஒரு வீடு உண்டு. அதன் ஜன்னலிலே அவன் உட்கார்ந்துகொள்ளுவான். பழுக்கச் சூடேறிய அணுக் காசுகளை, அரண்மனைக் காவலாளிகள்மேல் விட்டெறிவான். அவர்கள் திட்டுவார்கள். பட்லர் சிரித்துக் கொண்டே தலையை உள்ளே இழுத்துக்கொள்ளுவான்.

அந்த ராஜா பல சிறுத்தைப் புலிகள் வைத்திருந்தார். அவைகள் பிரமாத ஆர்ப்பாட்டம் செய்யும். என்ன தீனி வேண்டுமானாலும் அவைகளுக்குக் கிடைக்கும். ரஸமான இன்னும் பல பழக்கங்கள் அந்த ராஜாவுக்கு உண்டு. ஆனால், அவைகளைப் போர்ட் சையது துறைமுகத்துக்கு இந்தண்டை பிரசுரிக்க முடியாது. காலக்கிரமத்தில் அவருக்குக் கண் திறந்துவிட்டது. ஆரோக்கியமான தேகாப்பியாசங்களில் ஈடுபட்டார். கடைசியில் ஐரோப்பியத் தலைநகர் ஒன்றில் பூப் பந்தாட்டம் ஆடிக்கொண்டே செத்துவிட்டார். அவர் அருமையாய்ச் சம்பாஷிப்பார். தோழமைக்கு ஏற்றவர்; மதுவைத் தொடாதவர்.

இன்னொரு ராஜா - அவரும் இப்போது செத்துப் போய்விட்டார்; அவருடைய குமாரர் வட இந்தியக் காடுகளில் வசிக்கிறார். அந்த ராஜா பழமையான ஒரு மண் கோட்டையில் பல வருஷ காலம் வாழ்ந்தார். அவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. அவர் வெளியில் தலை காட்டுவதேயில்லை. கண்ட

சாமான்களையெல்லாம் சேர்த்து வைப்பதில் அவருக்குப் பித்து. அவருடைய அரண்மனையில் ஓர் அறையில் பர்டி, ஹாலண்ட் ஹாலண்ட் இந்தமாதிரி எத்தனை விதமான துப்பாக்கிகள் உண்டோ அத்தனையையும் அடுக்கி வைத்திருந்தது. இன்னோர் அறையில் பேல் கணக்காக வந்த ஸ்காட்லந்து கம்பளி இருந்தது. மூன்றாவது அறையில் ஸாக்ஸபோன் என்ற வாத்தியக் குழாய்கள் ஏகமாகக் கிடந்தன. இதில் வேடிக்கை என்னவென்றால் இந்தச் சரக்குகளில் எதையும் அவர் உபயோகிப்பதில்லை; பிறரும் உபயோகிக்க முடியாதபடி ஏற்பாடு செய்துவிட்டார். சிக்காகோ கொள்ளைக்காரன்கூடச் சுட முடியாதபடி துப்பாக்கிகளின் பாரலைச் சில அங்குலம் வெட்டி மூளி செய்தார். பொம்மைக்குக் குல்லாய் தைக்கக்கூடப் போதாதபடி கம்பளியைத் துண்டு துண்டாக நறுக்கிவிட்டார். ஸாக்ஸபோன் குழாய்களை என்ன செய்தார் என்று கேட்கிறீர்களா? ஒன்றும் செய்யவில்லை. அவைகளை யார் சீந்தப் போகிறார்கள்!

இன்னொரு ராஜா ஒரு காலத்தில் மிகவும் பிரபலமாயிருந்தார். அவருடைய மகன் இப்போது பட்டத்துக்கு வந்திருக்கிறான். கிழ

ராஜாவிடம் ஒரு சமயம் வஞ்சகன் ஒருவன் வந்து எப்படியோ சிநேகம் பிடித்தான். ஒரு நாள் அவரைக் காரில் ஏற்றிக்கொண்டு, ஆற்றங் கரைப் பக்கம் உலாத்தச் சென்றான். "இந்த ஆற்றில் ஏராளமாய் முத்துச் சிப்பிகள் இருக்கும்போல் தோன்று கிறதே" என்றான். ஆற்றில் இறங்கி முழுகிச் சில சிப்பிகளை எடுத்து வெளியிலும் போட்டான். அத்தனை யையும் எடுத்தால் கொள்ளைச் செல்வம் கிடைக்கும் என்றான். ராஜா அவனை நம்பி, 'முத்துக் குளிப்பு'க் கருவிகள் வாங்கி வருவதற்காக ஏராளமான பணத்தை அவனிடம் கொடுத்தார். அதை வாங்கிக்கொண்டு கராச் சிக்குப் போனவன் போனவன் தான்; திரும்பவேயில்லை. ஆற்றில் அவனே போட்டு வைத்த மீதிச் சிப்பிகளை எடுத்துச் செல்லக்கூட வரவில்லை.

இந்த மாதிரி இன்னும் எத் தனையோ. ஆனால், பெரும்பாலான ராஜாக்கள் அருமையானவர்கள். சென்ற யுத்தம், அதற்கு முந்திய யுத்தம் இரண்டிலும் நமக்கு ஏராள மாய்ப் பணமும் வீரரும் உதவியவர் கள். ருஷ்யப் பணக்காரக் குடும் பத்தார் லண்டன் தெருக்களில் வந்து தொப்பி விற்றுச் சீரழிந்தார் களே, அந்த மாதிரி இந்த ராஜாக் களும் சீரழிவதில் எனக்கு விருப்ப மில்லை.

வரவர நம் வாழ்க்கை சாரமற்றுப் போய்க்கொண் டிருக்கிறது. இதற்குத் தங்கள் ஆடம்பரத்தால் சுவையூட்டி வருபவர் ராஜாக்கள். என்னைக் கேட்டால், அவர்களுக்கு அதிருஷ்டம் அடிக்கவேண்டும் என்றே வாழ்த்துவேன். 'அஹமத், ராஜாவின் சாராயத்தில் ஒரு பெக் உடனே எடுத்து வா; ஷாம்பேனை யும் மிச்சம் வைக்காதே...'

செந்நாய்

சித்திரை மாதத்திய மஞ்சரியில் 'விலங்குப் போர்வீரன்' என்ற தலைப்பில் செந்நாயைப் பற்றிய கட்டுரையைப் படித்து மகிழ்ந்தேன்.

எங்கள் பக்கத்து மலைகளில் செந்நாய்கள் ஏராளமாக இருக்கின்றன. செந்நாயின் உயர்ந்த பண்பாடான விட்டுக் கொடுக்கும் சுபாவம் பற்றி அருமையான ஒரு செய்தி கேள்விப்பட்டேன். ஒரு மிருகத்தைக் கொன்று அதன் இறைச் சியைச் செந்நாய் தின்றுகொண் டிருக்கும்போது, யாராவது அந்தப் பக்கம் சென்று, "வேட்டைக்காரா, வழி விடு" என்று பணிந்த குரலில் வேண்டினால், அது இறைச்சியை அப்படியே விட்டு விட்டுப் போய்விடுமாம். மனிதர்கள் அந்த இறைச்சியைக் கொண்டு வந்து உபயோகிக்கிறார்கள். செந்நாய் பிடித்தது என்று அதைப் பிரியமாகவும் உண்கிறார்கள். பணிந்த குரலில் கேட்காமல், அகம்பாவத்துடன் "சே" என்று அதை மனிதன் விரட்டுவானானால், செந்நாய் சிறிதுகூட விட்டுக்கொடுக்காது. எதிர்த்துக் கடைசி வரைக்கும் போராடியே தீரும்.

—க. சண்முகசுந்தரம், கோம்பை.

ஆனந்தம் பெற மட்டும் அல்ல; ஆரோக்கியம் பெறவும் பாட்டு உதவுகிறது.

நோய் தீர்க்கும் சங்கீதம்

உடலுக்கும் மனத்துக்கும் உள்ள சம்பந்தத்தைப்பற்றித் தற்கால வைத்திய நூல்கள் எவ்வளவோ எடுத்துச் சொல்கின்றன. துன்பமும் நோயும் மனத்தின் உற்சாகத்தை எப்படிப் பாதிக்கின்றன என்பது எல்லாருக்கும் தெரிந்ததே. இதைப் போலவே மனத்தில் எழும் உணர்ச்சிகளுக்கு ஏற்றபடி உடல் நிலையுந்தான் மாறுகிறது என்று டாக்டர்கள் இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். மனம் சந்தோஷமாயிருந்தால், நோயை வர வொட்டாமல் தடுப்பதோடு அதுவே நோய்க்கு மருந்தும் ஆகிவிடுகிறது. ஆகவே உடல் உபத்திரவங்களைத் தீர்க்க, மனச்சாந்தி கொடுக்கும் சங்கீதத்துக்கும் சக்தி இருக்கிறது. மனத்தில் நிம்மதியும் திருப்தியும் இருந்தால், கவலை, பயம், ஏமாற்றம் முதலிய கோளாறுகள் ஒரு நொடியில் பறந்தோடிவிடும்.

இனிய கானத்தைக் கேட்பது உடலுக்கு எவ்வளவு நன்மை என்பது இன்று நேற்றுக் கண்டுபிடித்த விஷயமல்ல. கிரேக்கர்கள் தங்கள் வாழ்க்கையிலும் கல்வி முறையிலும் சங்கீதத்துக்கு முக்கிய இடம் கொடுத்திருந்தார்களாம். பைபிளில் சங்கீதத்தைப்பற்றி ஓர் இடத்தில் வருகிறது.

கடவுள் அனுப்பிய பேய் ஒன்று ஸால் என்பவனைப் பிடித்துக் கொண்டது. ஹார்ப் என்ற தந்தி வாத்தியத்தை அப்போது டேவிட் எடுத்து வாசித்தார். உடனே அந்தப் பேய் ஓடிப் போய்விட்டது. ஸாலுக்கும் உடம்பு குணமாயிற்று.

இனிய கானத்தைக் கேட்பதில் ஏற்படும் அதிசயமான நன்மைகளைப் பற்றி எத்தனையோ கதைகள் உண்டு. பாம்பு கடித்தவனைப் பிழைப்பு மூட்டுவது, கொள்ளை நோயைத் தடுப்பது போன்ற காரியங்கள் கூடச் சங்கீதத்தினால் முடியுமாம். 'டாரண்டல்லா' என்னும் ஒரு வகை விஷச் சிலந்தி கடித்தவர்களைச் சொஸ்தம் செய்வதற்கென்று இத்தாலியில் பதினேழாம் நூற்றாண்டில் இருந்த ஆசிரியர் ஒருவர் ஒரு பாட்டைக் கட்டினாராம். அதைப் பாடிக் கொண்டு வேகமாய்க் குதித்து ஆடினால் உடம்பில் வேர்வை உண்டாகுமாம். சிலந்திக்கடியின் விஷம் இந்த வேர்வைமூலம் வெளி வந்துவிடுமாம். இத்தாலியில் இன்றும் 'டாரண்டல்லா' என்ற இந்த நாட்டியம் பழக்கத்தில் இருந்து வருகிறது.

நம் நாடி, நரம்புக் கிரந்திகள், சுவாசக்குழாய் இவைகளுக்குச் சங்கீதத்தினால் என்ன என்ன நன்மை ஏற்படுகிறது என்று இப்போது

காப்பிரைட் : பீப்பிள்ஸ் ஹெல்த் (ஆங்கிலம் : ஏப்ரல் '49), சென்னை.

நிபுணர்கள் விரிவாக ஆராய்ந்து வருகிறார்கள். சில வகைச் சங்கீதம், மனத்துக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. யுத்தத்துக்குச் செல்லும்போது வாசிக்கும் சங்கீதம் உற்சாகமும் ஆவேசமும் தருகிறது. இது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. மூளைக் கோளாறுள்ளவர்கள் விஷயத்தில், சங்கீதம் இன்னும் அதிகப் பலன் தருகிறது. அமெரிக்காவிலுள்ள மான்ஹாட்டன் அரசாங்க ஆஸ்பத்திரியில் அநேக வருஷம் தலைவராக இருந்த டாக்டர் எம்மெட் டெண்ட் என்பவர் இந்த விஷயத்தில் வெகு நாள் அநுபவப்பட்டவர்; அவர், "சங்கீதத்தினால்தான் பைத்தியம் பிடித்தவர்கள் பலர் சொஸ்தமாகி யிருக்கிறார்கள். பைத்தியம் முற்றிப் போய்த் தேற வழியில்லை என்ற நிலைக்கு வந்தவர்கள் கூட அதனால் குணம் அடைந்திருக்கிறார்கள். இது அதிசயந்தான்!" என்கிறார். கனெக்டிகட்டில் மிட்டில்டௌனிலுள்ள அரசாங்க ஆஸ்பத்திரியில் மொத்தம் ஆயிரத்து நானூறு நோயாளிகள் சாப்பிடும் சமயத்தில் வாத்திய கோஷ்டி ஒன்று தினமும் வாசிக்கிறது. அதனால் எவ்வளவோ பலன் ஏற்பட்டதாம்; பால்டிமோரில் உள்ள பிப்ஸ் கிளினிக் என்ற மனநோய் ஆஸ்பத்திரியில் இதை விஞ்ஞான முறையில் செய்து பார்த்தார்கள். ஏராளமான நிதி இருந்ததால் சுலபமாய் அப்படிச் செய்ய முடிந்தது. டெட்ராய்ட் என்னும் இடத்துக்கருகிலுள்ள எலாய்ஸ் ஆஸ்பத்திரியில் வாரத்துக்கு ஐந்துநாள் அரைமணி நேரம் நோயாளிகள் சங்கீதம் கேட்க வசதி அளித்திருக்கிறார்கள். கட்டிப்போடும் நிலைமையில் இருக்கும் பைத்தியங்களெதிரில் அமைதியை அளிக்கும் இனிய பாட்டும், சோர்ந்து முகத்தைத் தொங்கவிட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கும் பைத்தியங்களெதிரில் உற்சாகத்தை ஊட்டும் பாட்டும் பாடுகிறார்கள்.

சாதாரண மனிதர்கள்கூடச் சங்கீதத்தினால் பயன் அடைகிறார்கள். "ஆபரேஷன் செய்யும்போது சங்கீதம் கேட்பது நல்லது. ஆபரேஷன் கருவிகளின் ஓசையைச் சங்கீதம் அழுத்திவிடுகிறது; அதனால் நோயாளிகளின் மனத்திலுள்ள கவலையும் பீதியும் சற்றுக் குறைகின்றன" என்று சில டாக்டர்கள் சொல்கிறார்கள். டாக்டர் எட்வர்டு எம். கார்னெல் என்பவர் ஒரு கர்ப்பவதிக்கு வயிற்றைக் கிழித்து ஆபரேஷன் செய்து ஐந்து ராத்தல் நிறையுள்ள ஓர் ஆண் குழந்தையை வெளியில் எடுத்தார். அப்போது தாய் ரேடியோவில் ஒரு பாட்டைக் கேட்டுக்கொண்டிருந்தாள். அதனால் தனக்கு வலியே தெரியவில்லை என்று பின்னால் அவள் சொன்னாள். ஆனால் இந்த முறையை எங்கும் அதிகமாகப் பின்பற்றுவதில்லை. பல் வைத்தியத்திலும் சங்கீதம் பயன்படும் என்று நிபுணர்கள் சொல்லுகிறார்கள்.

பாவ்லவ் என்ற ருஷிய நிபுணர், சரீரதத்துவத்தை ஆராய்ந்தவர்; "மனத்தில் மகிழ்ச்சி இருந்தால் குடலில் ஜீர்ண சக்தி நன்றாயிருக்கும்" என்று அவர் கண்டுபிடித்தார். அடக்க முடியாத கோபாவேசமும் பயமும் ஜீர்ண சக்தியைக் கெடுத்துவிடுமாம். ஆகையால்தான் உணவு அருந்தும் சமயத்தில் சங்கீதம் கேட்பது நல்லது என்று தெரிகிறது. இதனாலேயே சிற்றுண்டிச் சாலை

களிலெல்லாம் சங்கீதத்துக்கு வசதி அளிக்கிறார்கள்.

ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளிகளும் வெளிநாட்டிலிருந்து ஓடி வந்த அகதிகளும் பொழுது போக்கச் சங்கீதம் பயில்வது நல்லது; அப்போது தான் அவர்களுக்கு வாழ்க்கையிலே ஒரு புதிய ருசி ஏற்படும்; தாங்கள் இனி ஒன்றுக்கும் லாயக்கில்லாதவர்கள் என்ற எண்ணம் அவர்கள் மனத்தை விட்டு நீங்கும். ஏதாவது ஒரு வாத்தியத்தை வாசிக்கவோ அதில் அதிகத் தேர்ச்சி அடையவோ முயல்வார்கள். அதனால் ஒரு மகிழ்ச்சியும் அவர்களுக்கு ஏற்படும். மற்றவர்கள் எதிரே அதை வாசித்துக் காட்டிக் களிப்பூட்டுவதில் அவர்களுக்கு ஒரு பெருமை உண்டாகிறது. பாடுவது ஒரு தேகாப்பியாசமாக இருக்கிறது. பாடும்போது இழுத்து மூச்சு விடுவது உடம்புக்கு ஆரோக்கியத்தைத் தருகிறது. அதனால் நல்ல பசியும் எடுக்கிறது. சங்கீதம் பயிலுவதையே தொழிலாகக் கொண்டவர்களுக்குச் சாதாரண மனிதர்களைப்போல் மார்பு வலி முதலிய கோளாறுகள் உண்டாவதில்லை. காமாலை, அஜீர்ணம் இந்த மாதிரி தொந்தரவுகள் இருக்கும் போது பாடினால் விசேஷ நன்மை ஏற்படும். கூட்டத்தோடு சேர்ந்து பாடுவதும் நல்லதுதான். சிலருக்கு நல்ல சாரீரம் இராது; அவர்கள் பிறர் எதிரில் தனியாய்ப் பாடக் கூச்சப்படுவார்கள். ஆனால் கூட்டத்தோடு சேர்ந்து பாடுவதென்றால் கூச்சமின்றி உரக்கப் பாடுவார்கள்.

ஸ்நான அறையில் தனியாக இருக்கும்போது பாடுவது அநேகருக்குச் சகஜம். இரவில் அவர்கள் நன்றாய்த் தூங்கினதற்கு அதுவே அத்தாட்சி. பொழுதுபோக்காகச் சங்கீதம் பயின்றால் பெரும் பலன் உண்டு. பாட்டுக் கேட்பதிலும் சங்கீதம் பயிலுவதிலும் ஜனங்கள் ஈடுபட ஈடுபட நோய்கள் நீங்கிப் பரஸ்பர ஒற்றுமை ஏற்பட்டுத் துன்பங்களும் குறையும். சங்கீதத்திலுள்ள சுவையினால் வீண் கவலை போகும்; நல்ல தூக்கமும் வரும்.

பிறர் கேட்டு மகிழ்வதற்காக அல்ல; நம் திருப்திக்காகவே சங்கீதத்தைப் பயில வேண்டும். ஐன்ஸ்டைன் என்ற பிரபல விஞ்ஞானி நன்றாகப் பிடில் வாசிப்பார். தொழிற்சாலைகளில் சங்கீதம் வாசித்தால் துரிதமாய் வேலை நடக்கிறது. சில தொழிற்சாலைகளில் சாப்பாட்டு வேளையில் பெரிய சங்கீதக் கச்சேரியே நடக்கிறதாம்.

ராணுவத்தில் சங்கீதம் முக்கியமான அம்சம். 'டிரம்' அடித்துக் கொண்டும் குழலை ஊதிக்கொண்டும் போகும்போது போர்வீரர்கள் சோர்வு தெரியாமல் போவார்கள். நெப்போலியன் நல்ல பனிக்காலத்தில் ஆல்ப்ஸ் மலை வழியாய்ப் படையெடுத்துச் சென்றபோது வந்த பீரங்கி வண்டி நகரவில்லையாம். மனிதர்களும் குதிரைகளும் சேர்ந்து வண்டியை இழுக்க வேண்டியிருந்தது. இந்தச் சமயத்தில், சகல வாத்தியங்களும் ஏககாலத்தில் முழங்கும்படி நெப்போலியன் உத்தரவிட்டார். அப்போது போர்வீரர்களுக்கு ஏற்பட்ட உற்சாகத்தில் வண்டி நகர்ந்து விட்டது. நியூயார்க்கில் மாடிஸன் தோட்டத்தில் சைகிள் பந்தயம் ஒன்று நடந்தது. அதில் கலந்து கொண்டவர்கள் முதலில் மணிக்கு 18 மைல் வேகத்தில் போனார்களாம். பாண்டு ஆரம்பித்ததும் பாட்டுக் கேட்கும் உற்சாகத்தில் மணிக்கு 19 மைல் வேகத்தில் போனார்களாம்.

குழந்தைகள் குறும்பு

இவை போன்ற துணுக்குகளை, தாங்கள் கண்டு கேட்ட அநுபவங்களிலிருந்து யாரும் நமக்கு அனுப்பலாம். பிரசுரிக்க அங்கீகரித்த ஒவ்வொரு துணுக்குக்கும் 2 ரூபாய் சம்மானம் அளிக்கப்படும். பிரசுரிக்காதவற்றைத் திருப்பி அனுப்பமுடியாது.

—ஆசிரியர்.

கமலா ஐந்து வயதுக் குழந்தை. எப்போதும் துறுதுறு என்று ஏதாவது விஷமம் செய்துகொண்டே யிருப்பாள். ஒரு சமயம் அவள் அத்தை அவளுக்கு ஓர் அழகான பட்டுச்சட்டை தைத்துக் கொடுத்தாள். யாராவது வீட்டுக்கு வரும் போதெல்லாம் அத்தை பெருமையாக, "அடி, கமலா! இந்தச் சட்டையை யாரடி உனக்குத் தைத்துக் கொடுத்தா?" என்று கேட்பாள். அதற்குக் கமலா எப்பொழுதும், "நீதான், அத்தே" என்று பதில் சொல்லுவாள். இப்படியே ஒரு விருந்தாளி வந்த சமயத்தில் அத்தை, "இந்தச் சட்டையை உனக்கு யாரடி தைத்துக் கொடுத்தா?" என்று கமலாவைக் கேட்டாள். இந்த மாதிரி அடிக்கடி கேட்பது கமலாவுக்குப் பிடிக்கவில்லை. அவள் உடனே, "தையற்காரன் தைத்துக் கொடுத்தான்" என்றாள்.

—எஸ். சதாசிவம், மதுரை.

என் நான்கு வயதுக் குழந்தை வைத்தா, திண்ணையில் உட்கார்ந்திருந்தான். நான் கீழே பலாப்பழம் நறுக்கிக்கொண்டிருந்தேன். அவனுக்கு என்னுடன் கீழே உட்கார்ந்து பழம் சாப்பிட ஆசை. என்னைப் பார்த்து, "நானும் கீழே உட்காருகிறேனே, அப்பா" என்று பேச்சை ஆரம்பித்தான்.

அதற்கு நான், "நீ சமத்தோல்லியோ? மேலேயே உட்கார்ந்திரு" என்றேன்.

உடனே, "அசடுகள் எங்கே உட்காருவா?" என்றான் அவன்.

நான், "அசடுகள் இங்கே வரவே கூடாது" என்றேன்.



அவன், "அப்படின்னு கீழே யார் உட்காருவா?" என்றதும், எனக்கு என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை.

—வி. அருணாசலம், பாஹூர்.

என் மகன் மணி ஒரு நாள் சிலேட்டைத் தூக்கிக்கொண்டுவந்து, "அம்மா, அம்மா! நான் ஒரு படம் போட்டிருக்கேன்; பார்த்தியா?" என்று சிலேட்டை என் மனைவி



யிடம் காட்டினான். அதில் ஒரு படமும் இல்லை. எல்லாம் அழிந்து, வெறும் சிலேட்டுத்தான் இருந்தது.

"ஏண்டா மணி, இதில் ஒரு படத்தையும் காணோமே!" என்று அவள் கேட்டாள். மணியும் சிலேட்டை வாங்கிப் பார்த்துவிட்டு, "சரியாய்ப் போச்சு! ஒரு மோட்டாரை ரெண்டு ஆள் தள்ளிண்டு போறப்பிலே பள்ளிக்கூடத்திலே படம்போட்டு எடுத்துண்டு வந்தேன். வழியிலே அந்த ஆள்கள் மோட்டாரைத் தள்ளிண்டு போய்விட்டானுகள் போல் இருக்கு. அதுதான் இதில் ஒண்ணும் காணோம்" என்றான்.

—ஏ. கே. ராஜாமணி, பேரளம்.

தகப்பனார் ராமுவைப் பார்த்து, "டேய் ராமு, ஓரணாவுக்கு இரண்டு மிட்டாய்; நாலணாவுக்கு எவ்வளவு மிட்டாய்?" என்று கேட்டார்.

"ஒன்பது மிட்டாய்" என்றான் ராமு.

"எப்படிடா?" என்று கேட்டார்.

"நீ நாலணா கொடேன். நான் செட்டியார் கடையில் போய் எட்டு மிட்டாயும் ஒரு மிட்டாய் கொசுறும் வாங்கிண்டு வறேன்" என்றான் ராமு.

—கே. ராஜம், ஹீராகுட், சம்பல்பூர்.

சில நாட்களுக்குமுன் எங்கள் தகப்பனாரின் சிநேகிதர் ஒருவர் தம் குடும்பத்துடன் எங்கள் வீட்டில் தங்கியிருந்தார். அவருடைய எட்டு வயதுப் பெண் கமலாவும் என் தங்கை ஜானகியும் ஒரே நாளில் நெருங்கிய நண்பர்களாகிவிட்டார்கள்.

ஜானகி தன்னைப்பற்றியும் தன் வீட்டைப்பற்றியும் கதைகள் அளந்துகொண்டிருந்தாள். அவள் ஓர் அறையைச் சுட்டிக் காட்டி, தான் அதில் பிறந்ததாகச் சொன்னாள்.

தான் ஓர் ஆஸ்பத்திரியில் பிறந்ததாகக் கமலா சொன்னாள்.

என் தங்கைக்கு ஒன்றும் புரியவில்லை. சிறிது நேரம் யோசித்தாள். பிறகு, "ஏன்? நீ பிறக்கும்போது உனக்கு உடம்பு சரியாக இல்லையா?" என்றாள்!

—டி. வி. சாமா ராவ், மதுரை.



'துறவிக்கு வேந்தன் துரும்பு' என்பதை விளக்க எத்தனையோ பழங்கதைகள் உண்டு. இதுவும் ஒன்று

முனிவரும் அலெக்ஸாண்டரும்

ஸித்தாந்தி மல்லிகார்ஜுனம்
செருகுமூடி ராதாகிருஷ்ணமூர்த்தி

மகா அலெக்ஸாண்டர் பஞ்சாபில் இந்திய வீரர்களோடு ஓயாமல் போரிடும் சமயம். தண்டாமிஸ் என்னும் இந்திய முனிவரின் குணாதிசயத்தைப்பற்றி அவன் கேள்விப்பட்டான். அவரைப் பார்க்கவேண்டும் என்று ஆசை தட்டியது; உடனே தன் நண்பன் ஒனவிக்ரேடஸ் என்னும் அதிகாரியை அனுப்பி அவரை அழைத்து வரச் சொன்னான்.

அப்படியே அவன் போய், "ஓ பிராம்மண குருவே! உங்களுக்கு மங்களம் உண்டாகட்டும்!" என்று வாழ்த்தினான். பிறகு, "மகாபலம் பொருந்திய ஜ்யூஸ் தேவனின் குமாரனும் உலகத்தை ஒரு குடைக்கீழ் ஆளும் சக்கரவர்த்தியுமான அலெக்ஸாண்டர் உங்களை வரச் சொன்னார். வந்தால் அற்புதமான பரிசுகள் தருவார். மறுத்தால் தலை போய்விடுவது நிச்சயம்" என்றான்.

முனிவர் சிரித்துக்கொண்டே அதைக் கேட்டார்; பிறகு அவர் சொன்ன பதில் இதுதான்:

"சர்வலோகத்துக்கும் ராஜா கடவுள். அகங்காரத்தினால் செய்யும் இந்தமாதிரி துஷ்டச் செயல்களை அவர் ஒப்பவே மாட்டார். இம்சையை விட்டுவிட்டு யுத்தத்தைத் தடுப்பவனே கடவுள் ஆக முடியும். அவனைத்தான் நான் தொழுவேன். அலெக்ஸாண்டர் கடவுள் ஆகமாட்டான். அவனும் ஒரு நாள் யமனுக்குப் பலியாகப் போகிற மனிதன் தானே? உலகத்தின் பல மூலைகளில் இருக்கும் எத்தனையோ பேர், அலெக்ஸாண்டரின் பேரையே கூடக் கேள்விப்பட்டிருக்கமாட்டார்களே! இருக்கிற ராஜ்யம் போதாவிட்டால் கங்கை நதியைத் தாண்டச் சொல். அப்புறம் தெரியும். அலெக்ஸாண்டர் தரும் பரிசு எதுவும் எனக்குப் பிரயோஜனப்படாது. இந்தப் பர்ணசாலை, இங்கே உள்ள அமிர்தம் போன்ற பழங்கள், பூக்கள் நிறைந்த இந்த மரங்கள், தாகத்தைப் போக்கும் தெள்ளிய நீர் இவையே எனக்குப் போர்தும். தான் தரப் போகும் பொருளுக்கு ஆசைப்பட்டுத் தன்னைக் கண்டு நடுங்கும் கோழைகளை வேண்டுமானால் அவன் இப்படிப் பயமுறுத்தட்டும். துறவிகளுக்கு அவன் பரிசெல்லாம் எதற்கு? அவனுடைய ஆயுதங்களும் எங்களை ஒன்றும் செய்ய முடியாது. நாங்கள் பொன்னை மதிக்க மாட்டோம். யமனுக்கும் அஞ்ச மாட்டோம். சரி; இனிமேல் நீ போய் வா. அலெக்ஸாண்டரிடம் இதைக் கட்டாயம் சொல்: 'தண்டாமிஸுக்கு எதுவும் வேண்டாமாம். அவர் உங்களிடம் வர மாட்டாராம். ஆனால்

காப்பிரைட்: பாரதி (தெலுங்கு), சென்னை.

அவரிடம் ஏதாவது ஆகவேண்டி யிருந்தால் அவரைப் போய்ப் பார்க்கலாமாம்' என்று சொல்."

தூதன்மூலம் இதைக் கேட்டதும் அலெக்ஸாண்டர் ஆச்சரியத்தால் திகைத்துவிட்டான். தண்டாமிஸைப் பார்க்கவேண்டும் என்ற ஆசை இன்னும் அதிகமாயிற்று. உலகத்தை வென்ற தன்னை இத்தனை வருஷங்களுக்குப் பிறகு ஒரு கோவணாண்டிக் கிழவன் அலட்சியம் செய்த அதிசயத்தைப் பாரத பூமியில்தான் அவன் கண்டான்.

வெயில் கொளுத்தியது. பல காடு மலைகளைத் தாண்டிச் சென்றான் அலெக்ஸாண்டர். வெகுதூரம் போன பிறகு ஒரு காட்டாறு குறுக்கிட்டது. அதன் தெளிந்த நீர் கரை புரண்டு ஓடியது. இரு கரையிலும் மரங்கள் அடர்ந்து நிழல் கொடுத்தன. அமைதியான சூழ்நிலை.

அலெக்ஸாண்டர் மௌனமாக மறுபடியும் கொஞ்சதூரம் போனான். சற்று நேரம் நெஞ்சு படபட வென்று அடித்துக்கொண்டது. என்றும் இல்லாத களைப்பு, தாகம் எல்லாம் சேர்ந்துகொண்டன. வேறு வழி தோன்றாமல் ஆற்றின் கரையில் தொப்பென்று விழுந்து ஒரு பெருமூச்சு விட்டான். இரு கைகளாலும் தண்ணீரை மடமட வென்று அள்ளிக் குடித்தான். 'அப்பாடா! இந்தத் தண்ணீர் எவ்வளவு ருசியாக இருக்கிறது!' என்று நினைத்தான். ஒரு நிமிஷத்தில் அவன் உடம்பில் கட்டுக்கடங்காத பலமும் தைரியமும் உற்சாகமும் தோன்றின.

இவ்வளவு ருசியுள்ள தண்ணீரைக் கொண்டுவரும் இந்த ஆற்றின் பிறப்பிடம் எவ்வளவு அழகாக இருக்கும் என்று நினைத்தான் அலெக்ஸாண்டர். உடனே அதைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற ஆசை பலமாகப் பற்றிக்கொண்டது. ஆற்றின் கரையோரமாகவே நடந்து போனான்.

கடைசியில் அந்த வழி சொர்க்க லோகத்தின் வாசலில் கொண்டு போய் விட்டது. வாசல் கதவு உள்ளே தாழிட்டிருந்தது. கதவைக் காலால் உதைத்துப் பார்த்தான். "கதவைத் திற" என்று தொண்டை கிழிய உத்தரவிட்டான். பதிலே இல்லை. மறுபடியும் கோபத்தோடு கதவை உதைத்தான். பல்லை நறநறவென்று கடித்தான்.

"நானும் ஒரு பிரபுவே. உலகம் முழுவதற்கும் பிரபு! வெற்றி வீரன் அலெக்ஸாண்டர்! என்னை உள்ளே விடமாட்டாயா?" என்று வெறுப்போடு கத்தினான்.

"ஊஹூம், முடியாது; வெற்றி வீரன், வீழ்ச்சிவீரன் யாரையும் எங்களுக்குத் தெரியாது. எங்களுக்குத் தெரிந்தவர்கள் ஐம்புலன்களையும் அடக்கினவர்களே! புண்ணியாத்மாக்கள் மட்டுமே இங்கே வரலாம்" என்ற பதில்தான் கிடைத்தது.

உள்ளே நுழையவேண்டுமென்று அலெக்ஸாண்டர் கஜகர்ணம் போட்டான்; முடியவில்லை. கடைசியில் ஓய்ந்துபோய் வணக்கத்தோடு சொர்க்க அதிபதியை ஒன்று வேண்டிக்கொண்டான்:

"ஸ்வாமி, உலகத்தை ஒரு குடைக்கீழ் ஆண்ட என்னை உள்ளே விட மறுக்கிறீர்கள். போனால் போகிறது! நான் இங்கே வந்ததற்கு அடையாளமாக ஏதாவது ஒரு பொருளைக் கொடுங்கள். மனிதர்கள் போக முடியாத இடத்துக்குப் போய் வந்தேனென்றாவது ஜனங்

கள் என்னை மதிப்பார்கள்'' என்றான். சொர்க்க அதிபதி எதையோ பொட்டலம் கட்டி அலெக்ஸாண்டரின் கையில் போட்டு விட்டு, ''போடா பைத்தியமே!'' என்றார்.

அலெக்ஸாண்டர் மகிழ்ச்சியோடு தன் கூடாரத்துக்குத் திரும்பினான். கைகள் நடுங்கப் பொட்டலத்தை அவிழ்த்தான். உள்ளே இருந்த பொருளைக் கண்டதும் நெருப்பை மிதித்ததுபோல் குதித்தான்.

''இவ்வளவு தூரம் போய் நான் வேண்டினேன்; அவன் எனக்குக் கொடுத்தது என்ன? மனிதனுடைய மண்டை ஓட்டில் ஒரு சிறு பாகம்! நாசமாய்ப் போக!'' என்று சொர்க்க அதிபதியைத் திட்டினான்.

அப்போது ஒரு வேதாந்தி அந்த வழியாகப் போய்க்கொண்டிருந்தார். அவர் அலெக்ஸாண்டரைக் கண்டு இரங்கினார். அவனை அருகில் அழைத்து, ''மகாராஜா! இதை அற்பமாக எண்ணாதே! இதற்குச் சில அபூர்வ குணங்கள் உண்டு. ஒரு தராசு, கொஞ்சம் பொன், வெள்ளி இவைகளைக் கொண்டுவரச் சொல். இதன் பெருமையை உனக்குக் காட்டுகிறேன்'' என்றார். அவர் சொன்னபடியே அலெக்ஸாண்டர் செய்தான்.

வேதாந்தி, அந்தப் பொருளைத் தம் கையில் வாங்கித் தராசின் ஒரு தட்டில் வைத்தார். மறு தட்டில் அலெக்ஸாண்டரின் சேவகர்கள், பொன் வெள்ளி நகைகள், பாத்திரங்களைக் கொண்டுவந்தார்கள்.

அது என்ன மாயமோ, மண்டை ஓடு இருந்த தட்டு, கீழேயே உட்கார்ந்துவிட்டது. மற்றது மேலே மேலே போய்க்கொண்டிருந்தது. அதில் எவ்வளவு குவித்தும் பயன் இல்லை. எல்லாரும் பிரமை பிடித்ததுபோல் நின்றார்கள்.

''இவ்வளவு சிறிய எலும்புத் துண்டுக்குச் சரியாக நிற்கும் பொருளே இல்லையா?'' என்றான் அலெக்ஸாண்டர்.

''இருக்கிறது, ஐயா, இருக்கிறது'' என்றார் வேதாந்தி.

அலெக்ஸாண்டர் வைத்த கண் வாங்காமல் தட்டையே பார்த்துக் கொண்டிருந்தான்.

வேதாந்தி சிறிது மண்ணை எடுத்து அந்த மண்டை ஓட்டின் மேல் தடவி மறுபடியும் தராசில் வைத்தார். உடனே இரண்டாவது தட்டு 'கிர்' என்று கீழே இறங்கியது; மண்டை ஓடு வைத்த தட்டு லேசாகி உயர்ந்தது.

அலெக்ஸாண்டரின் ஆச்சரியத்தைச் சொல்லி முடியாது. இதன் அர்த்தம் என்ன என்று வேதாந்தியைக் கேட்டான்.

''மகாராஜா, இந்த மண்டை ஓட்டுத் துண்டு மனிதனுடைய கண்ணில் ஒரு பகுதி. நம் பார்வைக்குச் சிறியதாய் இருந்தாலும் இதன் ஆசைக்கு முடிவே இல்லை. எவ்வளவு இருந்தாலும் இன்னும் வேண்டும் வேண்டும் என்றே இது முறையிடும். மலை அத்தனை பொன் கொடுத்தாலும் இது திருப்தி அடையாது. ஆனால் இதை எடுத்துக்கொண்டுபோய் மண்ணில் புதைத்து மேலேயும் மண்ணைத் தூவிவிட்டால் இதன் ஆசை மட்கி மண்ணோடு மண்ணாய் மறைந்துவிடும்!'' என்றார் அவர்.

அறிவில் சிறந்த பட்சி

உலகெங்கும் வாழும் காக்கைக்கு விளையாட்டு, குறும்பு, நீதி விசாரணை எல்லாம் உண்டு. அதன் அற்புதமான குணாதிசயங்களை விளக்கும் இந்தக் கட்டுரை அமெரிக்காவிலிருந்து வரும் (1) 'ஸயின்ஸ் டைஜெஸ்ட்' (2) 'ரீடர்ஸ் டைஜெஸ்ட்' இரண்டிலும் வந்த இரு கட்டுரைகளை ஆதாரமாகக் கொண்டது.

காக்கை என்றால் தெரியாத மனிதரே இல்லை. மனிதனைவிட அது மிகவும் புத்திசாலி. குறும்புத்தனமும் நகைச் சுவையும் கூட அதற்கு அதிகம். நியூ யார்க் குடாவில் இருக்கும் ஸ்டேடன் தீவில் உள்ள ஒரு காக்கை நம் ஜேபியிலிருக்கும் சாமானை 'லபக்' என்று கௌவிக்கொண்டு போய்விடுமாம். அப்படி ஒன்றும் இராவிட்டால், "நீ நாசமாய்ப் போக" என்று திட்டிக் கொண்டே பறந்து போகுமாம். இன்னொரு காக்கை யாராவது அழகான பெண்பிள்ளையைப் பார்த்தால் "பையா! பையா!" என்று ஏளனம் செய்கிறமாதிரி கத்துமாம். எல்லாக் காக்கையுமே பேசும் என்று எண்ணவேண்டாம்; சின்னதாக இருக்கும்போது எடுத்து வளர்த்த சில காக்கைகளே இப்படிப் பேசும். சுமார் நூறு வார்த்தைகளும் சில வாக்கியப் பகுதிகளும் தெரிந்த காக்கைகள் உண்டு. வயல்களில் குடியானவர்கள் கூவுகிறமாதிரியே சில காக்கைகள் சத்தம் செய்யும்.

இவை எப்போதும் ஒரு சின்ன இடத்தில் 50, 60 கூடுகள் கட்டிக்கொண்டு மொத்தமாக வாழும். அங்கேயும் ஒன்றுக்கொன்று ஏதாவது குறும்புத்தனம் செய்துகொண்டு தான் இருக்கும். ஒன்று வெளியில் இரை தேடப் போயிருக்கும் சமயம் இன்னொன்று வந்து அதன் கூட்டில் இருக்கும் பாசி, கிழங்கு இவைகளைத் தன் கூட்டில் கொண்டு வந்து வைத்துக் கொள்ளும். போன காக்கை திரும்பியதும் மறுபடியும் அந்தப் பொருள்களைத் தேடி எடுத்துக்கொண்டு வந்து விடும். இதெல்லாம் வெறும் தமாஷ் தானே தவிர வேறொன்றும் இல்லை. ஒரு காக்கைக்குக் காயம் பட்டு விட்டால் மற்றக் காக்கையெல்லாம் சேர்ந்து அதைச் சீக்கிரத்தில் ஏதாவது மருந்து போட்டுக் குணப் படுத்திவிடும்; அவைகளுக்குள் அவ்வளவு ஒற்றுமை.

காக்கைக்கு அபாயத்திலும் சமாளித்துக்கொள்ளும் சாமர்த்தியம் உண்டு. மரமே இல்லாத ஒரு பொட்டல். நடுநடுவே தந்திக் கம்பங்கள் மட்டும் இருந்தன. அங்கே பைரியைப் பார்த்து விட்ட ஒரு காக்கை வேகமாகப் பறந்து போய்த் தந்திக் கம்பத்தின்

கீழ் ஒளிந்துகொண்டது. கம்பத்துக்கு மேலே வந்து பைரி அங்கேயே வட்டமிட்டுக்கொண்டிருந்தது. குறி பார்த்துத்தானே காக்கையின்மேல் பாயவேண்டும்? அதே சமயத்தில் காக்கையும் அதைக் கவனித்துக்கொண்டே இருந்தது; பைரி ஒரு பக்கம் குறிவைத்துப் பாய வரும்போது அதற்கு எதிர்ப் பக்கமாகக் காக்கை சடக்கென்று நகர்ந்தது. அப்போது நடுவில் தந்திக் கம்பம் பைரிக்குத் தடையாயிற்று. இப்படியே பல தடவை நடந்தபின் பைரி சோர்ந்து அந்த இடத்தைவிட்டுப் போய்விட்டது!

இன்னொரு சமயம்; அருகில் தந்திக் கம்பி இல்லை. ஆனால் முள் கம்பி வேலி போட்டிருந்ததைப் பார்த்தது ஒரு காக்கை. பறந்து போய் அதன்கீழ்ப் புகுந்துகொண்டது. பைரி ஒரு பக்கம் பாய வந்தால் வேலியின்கீழ் அதற்கு எதிர்ப் பக்கமாக நகர்ந்தது காக்கை. இப்படி வெகுநேரம் அந்தப் பைரியைத் திணற அடித்து அது சோர்ந்து போனதும் காக்கை தப்பித்துக்கொண்டது.

மிஸ் வாட்ஸன் என்ற அமெரிக்கப் பெண்மணி ஒரு காக்கையை வளர்த்து வந்தாள். அவள் வீட்டுக்கு அருகில் ஒரு குடியானவன் கொல்லை. அவன் பட்டாணிச்செடி பயிரிட அதை உழுது வைத்திருந்தான். மெதுவாக நடந்துகொண்டே உழுத சாலில் கொஞ்ச தூரத்துக்கு ஒருதரம் பட்டாணி விதையைப் போட்டுக்கொண்டே வந்தான். முதல் வரிசை முடிந்ததும் முதுகு வலிக்கவே நிமிர்ந்து ஒரு தரம் திரும்பிப் பார்த்தான். போட்ட விதை ஒன்றுவது இருக்க வேண்டுமே! அவன் விதைகளைப் போட்டுக்கொண்டிருக்கும்போது பின்னாலேயே அந்தக் காக்கையும் ஓசைப்படாமல் ஒவ்வொன்றாக அவைகளைக் கொத்திக் கொத்தித் தூர எறிந்துகொண்டே வந்தது. அதற்குத்தான் எவ்வளவு கிறுக்கு!

இன்னொரு நாள் அதைப் படம் பிடித்துக்கொண்டிருந்தாள் மிஸ் வாட்ஸன். அப்போது டெலிபோன் மணியோசை கேட்கவே உள்ளே போனாள். அவள் திரும்பி வருவதற்குள் காமிராவில் போட்டிருந்த 'லென்ஸ்' மாயமாய் மறைந்துவிட்டது! கால் மணி நேரம் தேடின பிறகுதான் அது அகப்பட்டது. வாசல் முற்றத்திலிருக்கும் ஊஞ்சல் ஜமுக்காளத்தில் அதைக் காக்கை ஒளித்து வைத்திருந்தது. அவ்வளவு நேரமும் அது ஒரு மரக்கிளையில் உட்கார்ந்து தத்திக் குதித்துக் 'கா கா' என்று கத்திக்கொண்டே, அவள் தேடுவதைக் குதூகலத்தோடு பார்த்துக்கொண்டிருந்தது.

ஒரு சமயம் பக்கத்து வீட்டுக் குடியானவனின் மூக்குக் கண்ணாடியை இப்படித்தான் எங்கோ ஒளித்து வைத்துவிட்டது. பளபளவென்று எந்த வஸ்து இருந்தாலும் காக்கைக்கு அதன் மேல் ஆசை.

நியூ யார்க்கில் பேர் மௌண்டன் பார்க் என்ற தோட்டத்தில் ஒரு காக்கை இருந்தது. அங்கே ஏதாவது கார் நிறுத்தியிருந்தால் அதனுள்ளே எட்டிப் பார்க்குமாம்; 'இக்னிஷன் ஸ்விச்'சில் பளபளவென்று சாவி தெரிந்தால் அதை மூக்கால் ஆட்டி அசைத்து எடுத்துவிடுமாம்; வேறு எங்கேயாவது ஒளித்து வைக்குமாம். வீட்டுக் கணப்பை மூடியிருந்தால் அதன் மூடியைத் திறந்து விடுவது சில காக்கைகளின் வழக்கம். மறுநாள் வீட்டார் எழுந்து பார்க்கும்போது தகதக

வென்று கணப்பு எரிந்துகொண்டிருக்கும். கணப்புத் துவாரம் வழியாக வெளிச்சம் கொஞ்சமாகத் தெரிந்தால் அதைப் பெரிதாக்குகிற வரைக்கும் காக்கைக்குத் திருப்தி இராது.

வீட்டில் வளர்க்கும் காக்கைகளுக்கு அன்பும் பாசமும் அதிகம். ஒரு காக்கை தினந்தோறும் ஒரு பையனோடு பள்ளிக்கூடம் போய் வருமாம். பையன் வகுப்புக்குள் நுழைந்ததும் அது அங்கே உள்ள ஜன்னல் கட்டையில் வந்து உட்காருமாம். பையன் வேறு வகுப்புக்குப் போனால் அங்கேயும் அவனைத் தேடிக்கொண்டு வந்துவிடுமாம். ஜிம் என்று ஒரு காக்கை. அது தனக்கு வேண்டிய ஒரு நாய்க்கு ஒத்தாசையாக இருந்ததாம். ஒரு பூனையைக் கண்டால் அதற்குப் பிடிக்காது. நாய் துரத்தும் போது அருகிலுள்ள மரத்தில் பூனை ஏறிக்கொள்ளும். அப்போது ஒரு கிளையில் உட்கார்ந்து ஜிம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கும். பூனை மரத்திலிருந்து இறங்கியதும் ஜிம், 'கா கா' என்று கத்தும். மறுபடியும் பூனையைத் துரத்திக் கொண்டு நாய் ஓட ஆரம்பிக்கும். ஜிம்முக்கு இதை வேடிக்கை பார்ப்பதில் ஒரு குதூகலம்.

அந்த நாயும் ஜிம்மும் சில சமயம் ஓட்டப் பந்தயம் நடத்துவது வழக்கம். முதலில் இரண்டும் ஒன்றாக நடக்க ஆரம்பிக்கும்; நாயின் வேகம் அதிகமாக ஆக அதன் மேலேயே ஜிம் உட்கார்ந்து சவாரி செய்ய ஆரம்பித்துவிடும். இந்த ரேஸ் எப்படி?

காக்கைக்கு வேடிக்கை விளையாட்டுக்களில் மிகவும் பிரியம். தூங்குகிறவர்களை எழுப்புவதென்றால் அதற்குக் குஷால். கோடையின்போது நடுப்பகலில் முயல், ஆடு மாடு இவைகள் உறங்கும்போது இவற்றின் தலையில் வந்து கொத்திக் கலாட்டா செய்யும். சின்னக் காக்கைகள் சில சமயம் மரப் பொந்தில் வேடிக்கைக்காக ஒளிந்துகொண்டு கத்துவது வழக்கம். அதை மற்றக் காக்கைகள் தேடித் தேடிப் பார்க்கும். கடைசியில் அது தன் தலையை நீட்டும். அப்புறம் எல்லாக் காக்கையுமாகச் சேர்ந்து குதூகலமாகக் கூவி விளையாடும். வெள்ளைக் கூழாங்கற்களைப் பொறுக்கி ஒன்று மாற்றி ஒன்று மூக்கில் வைத்துக்கொண்டு விளையாடும்.

காக்கை கத்துவது காதுக்கு நாராசமாக இருக்கிறது என்றுதான் பொதுவாக எல்லாருக்கும் அபிப்பிராயம். ஆனால் பேடையோடு கூடும் சமயம், 'இது காக்கையா?' என்று அதிசயப்படும்படி ரகசியம் பேசுகிறமாதிரி இனிய கீதக் குரலில் கூவும். கா கா என்பதையே 25 விதமாகக் கத்துமாம். ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு அர்த்தம். எவனாவது துப்பாக்கி எடுத்து வருவது தெரிந்தால் மரத்தின் உச்சியில் இருக்கும் காக்கை, அவன் ஒரு மைல் தூரத்தில் இருக்கும் போதே கண்டுபிடித்து மற்றக் காக்கைகளுக்கு அறிவிக்கும். உடனே எல்லாம் சேர்ந்து சத்தம் செய்யாமல் சுமார் 45 மைல் வேகத்தில் வேறு எங்காவது ஓடிப்போய் ஒளிந்து கொள்ளும். காக்கை குறைந்தபட்சம் 25 வருஷமாவது ஜீவிக்கும்.

காக்கைகளின் நீதி விசாரணை மிகவும் ஆச்சரியம். ஒரு காக்கை தவறு செய்துவிட்டால் மற்றவை கூடி வெகு

நேரம் ஏதோ கத்திக் கூச்சலிடும். அப்போது தவறு செய்த காக்கை அங்கே ஒரு மூலையில் நிற்கும். திடீரென்று எல்லாம் சேர்ந்து அதன்மேல் விழுந்து அதன் கண்ணைக் கொத்தி அதைக் கொன்றுவிடும்.

சமீபத்தில் அமெரிக்காவில் 40 மாகாணங்களில் 2118 காக்கைகளின் வயிற்றைப் பரிசோதித்தார்களாம். இதிலிருந்து அவை 650 விதமான ஆகாரம் உட்கொள்வதாகத் தெரிந்தது. தானியம், எலி, வெட்டுக்கிளி, குளவி, தேரை, மாமிசம் இந்த மாதிரி எதையும் காக்கை சாப்பிடும். வீட்டுக்கு வர்ணம் பூசும் பெயிண்டைக் கூடக் குடித்துவிட்டு ஒரு காக்கை பிழைத்திருக்கிறது.

காக்கை பல பறவைகளைப் போல் கத்தும். மொத்தத்தில் குறும்பு, தந்திரம், தமாஷ் எல்லாம் காக்கையின் உடன் பிறந்த குணங்கள்.

குழந்தைகள் இயல்பு

★ ஆணுக்குப் பொறாமை அதிகம் என்பது உண்மையா?
அது தவறு; ஒரு வயதிலிருந்து ஆறு வயதுவரையில் உள்ள சில குழந்தைகளைப் பரீட்சித்துப் பார்த்ததில் பெண் குழந்தைகளுக்குத்தான் பொறாமை அதிகம் என்று தெரிந்தது.

★ பெண்குழந்தைக்குக் கூச்சம் அதிகம் என்பது சரியா?
பொதுவாக அப்படித்தான் நாம் எண்ணிக்கொண்டிருக்கிறோம்; அது தவறு. ஆண் குழந்தை தாயோடேயே ஒட்டிக்கொண்டிருக்கும். கொஞ்சக் கொஞ்ச அவளை விட்டு வரவே வராது; தாயின் தலைப்பிலே முகத்தை மறைத்துக்கொள்ளும்.

★ எது அதிகமாகக் கேள்வி கேட்கும்?
ஆண்; மூன்று வயதிலிருந்து ஆறு வயதுவரை இப்படிக் கேட்பது சகஜம்.

★ எது பள்ளிக்கூடத்தில் சூடிகையாகப் படிக்கும்? - ஆணா, பெண்ணா?
பெண்; அது எதையும் அக்கறையோடு கவனித்துச் செய்யும். பள்ளிக்கூடத்தில் இருப்பதென்றால் அதற்கு மிகவும் பிடிக்கும்.

★ பொதுவாகப் பரீட்சையில் தேறாத குழந்தை எது?
ஆண் குழந்தை.

★ எதற்குப் பல் முன்னாலேயே முளைக்கும்?
பெண் குழந்தைக்கு.

★ எதற்குக் காயம் என்றால் அதிக பயம்?
ஆண் குழந்தைக்கு. அதுதான் இப்படி அடிக்கடி பயப்படும். பெண் குழந்தை அவ்வளவு பயப்படாது.

★ எதற்குத் தயை தாட்சிண்யம் அதிகம்?
பெண்ணுக்கு; 12 வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளை, "உன் கையில் லட்ச ரூபாய் இருந்தால் என்ன செய்வாய்?" என்று கேட்டபோது, முக்கால்வாசிப் பெண்குழந்தைகள், "அதைப் பிறத்தியாருக்குக் கொடுப்போம்" என்றன.

—'ஸயின்ஸ் டைஜெஸ்ட்'

வாழ்வும் வாக்கும்

கடவுளை நேருக்கு நேரே கண்ட மகான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர். அவர் வாழ்வு சத்திய ஜோதி; வாக்கு ஜீவ அமிர்தம்.

உணர்ந்து பணிந்து அவனுக்குச் சிஷ்ய ஞானன். (வாக்கு)

ஆடும் புலியும்: ஒரு பெண்புலி பூர்ண கர்ப்பமாக இருந்தது. அப்போது ஓர் ஆட்டு மந்தையைக் கண்டு அதன்மேல் பாய்ந்தது. பாய்ந்த வேகம் தாங்காமல் அது ஒரு புலிக் குட்டியை ஈன்று உடனே இறந்துவிட்டது. புலிக்குட்டி ஆடோடு ஆடாக வளர்ந்து வந்தது. ஆடுமாதிரியே கத்துவதும் தழை மேய்வதுமாக இருந்தது. ஒரு நாள் ஆண்புலி ஒன்று ஆட்டு மந்தையில் புகுந்து சில ஆட்டைத் தின்றதோடு, இந்தப் புலிக்குட்டியையும் கவ்விக் கொண்டு போயிற்று. அப்போது அந்தக் குட்டி ஆடுபோலக் கத்தியது. புலிக்குட்டி இப்படிக் கத்துகிறதைப் பார்த்து புலி உடனே அதை ஒரு குளக்கரைக்குக் கொண்டு போயிற்று. அங்கே அதன் நிழலையும் தன் நிழலையும் காட்டி, "இதோ பார். நீ ஆடு அல்ல; புலி. என் உருவமும் உன் உருவமும் ஒரே மாதிரி இருப்பதைப் பார். நீ மாமிசம் உண்ணப் பிறந்தாயே ஒழிய இலை கறிக்சப் பிறக்கவில்லை" என்று சொல்லியது; அப்படியும் புலிக்குட்டி ஆட்டைப் போலவே கத்தியது; தான் புலி என்பதை அதனால் நம்ப முடியவில்லை. பிறகு பெரிய புலி அதற்கு மாமிசத் துண்டைத் தந்து தின்னச் சொல்லியது. குட்டி அதைச் சிறிது தின்றது. ரத்தத்தின் ருசியை அறிந்ததும், அதனிடத்தில் இருந்த புலியின் சுபாவம் வெளிப்பட்டது. பிறகு அது மாமிசத்தை ஆவலோடு தின்றது. பெரிய புலியுடன் காட்டுக்குப்





போய்ப் புலியாகவே வாழ்ந்து வந்தது. இப்படித்தான் குருவினுடைய அருள் ஏற்படும் வரையில் நம்முடைய சொரூபம் நமக்குத் தெரிவதில்லை. (வாக்கு)

பாசத் தொடர்பு: ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சாதனை செய்துவந்த காலத்தில் பல பல வகையில் பக்தி செய்திருக்கிறார்; தவம் புரிந்திருக்கிறார். ஒரு சமயம் காட்டுக்குச் சென்று தனியே ஆடை இன்றிப் பூணூலையும் கழற்றி எறிந்துவிட்டுத் தியானத்தில் அமர்ந்திருந்தார். அப்போது ஓர் அன்பர் அவரைக் கண்டார். அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை. தியானம் கலைந்து ராமகிருஷ்ணர் கண் விழித்துப் பார்த்தார். அப்போது அன்பர், "தியானம் செய்வதற்கும் ஆடை முதலியவற்றை எறிந்துவிடுவதற்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டார். "தியானம் செய்பவனுடைய மனத்தில் பாசபந்தமே இருக்கக் கூடாது. ஆசாபாசம், மானுபிமானம், பிராம்மணன் என்ற அகங்காரம் முதலியவைகளுக்கு அறிகுறியாக ஆடையும் பூணூலும் இருக்கின்றன. மானம் முதலியவற்றை அடக்கினால்தான் தியானம் கைகூடும்" என்று பரமஹம்ஸர் கூறினார். (வாழ்வு)

ஞாபகச் சின்னம்

சார்லஸ் பெர்ரால்ட் என்பவர் பதினேழாம் நூற்றாண்டில் பிரெஞ்சு ராஜசபையில் கீர்த்தி பெற்று விளங்கிய ஓர் அறிஞர். அவர் தம் கடைசி நாளில் ஒரு குக்கிராமத்தில் போய்த் தனியாக வசித்து வந்தார். அங்கே அவரைப் பார்க்கப் போன நண்பர்களெல்லாம் திரும்பியபோது, "ஆகா, எப்பேர்ப்பட்ட மேதாவி! - இப்போது புத்தி தடுமாறிவிட்டதே! கிராமவாசிகள் சொல்லும் அசட்டுக் கதைகளையெல்லாம் கேட்டு எழுதிக் கொண்டிருக்கிறாரே, பாவம்!" என்று அநுதாபப்பட்டார்கள்.

பெர்ரால்டின் பழைய கீர்த்தியை எண்ணியாவது அவருக்கு ஒரு ஞாபகச் சின்னம் அமைக்க வேண்டுமென்று அவருடைய பழைய நண்பர் ஒருவர் மட்டும் விரும்பினர். இந்த முயற்சி உருவாகவில்லை. ஆனால் பெர்ரால்டே தம் கீர்த்தி என்றென்றும் அழியாதபடி நிலை நிறுத்திவிட்டார். எப்படி என்கிறீர்களா? கிராமவாசிகள் தம்மிடம் சொன்ன 'அசட்டுக் கதை'களையெல்லாம் தொகுத்து அற்புதமான நூல்களாக வெளியிட்டார் அவை ஆதிகாலம் முதல் பிரெஞ்சு நாட்டில் கர்ண பரம்பரையாக வழங்கி வரும் நாடோடிக் கதைகள்!

அவர் எழுதிவைத்துப் போன காகிதக் கற்றைகளில் என்ன என்ன கதைகள் இருந்தன தெரியுமா?-ஸிண்டிரெல்லா, நீலத் தாடி இந்தமாதிரி உலகப் பிரசித்திபெற்ற குழந்தைக் கதைகள்தான்!

—ஜெரால்டைன் ஷாவெல்ஸன், 'காரோனெட்.'

எதையும் விளக்கும் புள்ளி விவரம்

சமீபத்தில் பம்பாய் சர்க்கார், புள்ளி விவரம் சேகரிக்கப் பொருளாதார நிபுணர் சிலரை நியமித்திருக்கிறார்கள். அந்த மாகாண ஜனங்களின் வருமானம், செலவு விகிதங்களைப் பற்றி வீட்டுக்கு வீடு போய் இவர்கள் ஆராய்வார்கள். இந்தியா முழுதுமே இப்படிச் செய்து பார்த்தால் நலம். இதோடு விலைவாசி, கூலி விகிதம், தொழில் உற்பத்தி, விவசாய உற்பத்தி, வேலையில்லாத் திண்டாட்டம், தேசீய வருமானம் இவற்றின் போக்கையும் ஆராய்ந்து இப்படிப் புள்ளி விவரம் வெளியிட வேண்டும்.

ஐக்கிய அமெரிக்க நாட்டில் 'ஸென்ஸஸ் பீரோ' என்று ஒரு ஸ்தாபனம் இருக்கிறது. அது அந்தச் சர்க்காரின் அங்கிகாரம் பெற்றது. பத்திரிகைக்காரர்களோ பிரசங்கிகளோ யார் வேண்டுமானாலும் அங்கே விசாரித்துத் தங்களுக்கு வேண்டிய புள்ளி விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம். விஞ்ஞானிகளும் பல துறையில் ஆராய்ச்சியிலே ஈடுபட்டிருப்பவர்களும் நடத்தும் பரிசோதனைக்கு, இந்த ஸென்ஸஸ் பீரோ தரும் புள்ளி விவரம் மிகவும் உதவுகிறது. அதை ஆதாரமாகக் கொண்டு தான் சர்க்காரும், சர்க்கார் சம்பந்தப்பட்ட மற்ற ஸ்தாபனத்தாரும் தங்கள் திட்டங்களை வகுக்கிறார்கள். அதோடு ஸென்ஸஸ் பீரோ அப்போதைக்கப்போது பரிசீலனை செய்து தெரிவிக்கும் விவரம், வியாபாரிகளுக்கும் தொழில் உற்பத்தி ஸ்தாபனத்தாருக்கும் பயன்படுகிறது. பொருள் உற்பத்தி செய்வோரும் மொத்தமாக வாங்கி விற்பனை செய்வோரும்; நாட்டில் சில்லறை விற்பனைக் கடைகள் எத்தனை, அவை எங்கெங்கே இருக்கின்றன என்று இதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

பலசரக்குக் கடை ஒன்றில் ஒருவர் குமாஸ்தாவாக இருக்கிறார்; தாமே ஒரு சின்னக் கடை நடத்த வேண்டுமென்று அவருக்கு ஆசை. முதல் போட்டு வியாபாரம் தொடங்குவதற்கு முன் ஸென்ஸஸ் பீரோவுக்கு எழுதினால் அதைப்பற்றிய எல்லாத் தகவலும் அவருக்குக் கிடைக்கும். ஊரில் எந்தப் பாகத்தில் கடை வைத்தால் வியாபாரம் ஓங்கும், எங்கெங்கே இந்த மாதிரி கடைகள் உண்டு, அங்கே விற்கும் சாமான்களின் விலைவாசி என்ன, அங்கே வியாபாரம் எப்படி நடக்கிறது முதலிய எல்லா விவரங்களையும் தெரிந்து கொள்ளலாம்.

போலிஷ் பாஷையில் பத்திரிகை நடத்தவேண்டுமென்று ஒருவருக்கு விருப்பம். உள்ளூரில் எத்தனை பேருக்கு அந்தப் பாஷை தெரியும் என்று அறிய வேண்டுமானால் ஸென்ஸஸ் பீரோவுக்கு எழுதினால் போதும்; அதைப்பற்றிய முழு விவரமும் கிடைக்கும். இப்படி எந்த விதமான புள்ளி விவரத்தை அங்கே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

—'பிஸினெஸ் வீக்'

மாங்காய்



வசந்தம் வந்தது. இளந் தென்றலில் தளிரும் பூவும் ஆடி அசைந்தன. மாங்கிளை மீது ஒரு குயிலின் இன்னிசை கேட்டது. இளைஞர் சிந்தையில் காதல் பிறந்தது. உலகம் எங்கும் மகிழ்ச்சி நிறைந்தது. ஒவ்வொருவர் மகிழ்ச்சியும் வெவ்வேறு விதமாக வெளியாயிற்று.



ஓவியன் வர்ணங்களைக் குழைத்து அழகிய சித்திரம் தீட்டினான். கவிஞன் இனிய சொற்களைக்கொண்டு காவியம் புனைந்தான். அழகிய நங்கை ஒருத்தி மாங்காய் வடிவில் நகைகள் அணிந்து அங்கே நின்றாள்.

இன்று பல இடங்களில் பல வகையில் இந்த மாங்காய் வடிவம் பயன்படுகிறது. இது முதலில் எப்படி வந்தது?

உலகின் இளமை நீங்காத சமயம்; அப்போது வசந்த ருது.

அன்று ஹோலி விழா. இன்னிசையும் கூத்தின் ஆரவாரமும் தென்றலில் கலந்து வந்தன. எங்கும் கலகலவென்று விளங்கியது. வர்ணப் பொலிவுதான் எத்தனை!



கோயிலில் ஆயிரம் ஆயிரம் விளக்குகள் ஏற்றினர். லட்சக்கணக்கில் பக்தர் கூடினர். அன்று அவர்கள் பலியிடும் நன்னாள். நெற்றியில் குங்குமம் இட்டுச் செங்காளை ஒன்று நிமிர்ந்து நின்றது. அதைச் செம் மலர்களால் அலங்கரித்திருந்தனர். புண்ணிய நீரினால் அதைக் கழுவினர்.

காப்பிரைட் : இந்தியன் உமன் (ஆங்கிலம் :



மாலை வந்தது. காளையைப் பலி கொடுத்தனர். ஊற்றுப்போல ரத்தவெள்ளம் குபு குபுவென்று எழுந்து தரையில் பாய்ந்தது. கூட்டத்தின் தலைவன் தன் முஷ்டியை அதில் தோய்த்தான். எல்லார் மார்பிலும் அதை அப்பினன்.

அவர்கள் உள்ளத்திலே உவகை பூத்தது. முகத்திலும் அகத்தின் பொலிவு தெரிந்தது. அது கடவுள் அருளிய புனிதச் சின்னம் என்று அவர்கள் மகிழ்ந்தனர்.



இதுவே யுகம் யுகமாக வந்து மாங்காய் வடிவாய் அமைந்து இன்று எங்கும் விளங்குகிறது. இப்போது ஆடை, அணி, பை, ஜோடு எல்லாவற்றிலும் இந்த மாங்காய் வடிவுதான்!



R.Kothari

ஏப்ரல் '49), அப்போலோ தெரு, பம்பாய்.

பெண்ணின் வலிமை

லேயோன் பினே

> ★ மெல்லியலாள் என்று புலவர்கள் பாடி விடுகிறார்கள். ஆனால், இயற்கையைப் பார்த்தாலோ — ? ★

மனிதர்களில் ஆணுக்கு அதிக வலிமையா பெண்ணுக்கு அதிக வலிமையா என்று வாதம் செய்வது நமது நோக்கமல்ல. பொதுவாக ஆணைவிடப் பெண்ணுக்கு வலிமை குறைவு என்பது தான் உலக அபிப்பிராயம். சில பிராணிகளின் உடல் அமைப்பை ஆராய்ந்து, இந்த எண்ணத்துக்கு எவ்வளவு தூரம் ஆதாரம் இருக்கிறது என்றுமட்டும் பார்ப்போம். பிராணி உலகில் ஆண்களுக்கே உடல் அலங்காரம் அதிகமாக இருப்பதைப் பிரத்தியட்சமாகப் பார்க்கிறோம். ஆண்சிங்கம் பிடரி மயிருடன் கம்பீரமாய்க் காட்சி அளிக்கிறது. கலைமான் கிளை கிளையாகப் பரவியுள்ள கொம்புகளோடு அழகிய தோற்றம் அளிக்கிறது. ஆண் மயிலுக்கே அழகிய தோகை உண்டு. சேவலே அழகிய கொண்டையோடும் பல நிற இறக்கைகளோடும் விளங்குகிறது. ஆனாலும் பெண்ணுக்குத் தான் உடலமைப்பில் சிக்கலான பல வேறுபாடுகள் இருக்கின்றன. பெண் இனத்தைவிட ஆண் இனமே உருவில் பெரிதாயும் உயரமாயும் இருக்கிறதென்று பொதுவாக எண்ணுகிறோம். ஆனால் எல்லாப் பிராணிகள் விஷயத்திலும் இது சரியென்று சொல்லிவிட முடியாது. உதாரணமாக, மத்தியதரைக் கடலோரங்களில் போனலி என்ற கடற்புழு ஒன்று உண்டு. அந்த வகையில் ஆண் புழுவைவிடப் பெண்புழு பல மடங்கு பெரிது. சின்னஞ்சிறு பூச்சி வகையிலும் ஆண்தான் பெரும்பாலும் பெண்ணைவிடச் சின்னது. கறையான்களில் ராணி, ராஜாவைவிடப் பெரிதாக இருக்கும். பெண் சிலந்தியைப் பார்த்துவிட்டு ஆண் சிலந்தியைப் பார்த்தால் மிகவும் அற்பமாகத் தோன்றும். சிலவகை மீன்களில் ஆண்மீனைவிடப் பெண் மீனே பெரிதாக இருக்கும். ஆண் நண்டு பெண் நண்டைவிட மிகச் சிறியது. தென் அமெரிக்காவில் ஊர்ந்து செல்லும் சில பிராணி வகையிலும் இப்படித்தான்.

இப்படி உருவில் பெரிதாக இருக்கும் பெண் இனத்தைச் சேர்ந்த ஜந்துக்களுக்குத் தடையை எதிர்த்து நின்று சமாளிக்கும் ஆற்றல் அதிகமாக இருக்கிறது. நீரில் வாழும் தர்பனி என்ற தெள்ளுப் பூச்சி வகையில் பெண்பூச்சி, தன் மீது ரச கர்ப்பூரம், பூக்கந்தகம், சுண்ணம்பு இவை பட்டாலும் இவற்றின் எரிச்சலைத் தாங்கும். சில வண்டுகளைப் பட்டினி போட்டுச் சூரிய வெளிச்சத்தில் வைத்தால், அவற்றில் ஆண் 38 டிகிரி வரையிலும்

மூலம்: மெர்க்யூர் தெ பிரான்ஸ் (பிரெஞ்சு), பிரான்ஸ்.

தாங்கும்; பெண்ணோ 49 டிகிரி வரையில் சகித்துக்கொண்டிருக்கும்.

பெண்ணுக்கு ஆற்றல் அதிகம் இருந்தாலும் அது தன் காம இச்சையை வெளிப்படுத்தாது; அதைப் பூர்த்தி செய்யவும் தானே முந்திக் கொள்ளாது. மக்களினத்தைப் போலவே பிராணி உலகிலும், பெண்ணுக்கு அச்சமும் நாணமும் அடக்கமும் உண்டு. காம இச்சை உள்ள ஆண் இதர ஆண்களுடன் போராடி வெல்லவேண்டும். நீண்ட நேரம் நடனமாடிக் காதல்கீதம் பாடினால் தான் பெண் இணங்கும். சில வேளை தான் விரும்பும் பெண்ணுக்கு ஏதாவது பொருளைக் கொடுத்தும் அதன் மனத்தைக் கவரும். இதுதான் ஆணின் வேலை. ஆனால், செல்லஸ் விராகோ என்ற ஒருவித ஈ வகையில் பெண்தான் இந்த விஷயத்தில் முந்திக்கொள்கிறது. ஆண் சில சமயம் பெண்ணைப்போல நாணிக் கூசுவதும் உண்டு.

மின்மினிப் பூச்சிகளில் பெண் தான் ஆணைவிட அதிகமாக மினுமினுக்கிறது. லாம்பீர் நாக்திலுக் என்னும் மின்மினி வகையில் பெண்ணின் வயிற்றுப்புறத்திலிருந்து பளிச்சென்று ஒளி வீசுகிறது. ஆணின் ஒளி சிறிது மங்கலாக இருக்கும். ஆனால் அதன் கண்களும் இறக்கைகளும் பெரியவை. பெண்ணின் ஒளியைத் தொலைவிலிருந்து பார்த்து அதை விரைவில் அடைவதற்கு அவை உதவும்.

ஒளி வீசும் பூச்சிகளில் சில, மின்மினியைவிட அலங்காரமாக இருக்கும். அந்த வகையில் பெண்களுக்குத் தலையில் சிவந்த ஒளியும் வீசும்.

ஆண் பூச்சிகளில் சில பாடும். பெண் சுவர்க்கோழி ஊமையாய் இருக்கும். ஆண் சுவர்க்கோழி சங்கீதம் பாடிப் பெண்ணை அழைக்கும். ஆனால் சில பூச்சிகளில் பெண்தான் ஆணைப் பாடி அழைக்கும்.

சில பெண்பூச்சிகளுக்குப் பாடவும் வராது, ஒளி வீசவும் சக்தி இல்லை. ஆனால் ஆணைக் கவரும் அதிசய சக்தி உண்டு. பெண்மயிலைக் கூட்டில் அடைத்தால் போதும்; அதைத் தேடிக்கொண்டு தொலைவிலிருந்து கும்பல் கும்பலாக ஆண் மயில்கள் வந்துவிடும்.

பல்பியானி என்ற ஆராய்ச்சியாளர் அட்டைப்பெட்டி இரண்டு கொண்டு வந்தார். திறந்த பெட்டியில் சில ஆண் வண்ணத்திப் பூச்சிகளை வைத்தார். மற்றொன்றில் பெண் பூச்சிகளை வைத்தார். சிறிது நேரமானதும் பெண்பூச்சிகள் உள்ள பெட்டியின் மேல்மூடியைமட்டும் ஆண் பூச்சிகள் உள்ள பெட்டியின்மேலே கொண்டு வந்தார். மூடியை ஏறக்குறைய முக்காலடி உயரத்துக்குக் கொண்டு வரும்போதே, கீழே உள்ள பெட்டியில் இருந்த ஆண் பூச்சிகள் கலக்கம் அடைந்தன; சிறகடித்துக் கொண்டன; வயிற்றை அசைத்தன. பெண் பூச்சிகளின் வாடை அடிக்கும் அந்த மூடியை அப்புறப்படுத்தியதும் ஆண்களின் கிளர்ச்சியும் அடங்கியது.

'பெண்ணைவிட ஆணின் தசைநார் மிகவும் உறுதியாக இருக்கும். இரண்டும் சேரும்போது பெண் ஆணுக்குப் பலியாகிவிடுகிறது' என்று எண்ணுவதற்கு ஆதாரம் இல்லாமல் போகவில்லை. ஆரால் என்னும் கடல் மீன் வகையில் ஆண் உண்மையாகவேகொலையாளிமாதிரி நடந்துகொள்கிறது. இரண்டும் சேரும்போது ஆண், பெண்மீனைக் கடித்துக் கிழிக்கிறது. பிறகு பெண்,

அடியோடு சக்தி இழந்து மிக வும் வேதனைப்படும். அதை அலை அடித்துக்கொண்டு போய் விடும். ஆண்தவளை பெண்ணைத் தழுவும்போது கெட்டியாகப் பிடித்துக்கொள்ளும். பெண் சில சமயம் மூர்ச்சித்து விழும்.

ஆனல் வேறு சில ஜந்துக்களில் பெண்ணே ஆணைக் கொலை செய் கிறது. சிலந்திப் பூச்சிகளில், பெண் சிலந்தி ஆணுடு சேர்ந்த பிறகு அதை விழுங்கிவிடும். செரோமியா பெமோராடா என்னும் பிராணி வகையில் ஆணும் பெண்ணும் சேர்ந்த பிறகு ஆண் உலர்ந்து வாடி இறந்துவிடும். ஆணின் ஜீவ சக்தியைப் பெண் வாய் மூலம் உறிஞ்சிவிடுகிறது. தேனீக்களில் ஒரே ஓர் ஆண் மட்டுமே ராணி ஈயோடு சேரும். பிறகு அந்த ஆண் தேனீ இறந்துவிடும்.

இதிலிருந்து விலங்கு, பூச்சி வகையில் ஆணுக்குப் பெண் தாழ்ந்த தல்ல என்று தெரிந்துகொள்ளலாம்.

பையன் தந்த குட்டிப் பென்சில்

1915-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் பம்பாயில் காங்கிரஸ் மகாசபை நடந்தது. என் நேரத்தில் பெரும் பகுதியைப் பாபு வுடன் கூடவே கழித்து வந்தேன். ஒரு நாள் ஏதோ ஒன்றைக் காணுதது போலவும் அதற்காக அவர் பெரிய அவஸ்தைப் படுவது போலவும் தோன்றிற்று.

"பாபுஜி, என்ன தேடுகிறீர்கள்?" என்று நான் கேட்டேன்.

"என் பென்சில் ஒன்று; சிறியதாயிருக்கும்" என்ருர்.

என் பையிலிருந்து ஒரு பென்சிலை எடுத்து அவரிடம் கொடுக்கப் போனேன். பாபு, "வேண்டாம், வேண்டாம். அந்தச் சின்னப் பென்சில்தான் எனக்கு வேண்டும்" என்ருர்.

"இதை வைத்துக்கொள்ளுங்கள். பிறகு உங்கள் பென்சிலையும் தேடிக் கொடுக்கிறேன். உங்கள் நேரம் வீணுகப் போகிறதே" என்றேன்.

பாபு, "அந்தச் சிறிய பென்சில் கெட்டுப்போகக் கூடாது. உமக்குத் தெரியாது. அது எனக்கு மதராசில் ஜி. ஏ. நடேச னுடைய சிறிய பையன் கொடுத்தது. அவன் எவ்வளவு அன்போடு கொண்டுவந்து கொடுத்தான்! நான் அதைத் தொலைப்பதாவது" என்ருர்.

பிறகு நாங்கள் இருவருமாக அந்தப் போக்கிரிப் பென்சிலைத் தேடலானோம். அதைக் கண்டுபிடித்த பின்பே பாபுவுக்குச் சமாதானம் ஏற்பட்டது. அது ஓர் அங்குல நீளங் கூட இல்லை.

—காகா காலேல்கர், 'கதர் மலர்.'

ஜோஸ்யன் சொன்னது

சால்கஸ் என்ற கிரேக்கரைப் பார்த்து ஒரு ஜோஸ்யன், "நீங்கள் இன்ன தினத்தில் இறந்துவிடுவீர்கள்" என்று ஒரு நாள் குறிப்பிட்டான். அந்த நாள் வந்தது; இரவு பன்னிரண்டடிக்கும் சமயம். ஆனலும் அவர் சாகவில்லை. ஜோஸ்யன் சொன்னதை நினைக்க நினைக்க அவருக்குச் சிரிப்புப் பொங்கிவந்தது. உடனே கப்பென்று மாரடைத்து இறந்துவிட்டாராம்.

வைத்திய மந்திரி 'பொய்' என்கிறார். ஆனால் டாக்டர்கள் சொல்வதோ வேறு விதம்.

புனித கங்கை

கங்கை நீருக்கும் ஸோன் நதி நீருக்கும் நோயைத் தீர்க்கும் சக்தி உண்டு என்று பொதுவாக எல்லாரும் நம்புகிறார்கள். இதுபற்றிப் பிஹார் சுகாதார இலாகா 1917, 1923 இந்த வருஷங்களில் பரிசோதித்துப் பார்த்ததாம். அதிலிருந்து இந்த நம்பிக்கை தவறு என்று தெரிந்துவிட்டதாக இந்தியப் பார்லிமெண்டில் சுகாதார மந்திரி ராஜகுமாரி அமிர்த கௌர் சொன்னார்.

ஆனால் இதே விஷயம் பற்றி மேல்நாட்டு விஞ்ஞானிகள் பரிசோதனையில் கண்டறிந்த பின்வரும் விவரங்களை ஸ்ரீ கே. பரமேசுவரன் என்பவர் 'ஸ்டேட்ஸ்மன்' பத்திரிகையில் எழுதியிருக்கிறார்:

கானடா சர்வகலாசாலையைச் சேர்ந்த டாக்டர் எப். வி. ஹாரிஸனுடைய ஆராய்ச்சியின் முடிவு இது: "கங்கா ஜலத்தில் காலராக் கிருமிகள், ஐந்து மணி நேரத்துக்குள்ளேயே இறந்துவிடுகின்றன. காலராவில் செத்த பிணங்கள் கங்கையில்தான் வந்து சேருகின்றன. ஆயிரக்கணக்கான இந்தியர்கள் வேறு அதில் குளிக்கிறார்கள். அப்படி இருந்தும் ஹிந்துக்கள், 'கங்கை நீர் பரிசுத்தமானது; பயமில்லாமல் அதைக் குடிக்கலாம்! அதில் ஸ்நானமும் செய்யலாம்' என்கிறார்கள். அந்த நம்பிக்கையைத் தற்காலக் கிருமி ஆராய்ச்சியும் ஊர்ஜிதம் செய்வது ஆச்சரியம்!"

பிரசித்தி பெற்ற பிரெஞ்சு டாக்டர் டி. ஹாரெல்லும் இது போலவே சோதனைகள் செய்து பார்த்தார். காலரா, சீதபேதியினால் இறந்தவர்களின் பிரேதங்களைச் சுற்றிச் சில அடி தூரம்வரை லட்சக்கணக்கான கிருமிகள் இருக்கும். ஆனால் கங்கை நீரில் உள்ள பிணங்களைச் சுற்றி இப்படி ஒரு கிருமி கூட இல்லை என்று தெரிந்தது. பிறகு அவர் இந்த நோய் கண்டவர்களிடமிருந்து கிருமிகளைக் கொண்டு வந்து அவற்றின்மேல் கங்கை ஜலத்தை விட்டுப் பார்த்தார். சிறிது நேரம் அப்படிச் செய்தபின் அந்தக் கிருமிகள் அடியோடு அழிந்து போய்விட்டதைக் கண்டு அவர் ஆச்சரியம் அடைந்தாராம்.

வி. இ. நெல்சன் என்ற பிரிட்டிஷ் டாக்டர், "இங்கிலாந்து செல்லும் கப்பல்களில் கங்கை முகத்துவாரத்திலுள்ள ஹுக்ளி நதியிலிருந்து வேண்டிய தண்ணீர் கொண்டு போகிறார்கள். இந்தக் கங்கை நீர் இங்கிலாந்து செல்லும் வரையில் துளிகூடக் கெட்டுப் போவதில்லை; பரிசுத்தமாகவே இருக்கிறது. ஆனால் இந்தியாவுக்கு வரும் கப்பல்களில் லண்டனி

காப்பிரைட் : பிரீ இந்தியா (ஆங்கிலம் : 8-4-'49), சென்னை.

விருந்து கொண்டுவரும் தண்ணீர் பம்பாய் வருகிறவரைக்குங்கூடச் சுத்தமாக இருப்பதில்லை. பம்பாயி லிருந்து கல்கத்தாவுக்கு ஒரு வாரப் பிரயாணம். ஆகவே போர்டு செயது, சூயஸ் அல்லது ஏடென் இந்த மாதிரி ஏதாவது துறைமுகத்தில் புதிதாகத் தண்ணீர் எடுத்தே தீர வேண்டும்'' என்கிறார்.

மற்ற நதிகளில் காணமுடியாத இந்தச் சிறப்பைக் கண்டு, கங்கையை இந்தியர்கள் புனிதமானது என்றும், தெய்விக சக்தி நிறைந்தது என்றும் கருது வதில் ஆச்சரியமில்லை. ஒரு நோய்க் கிருமிகூடக் கங்கை நீரில் வாழ முடியாது. மேல் நாட்டிலுள்ள அநேக வைத்தியர்கள் இந்த நீர் சரும வியாதிக்கு ஏற்ற மருந்து என்று சொல்கிறார்கள்.

சர்ச்சிலும் சப்தவேதி குண்டும்

சப்தம் வந்த திசையை நோக்கிப் பாயும் சப்தவேதி என்ற அம்பை விட்டான் தசரதன். அது பட்டு மாண்ட முனிவரின் சாபமே அவனுடைய புத்திர சோகத்துக்குக் காரணம் என்பது ராமாயணக் கதை. இது போலவே யுத்த காலத்தில் நடந்த பின் வரும் கதை, லண்டன் 'ஸ்டிராண்ட்' பத்திரிகையில் வெளியாகி யிருக்கிறது:

சப்தம் வந்த திசையை நோக்கிப் பாயும் நூதன ஆகாச வாணக் குண்டு ஒன்றைப் பிரபல விஞ்ஞானி ஒருவர் செய்து முடித்தார். அதைப் பரீட்சை பார்ப்பதற்காக, பிரிட்டிஷ் பிரத மர் சர்ச்சில் போனார். ஒரு குண்டை மைதானத்தில் வைத்துக் கொளுத்திக் கிளப்பிவிட்டார்கள். அது கிளம்பிய சமயத்தில் சர்ச்சிலும் அவருடன் இருந்த சில சகாக்களும் சந்தோஷ ஆர வாரம் செய்தார்கள். உடனே அந்தக் குண்டு இவர்களை நோக்கித் திரும்பிப் பாயத் தொடங்கிவிட்டது. பக்கத்தில் இருந்த ஒரு மரத்தை நோக்கிச் சர்ச்சில் ஓட்டமாய் ஓடிக்கொண்டே, "இவன் நாசமாய்ப் போக! நாசமாய்ப் போக! மேல்மூடி இல் லாமல் திறந்த ஜீப் காரில் இவனை வீட்டுக்கு விரட்டுங்கள்!" என்று கத்தினார். அப்படியே மந்திரிகளெல்லாம் ஜோரான கார் களில் லண்டனுக்குத் திரும்பியபோது, அந்த விஞ்ஞானி உட் கார யாரும், எதிலும் இடந்தரவில்லை. எல்லாக் கார்களுக்கும் பின்னால் திறந்த ஜீப் காரிலேயே அவர் வந்தார்.

மூளையின் வேலை

மனிதனின் மூளை அற்புதமான ஓர் உறுப்பு. ஒருவன் பிறந்த கணத்திலிருந்து அது வேலை செய்யத் தொடங்குகிறது. அப்புறம் ஓய்வதேயில்லை. ஆனால், அவன் எப்போது முதல் முதலாகப் பொதுக்கூட்டம் ஒன்றில் பிரசங்கம் செய்ய எழுந்து நிற்கிறானோ, அந்த நிமிஷத்திலே அது நின்றுவிடுகிறது.

—'டப்ளின் ஒபினியன்'

இன்று இந்திய யூனியனில் சேர்ந்திருக்கும் நிஜாம் ஸம்ஸ்தானத்தில்தான் எத்தனை தொழில்கள்!

தொழிலில் சிறந்த ஹைதராபாது

ஹைதராபாது ஸம்ஸ்தானத்தில் லட்சக்கணக்கான ஜனங்களுக்குக் குடிசைத் தொழில் ஜீவாதாரமாய் இருக்கிறது. கைநெசவுத் தொழில் ஒன்றிலேயே பத்து லட்சம் பேர் இருக்கிறார்கள். ஸம்ஸ்தானத்தில் மூன்றில் ஒரு பங்கு ஜனங்கள் இந்தக் கைநெசவுத் துணிகளையே உடுக்கிறார்கள். சமீபத்தில் ரஜாக்கரின் அட்டூழியத்தால் அநாதைகளாகிவிட்ட பலருக்கு, ஹைதராபாது சர்க்கார் பலவிதங்களில் உதவி வருகிறார்கள். குடிசைக் கைத்தொழில்களில் அவர்களை அமர்த்தியிருக்கிறார்கள். இதனால் பெண்கள், சிறுவர், சிறுமிகள் எல்லாரும் வீட்டுத் தாழ்வாரத்தில் உட்கார்ந்தபடியே பணம் சம்பாதிக்க முடியும். இந்த இலாகாவைச் சேர்ந்த கடைகளில் இப்படி ஐந்து லட்ச ரூபாய் மதிப்புள்ள சரக்கை விற்றுக்கொடுத்திருக்கிறார்கள்.

இங்கே செய்யும் சாமான்கள் அழகாக இருக்கும்; உபயோகமானவை; அதோடு மலிவு. இவற்றை உலகக் காட்சிச்சாலைகளில் வைத்திருக்கிறார்கள். அயல் நாட்டிலும் நம் நாட்டிலும் புகழ்பெற்றவை. இந்தச் சாமான்களை லண்டன் கைத்தொழில் காட்சிக்கு இந்த வருஷம் அனுப்பினார்கள்; பிரஸ்ஸெல்ஸுக்கும் அனுப்பினார்கள். இந்தத் தொழில் பழமையானது; ஹைதராபாது சர்க்கார் 18 வருஷ காலமாக ஆதரிக்காமல் விட்டிருந்தால் இது அடியோடு அழிந்து போயிருக்கும்.

இங்கே கைத்தொழில்களில், கைநெசவு, விரிப்புக்கள் நெய்வது, பொம்மைகள் செய்வது, தச்சு வேலை, சாயத் தொழில், பின்னல் வேலை, கம்பளி நூல் தையல், பிரம்பு வேலை, மேஜோடு பின்னல், தோலினால் செய்யும் வேலை இவை முக்கியமானவை.

வேளைக்கொரு தினுசாக உடை மாற்றும் நாகரிகத்துக்கும் இந்தக் குடிசைத் தொழிலுக்கும் சம்பந்தம் உண்டு. தங்கள் வேலைத் திறமையை யெல்லாம் நெசவாளிகள் அதில் காட்டுகிறார்கள். இதனால் ஜனங்களும் அதை ஆதரித்து அவர்களுக்கு ஊக்கம் அளிக்கிறார்கள். சர்க்கார் உற்சாக மூட்டுவதால் தொழிலாளிகள் எல்லாரும் தங்கள் சரக்கைச் சர்க்காருக்கே விற்று விடுகிறார்கள். இடையே பேராசை பிடித்த தரகர்களுக்கும் கமிஷனுக்கும் இடம் இல்லை.

இப்படி வாங்கும் சர்க்கார் டெப்போவுக்கு ஹைதராபாத்தில் ஒரு கிளையும் ஔரங்காபாத்தில் ஒரு காட்சிச்சாலையும் இருக்கின்றன. நவீன முறையில் கைத்தொழிலுக்குப் பயிற்சி கொடுக்க 'ஸென்டிரல் டெக்னிக்கல் இன்ஸ்டிட்யூட்' இருக்கிறது; நல்லகொண்டா, வாரங்கல்,

காப்பிரைட்: ஆந்திர பத்திரிகா (தெலுங்கு), சென்னை.

ராய்ச்சூர், கரீம்நகர், நாந்தேட், பர்பணீ, ஔரங்காபாத், குல்பர்க்கா, மேடக் இந்த நகரங்களில் எல்லாம் கைத்தொழில் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன.

பொன், வெள்ளி லேஸ் வேலை களுக்கு வெகு காலமாக ஔரங்கா பாது, பைடண் ஜில்லாக்கள் பெயர் போனவை. 'காம்காப்' என்னும் சரிகைப் பூ வேலை செய்த துணி உலகத்திலேயே புகழ் பெற்றது. 1609-இல் கோல்கொண்டாவை ஆண்டுவந்த குதுப்ஷாஹியின் தர் பாருக்குப் பாரசிக தூதன் ஒருவன் வந்தான். அவன் 'காம்காபை'த் தன்னுடன் ஊருக்கு எடுத்துச் சென்றான். அதைச் செய்து முடிக்க, பைடண் ஜில்லா வில் இருந்த தறி எல்லாம் ஐந்து வருஷங்கள் ஓயாமல் வேலை செய்த தாம். பொன் வெள்ளி இழைகளைக் கொண்டு துணிகளில் பூ வேலை செய்யும் வஸ்திரங்களைக் 'காம்காப்' என்கிறார்கள். இவற்றைத் தாவணி யாகவும் தலைப்பாகைகளாகவும் கல்யாண சமயங்களில் உபயோ கிக்கிறார்கள். 'காம்காப்' புடைவை கள்கூட நெய்வது உண்டு.

பட்டு விரிப்பு நெய்யும்போது, வாரங்கல் பருத்தி நூலையும் பட்டு நூலையும் கலந்து நெய்வது இங்கே வழக்கம். இதில் டோரியாக்களும் கட்டங்களும் பூக்களும் கொடிக ளும் போடுவார்கள்.

ஆண்கள் உபயோகிக்கும் துணியை 'ஹிம்ரூ' என்றும் பெண்களின் உடையை 'மஷ்ரூ' என்றும் சொல்லுகிறார்கள். சரி கைப் பூக்கள், சித்திரங்கள் சேர்த்தும் நெய்கிறார்கள். இதில் 'ஜாலர்', 'ஜலதார்' என்று இரண்டு வகை. இப்பொழுது ஜாலர்களுக்குக் கிராக்கி அதிகம். இதன் கரைகளை ஓர் இழை பட்டு, ஓர் இழை பொன் அல்லது வெள்ளி இழையாகக் கலந் தும், பல வர்ணமுள்ள நூல்களைக் கலந்தும் தயாரிக்கிறார்கள். கரைக ளுக்கு மட்டும் தனித் தறியை உப யோகிக்கிறார்கள். இதில் சரிகை யால் கொடிகள் போலவும் நெய்கி றார்கள். இது புடைவை, தலை யணை உறை, அயல் நாடுகளில் பெண்களின் கைப் பை இப்படிப் பலவிதங்களில் உபயோகமாகிறது. இந்தக் காலத்தில் மேஜை விரிப்பாகவும் இது பயன்படுகிறது. ஒரு சிறிய துண்டுகூட ஆயிரம் ரூபாய் மதிப்புள்ளதாக இருக்கும்.

பைடணிலும் ஔரங்காபாத்தி லும் சரிகை தயாரிக்கும் விதமே அதிசயமாயிருக்கும். மேலிருந்து அடி வரையில் சல்லடைக் கண் போல் துளையிட்ட ஏழு அங்குல நீளம் உள்ள வெள்ளித் தகடுகளை எஃகுப் பலகையில் பொருத்தி விடுகிறார்கள். இந்தப் பலகை களிலுள்ள துளைகளின் வழியே பொன்னை மெல்லிய நூலாக இழுக் கிறார்கள். நூற்றுக்கணக்கான கஜங்கள் வேண்டுமென்றாலும் இப் படி இழுத்து எடுக்கிறார்கள். பிறகு இதை 'காம்காப்' மேல் 'ப்ராகேட்' வேலைக்கு உபயோகிக் கிறார்கள்.

இது தவிர, ஆரமூர், ஸித்திபேட் டைப் பட்டுப் பீதாம்பரங்கள், நாரா யணபேட்டையில் தயாராகும் கனத்த கரை உள்ள புடைவைகள், கொப்பால், சின்ஹால், குல்பர்க்கா இந்த இடங்களில் தயாரிக்கும் பூ வேலை செய்த ரவிக்கைகள், ஸங்கா ரெட்டி பட்டு, ஜால்ணு பட்டு இவை யும் பிரசித்தி பெற்றவை. நல்லகொண்டாவிலும் வாரங்கல்லி லும் புந்தானீ உருமால்கள் தயா ராகின்றன.

வாரங்கல் கட்டம் போட்ட விரிப்புக்களும் திவாசிகளும் இந்தியாவுக்குள்ளேயே சிறந்தவை. ஐரோப்பியக் கைத்தொழில் காட்சிகளில் இவற்றை ஏராளமாக வாங்குகிறார்கள். 1851-இல் இவை உலகத்திலேயே சிறந்தவை என்று லண்டன் காட்சிச்சாலையில் பெயரெடுத்தன. திவாசிகள் நெய்வது முக்கியமாக 'ஷேக்'களின் வேலை. இவர்கள் பாரசிகத்திலிருந்து வந்தவர்கள். திவாசிகளுக்குப் பட்டு, பருத்தி, கம்பளி நூல் மூன்றையும் சேர்க்கிறார்கள். கம்பளிகளிலும் திவாசிகளிலும் இடையிடையே தடித்த பல நிறக் கம்பளி நூல்களை இசைத்து இருக்குவார்கள். இவற்றில் பாரசிக மோஸ்தரில் சித்திரங்கள் இருக்கும்; இவை 15 கஜநீளம் வரையில் இருக்கும். ஒரு கஜத்திலிருந்து அரை கஜம் வரையில் அகலம் இருக்கும். மலிவான கம்பளிகளும் இங்கே கிடைக்கும். மஹபூப்நகர், மக்தல் பட்டணங்களில் தயாராகும் துப்பட்டிகள் பிரசித்தமானவை.

பீதர் பாத்திரத்தொழில் மிகவும் முக்கியமானது. கறுத்த பாத்திரங்களின்மேல் வெள்ளி நகாசு வேலை செய்திருக்கும். பீதர் கோட்டையைச் சேர்ந்த ஆபரணங்களைப்போல் சித்திரங்களை இவற்றின் மேல் வரைந்திருப்பார்கள். பிராணிகளின் உருவங்களை அதிகமாக வரைவதில்லை. ஆனால் தண்ணீர் எடுக்க உபயோகிக்கும் பாத்திரங்களின்மேல் மீன்களின் உருவம் வரைவது வெகு காலைய வழக்கம்.

துத்தநாகத்தையும் தாமிரத்தையும் கலந்து வார்த்த உலோகத்தினால் இந்தப் பாத்திரங்களைச் செய்கிறார்கள். பீதர் என்ற ஊரில் கிடைக்கும் ஒரு வகை மண்ணால் இவைகளைத் தேய்த்தால் அழகிய கருமை நிறம் வந்துவிடுகிறது. கருமை பளபளக்கும் பாத்திரங்களின்மேல் சரிகைப் பூ வேலை செய்கிறார்கள். மெருகிட்டபின் பாத்திரத்தை உலையில் சுட்டுப் பீதரில் கிடைக்கும் அபூர்வ மண்ணால் தேய்ப்பார்கள். பாத்திரம் முழுதும் நிகு நிகுவென்று மின்னும். நடுவில் பொன், வெள்ளி வேலைப்பாடுகள் ஜொலிக்கும்.

இந்த உலோகத்தில் பூங்கொத்துக்களை அலங்காரமாக வைக்கும் பல வகைப் பாத்திரங்கள், பெரிய தட்டுக்கள், சிகரெட் பெட்டிகள், பரணிகள், கங்கணங்கள், பித்தான்கள், குட்டிக் கிண்ணங்கள் முதலிய பல பொருள்களைத் தயாரிக்கிறார்கள்.

'பிலிக்ரீ' வேலைக்கும் கொடி வேலைக்கும் கரீம்நகர் வெகு காலமாகப் பெயர்போனது. இந்த வேலை இப்போது அபூர்வமாகி விட்டது. சில நிபுணர்கள் இப்போது இதைச் செய்கிறார்கள். வெள்ளி இழைகளினால் பல தினுசில் வேலைப்பாடு செய்வதில் இவர்கள் சமர்த்தர்கள்.

ஸம்ஸ்தானத்தில் விளையாட்டுப் பொம்மை செய்யும் தொழில் மும்முரமாக நடக்கிறது. அந்தத் தொழிலாளிகளுக்கும் இதனால் நல்ல வரும்படி. ஆதிலாபாது ஜில்லாவைச் சேர்ந்த 'நிர்மல்' இந்தத் தொழிலுக்குப் பெயர் போனது. குச்சிகளையும் காகிதங்களையும் மண்ணையும் சேர்த்து இந்தப் பொம்மைகளைத் தயாரிக்கிறார்கள்; இவற்றின் ஒவ்வொரு நுண்ணிய பாகமும் தெளிவாகத் தெரியும்படி அழகாகச் செய்கிறார்கள். இவற்றில் பிராணிகள், பறவைகள், பூக்கள், கிராமத் தோற்றம் எல்லாம் உண்டு.

ஹைதராபாத் ஸம்ஸ்தானத்தில் வருஷந்தோறும் லட்ச ரூபாய் வருமானம் உள்ள பித்தான்கள் தயாராகின்றன. அவற்றில் பீதர், முத்து இந்த இரண்டினாலும் செய்தவை மிகவும் அழகாக இருக்கும். பொன், வெள்ளி, கொம்பு, எனமல் இவையும் இந்தத் தொழிலுக்குப் பயன்படுகின்றன.

இங்கே தந்த வேலையும் செய்கிறார்கள். கொம்புகளால் சீப்பும் மற்றும் பல சாமான்களும், பிரம்பினால் நாற்காலிகளும் சோபாக்களும் மேஜைகளும் கூடைகளும் செய்கிறார்கள்.

ராய்ச்சூர், பீதர், ஹைதராபாது இந்த இடங்களில் தோலினால் ஆன பல பொருள்கள் தயாரிக்கிறார்கள். இப்படிப் பலவிதமான கைத் தொழில்களில் ஹைதராபாது இன்று இந்தியாவுக்குள்ளேயே சிறந்து விளங்குகிறது.

காட்டில் கண்ட சுந்தரி

இரண்டு நண்பர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"என்னிடம் ஓர் அபூர்வமான பச்சைக்கிளி இருந்ததே; அதைப்பற்றி உனக்குச் சொல்லியிருக்கிறேனா? மனிதனைப் போலவே அறிவு அதற்கு" என்றான் முதல் நண்பன்.

"இல்லையே. முன்னே குரங்கு ஒன்று வளர்த்ததாகச் சொல்லியிருக்கிறாயே தவிர இதைப்பற்றிச் சொல்லவில்லை."

"சரி, சொல்கிறேன் கேள்: நான் அந்தப் பச்சைக் கிளியை எடுத்துக்கொண்டு ஒரு காட்டுக்குப் போயிருந்தேன். அதை இஷ்டம்போல் சுற்ற விட்டுவிட்டு நான் ஓர் இடத்தில் உட்கார்ந்திருந்தேன். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அது பரபரப்போடு என்னிடம் பறந்து வந்தது. என் காதோடு காதாக, 'எசமான்! என்ன அழகான பெண்பிள்ளை!' என்று சொல்லிவிட்டுப் பறந்து போய்விட்டது. முதலில் எனக்கு ஒன்றும் புரியவில்லை. இரண்டு நிமிஷம் கழித்து மறுபடியும் வந்து என் காதருகில், 'ஆகா! அவளுக்குத்தான் என்ன ஒய்யாரம்!' என்றது. என் பாலிய நினைவை அது கிண்டிவிட்டது; என் யௌவனமும் திரும்பிவிட்டது. நான் கிளி போன பக்கம் தலை தெறிக்க ஓடினேன்; புதர், முள் எதையும் சட்டை செய்யவில்லை. அந்த அழகியைக் கண்ணால் பார்க்கவேண்டும் என்ற ஒரே ஆவல்தான். பாதி வழியில் கிளி மறுபடியும் வந்து, 'அடாடா! என்ன தளுக்கு, என்ன மினுக்கு அவளுக்கு!' என்றது. முன்னைவிடத் தலை கால் தெரியாமல் அந்த அழகியைப் பார்க்க ஓடினேன். கடைசியில் பார்த்துவிட்டேன், ஐயா, அந்தத் தளுக்கு, மினுக்கு, ஒய்யாரம் எல்லாவற்றையும்!" என்றான்.

மற்றவன், "அங்கே இருந்தாளா ஒருத்தி? யார் அவள்?" என்று கேட்டான்.

"அதுவும் ஒரு பச்சைக் கிளி."

—லண்டன் ஒபினியன்.

ஆளும் முறை

பாணபட்டன்

ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தவர்களுக்குப் பலவித சபலங்கள் ஏற்படும். அதிகார மமதை அவர்களின் கண்ணை மறைக்கும்; புத்தியைக் கெடுக்கும். சூழ்ச்சிக்காரர்கள் அவர்களைச் சூழ்ந்து கொள்வார்கள். இதையெல்லாம் இன்றும் கண்ணுக்கு முன்னே காண்கிறோம். வெகு காலத்துக்கு முன்னேயே 'காதம்பரி' என்ற அபூர்வமான காவியத்தில் இந்த ஸம்ஸ்கிருதக் கவிஞர் எவ்வளவு அழகாக இதை எச்சரிக்கிறார்!

தாராபீடன் என்னும் அரசனுடைய மகன் சந்திராபீடன். அவனுக்கு முடி சூட்டும் வயது வருகிறது. அப்போது ஒரு நாள் மந்திரி சுகநாஸனைச் சந்திராபீடன் காண வந்தான். சுகநாஸன் அவனை வரவேற்று, சில நல்ல வார்த்தைகளை அவனுக்குச் சொன்னான்:

"அப்பா சந்திராபீடா, உனக்கு எல்லாம் தெரியும்; எதையும் உபதேசிக்க வேண்டியதில்லை. ஆனாலும் ஒன்று சொல்கிறேன்: யௌவனம் என்பது இருள் சூழ்ந்த பருவம். அதன் ஆரம்பத்தில் படித்துப் பரிசுத்தமான மனத்திலேகூட மாசு படிந்துவிடும். சூறுவளியில் சிக்கின உலர்ந்த சருகுபோல் யௌவன உணர்ச்சி மனிதனைக் கண்ட இடத்துக்கும் கொண்டுபோய்விடும். சுபாவத்திலேயே கெட்ட குணம் உள்ளவன் உயர் குலத்தில் பிறந்தாலும் சரி, கசடறக் கற்றிருந்தாலும் சரி, நல்ல வழியில் செல்லமாட்டான். சந்தனக் கட்டையிலிருந்து கிளம்பினாலும் அனலின் குணம் போகுமா; சுடத்தானே சுடும்?

"முதலில் லட்சுமியை எடுத்துக் கொள்ளலாம். அவள் மகா கொடியவள். அவளைக் கொஞ்சத்தில் அடைய முடியாது. முடிந்தாலும் அவளைப் பாதுகாப்பது மிகவும் கஷ்டம். தன்னோடு எவ்வளவுதான் பழகியிருந்தாலும் சரி, உயர் குலத்தில் பிறந்தாலும் சரி, அவள் அதைப் பொருட்படுத்த மாட்டாள். ஒழுக்கம், படிப்பு இவற்றையும் மதிக்க மாட்டாள். சரஸ்வதியிடம் அன்புள்ளவன்மேல் அவளுக்குப் பொறாமை; அவனை நெருங்கக்கூட மாட்டாள். அவளிடம் ஏமாறுதவனே இல்லை.

"பொதுவாக, பட்டாபிஷேகம் ஆனதுமே அரசர்கள் தயை தாட்சிண்யத்தையும் அதோடு கைகழுவி விடுகிறார்கள். தலையில் கட்டும் பாகை, தங்களுக்கும் கிழ வயது வரும் என்ற நினைவை மறைத்து விடுகிறது. தலைக்குமேல் பிடிக்கும் குடை பரலோகத்தைப் பார்க்க வொட்டாமல் தடுத்துவிடுகிறது. சாமரங்களிலிருந்து வீசும் காற்றின் எதிரே உண்மை இருக்கும் இடம் தெரிவதில்லை. முன்னே பிடிக்கும் பிரம்புகள் அவர்களிடம் உள்ள கொஞ்ச நஞ்சம் நல்ல குணங்களையும் விரட்டிவிடுகின்றன.

"சுயநலம் பிடித்தவர்களும் துஷ்டர்களும், மாமிசத்துக்காகக் காத்

திருக்கும் கழுகுபோல் இந்தமாதிரி அரசர்களிடமிருந்து பணம் பறிக்கத் தயாராயிருப்பார்கள்; "சூதாட்டம் விளையாட்டு, வேட்டை தேகப்பயிற்சி, குடிப்பது பொழுது போக்கு, பெரியோர்களை அவமதிப்பது சுதந்தரம், தான்தோன்றியாக வாழ்வது அரசாட்சி, தேவர்களை இகழ்வதே துணிச்சல்" என்றெல்லாம் சொல்வார்கள். "சாட்சாத் கடவுள்" என்றுகூடப் புகழ்ந்து அரசர்களை ஏமாற்றப் பார்பார்கள். இந்த அரசர்களும் தங்களைக் கடவுளின் அவதாரமாக எண்ணிக் கண்டபடி நடப்பார்கள்.

"சில அரசர்கள் தங்களைத் திருமாலாகப் பாவித்து, நாலு கையில் இரண்டு கை உடலில் மறைந்திருப்பதாக இறுமாப்பு அடைகிறார்கள். இன்னும் சிலர் தங்களைச் சிவபெருமானாக நினைத்துக்கொண்டு நெற்றிக்கண் தோலில் மறைந்திருப்பதாகக் கர்வங்கொள்கிறார்கள். தாங்கள் பேட்டி கொடுப்பதையே பெரிய அநுக்கிரகம் புரிந்துவிட்டமாதிரி எண்ணுகிறார்கள்; யாரோடாவது சம்பாஷித்து விட்டால் தங்கள் சொத்தையே கொடுத்து விட்டதுபோல் அவர்களுக்கு நினைப்பு. கட்டளையிடுவதைக் கூடப் பெரிய வரம் கொடுப்பதாக நினைக்கிறார்கள். குருவைக் கண்டாலும் எழுந்து உபசரிப்பதில்லை. மூத்தோர் சொல்லைக் கிழவயதுப் பிதற்றல் என்று தள்ளிவிடுகிறார்கள். தம் புத்திக் குறைவை மந்திரிகள் எடுத்துக் காட்டுவதாக எண்ணிக்கொண்டு, அவர்கள் சொல்வதைக் கேட்பதில்லை. நன்மை சொல்பவர் மேல் சீறி விழுகிறார்கள். வேலை வெட்டி இல்லாமல் தங்களைப் புகழ்கிறானே, அவனைத்தான் மதிக்கிறார்கள்; அவனோடுதான் பேசிப் பொழுது போக்குகிறார்கள்; அவனுக்குத்தான் பொருளை அள்ளி அள்ளிச் சொரிகிறார்கள்.

"கொடிய செயல்களைக் கபடமான முறையில் உபதேசிக்கும் அர்த்த சாஸ்திரந்தான் இந்தமாதிரி அரசர்களுக்குப் பிரமாணம். சூனியம், ஏவல் இவற்றில் தேர்ந்து கொடிய நெஞ்சம் படைத்தவர்களே இவர்களுக்கு ஆசிரியர்கள். மற்றவர்களை ஏமாற்றுவதில் திறமை உள்ள மந்திரிகளின் உபதேசமே இவர்களுக்கு ஏற்கும். அவர்களின் உதவியால் உடன்பிறந்தவனைக் கூடக் கொல்லத் துணிவார்கள்.

"யௌவனம், அரசியல் என்னும் இந்தப் பயங்கரமான சூழ்நிலையில் பெரியவர்களும் நண்பர்களும் உன்னை வெறுக்காதபடி நீ நடந்து கொள். அதோடு சாமர்த்தியசாலிகள் உன்னை ஏமாற்றாதபடியும், வேலையாட்கள் செந்நாய் மாதிரி உன் பொருளைப் பிடுங்காமல் இருக்கும்படியும் பார்த்துக்கொள். பெண்களின் வஞ்சனைக்கு ஆளாகாமலும் ஜாக்கிரதையாக இரு.

"சுபாவத்திலேயே நீ மனத்தைக் கட்டுப்படுத்தினவன்; நல்ல குணம் உள்ளவன். அதனால்தான் இதையெல்லாம் சொல்கிறேன். சீக்கிரத்திலேயே உன் தகப்பனார் உனக்குப் பட்டம் சூட்டப் போகிறார். பரம்பரையாக வந்த ராஜ்யபாரத்தை ஏற்றுச் சரியாக நடத்து. பகைவர்கள் உனக்குத் தலை வணங்கவேண்டும்; உன் உற்றார் உறவினர் தலை நிமிர்ந்து நடக்கவேண்டும்."

சந்திராபீடன் இதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான். பிறகு முன்னைவிட உள்ளம் தூய்மை அடைந்து மகிழ்ச்சியோடு அரண்மனைக்குத் திரும்பினான்.

வீரனைத் தெய்வமாக வணங்குவது எங்கும் வழக்கம். அப்படிப்பட்ட ஒரு கேரள வீரன் இவன்.

வீர ஒதேனன்

இ. கே. பீ.

வடகரை ரெயில்வே ஸ்டேஷனுக்கு ஒரு மைல் தூரத்தில் 'தச்சோளி மாணிக்கோத்து' என்னும் சரித்திரப் பிரசித்தமான ஒரு வீடு உண்டு. அது இன்று சிதிலமாகிக் கிடக்கிறது. அங்கே சுமார் 350 வருஷங்களுக்கு முன் ஒரு வீரன் இருந்தான்.

அந்தக் காலத்துத் தலைவர்களில் 'சீனம் வீட்டில் தங்ஙள்' என்று ஒருவன் இருந்தான். அவன் அந்தப் பழைய வீட்டில் வாழ்ந்துவந்த உப்பாட்டி என்னும் பெண்மேல் மையல் கொண்டான். இரவில் தனியாக அங்கே போய், காந்தர்வ முறைப்படி அவளை மணந்துகொண்டான். அவளுக்கு இரண்டு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் பிறந்தார்கள். இரண்டாம் மகன்தான் 'கடத்தநாட்டை'ச் சேர்ந்த 'ஒதேனன்' என்ற வீரன். அவனுடைய வீர பராக்கிரமங்களைக் கடத்தநாட்டு மக்கள் இன்றும் பெருமையோடு பாடிவருகிறார்கள். சுருதி கூட்டி ராகத்தோடு அதைப் பாடும்போது மெய்ம்மறந்து நின்று கேட்காத கேரளமக்களே இல்லை. பகவதியின் அருளே ஒதேனனுடைய வெற்றிகளுக்கெல்லாம் காரணம். ஒரு நாள்கூட அவளைப் பூஜை செய்ய அவன் மறந்ததில்லை.

ஒதேனன் சிலை

அந்த ஊர்ப் பகவதி கோயிலில் ஒவ்வொரு வருஷமும் உற்சவம் கொண்டாடுவது வழக்கம். பெயரும் புகழும் பெற்ற பணக்கார நாயர்கள் கோயிலில் பந்தல் போட்டு அலங்கரிப்பார்கள். அந்த வருஷம் ஒதேனனே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டான். கோயில் அலங்காரங்கள் விசேஷமாக இருந்ததால் அந்தத் தடவை அதிகக் கூட்டம். 'மதிலூர் குரிக்கள்' என்பவரும் அங்கே வந்திருந்தார். அவர்

காப்பிரைட்: மாத்ருபூமி (மலையாளம்: 15-5-'49), கன்னிக்கோட்டை.

பொறுமை கொண்டு ஏதேதோ சொன்னார். கடைசியில் அந்தப் பேச்சு, சண்டையில் வந்து முடிந்தது. ஆனாலும், 'உற்சவத்தின் நடுவில் சண்டை போடுவது சரியல்ல; நம் தோள்வலியை அடுத்த ஞாயிற்றுக் கிழமை பார்த்துக்கொள்ளலாம்' என்று ஏற்பாடு செய்துகொண்டு அவரும் ஒதேனனும் பிரிந்தார்கள். உற்சவம் விமரிசையாக நடந்து முடிந்தது.

ஒதேனனுடைய மனைவிமார்களில் 'குமுண்ட மட'த்தைச் சார்ந்த 'தேயி' என்பவள் ஒருத்தி. அவளிடம் குரிக்களின் சிஷ்யன் ஒருவன் வந்து சில பொன் நாணயங்களையும் அணிகளையும் காணிக்கையாகக் கொடுத்தான்; ஒதேனனுடைய இடுப்பில் கட்டிக்கொண்டிருக்கும் தாயத்தையும் அரைஞாணையும் அவனுக்குக் கொடுக்காமல் இருக்கும்படி வேண்டிக்கொண்டான். அந்தத் தாயத்துத்தான் அவனுடைய வெற்றிக்குக் காரணம் என்று குரிக்களுக்குத் தெரியும். அதனாலேதான் இந்தச் சூழ்ச்சி செய்தார். கணவனுக்கு வர இருக்கும் ஆபத்தை உணராமல் பொன்னுக்கு ஆசைப்பட்டுத் தேயி அந்த வேண்டுகோளுக்கு இணங்கினாள். போருக்குப் போவதற்கு முதல் நாளே அவள் அதை அவனிடமிருந்து தந்திரமாகக் கைப்பற்றிவிட்டாள்.

ஒதேனனுக்கு முப்பத்திரண்டு வயது. அப்போது அவனுக்குச் சனி தசை ஆரம்பம். ஆனால் அவனுக்கு ஆபத்து நேரும் என்று அவனுடைய தமையன் 'கோமக் குறுப்பு'க்குத் தெரியும். தம்பி போருக்குப் போவதில் அவனுக்குச் சம்மதமில்லை. தோல்வி என்பதைச் சிறிதும் அறியாதவன் ஒதேனன். போகாமல் இருப்பது அவமானமாகப் பட்டது அவனுக்கு. முதல் நாள் அவன் போகவில்லை. மற்றவர்களை அனுப்பி வைத்தான். தம்பி மறுநாளும் போர்க்களம் போகாமல் இருக்கத் தமையன் அவனைத் தந்திரமாக ஓர் அறையில் வைத்துப் பூட்டினான். அவனுடைய நம்பிக்கையான மனைவி 'குங்கி'யிடம் சாவியைக் கொடுத்துவிட்டு மற்ற நண்பர்களுடன் தானே போருக்குப் புறப்பட்டான்.

போர்க்களம் போகத் துடித்த ஒதேனன் வேறு வழியில்லாமல் மனைவியை அழைத்து, "தண்ணீர் குடிக்கவேண்டும். கதவைத் திற" என்று கட்டளையிட்டான். குங்கி கதவைத் திறந்தாள். உடனே ஆவேசத்தோடு அவன் வெளியே பாய்ந்து எதிரில் நிற்கும் தன் செல்வக் குழந்தையை வாரி அணைத்துக்கொண்டு மனைவி கொடுத்த பாலையும் குடித்துவிட்டுப் போர்க்களத்துக்கு ஓடினான். அங்கே போர்க்களத்தில் குதித்து, குரிக்களை எதிர்த்து நொடிப்பொழுதில் உடல் வேறு தலை வேறாக அவரை வெட்டி எறிந்தான். வெற்றி மாலை சூடி, ஜயபேரிகை கொட்டிக் கடத்தநாட்டுக்குத் திரும்பினான். சிறிது தூரம் வந்ததும், "என் கோடரியைப் போர்க்களத்தில் மறந்து வைத்துவிட்டேன். அதை எடுத்து வருகிறேன்" என்று சொல்லி அங்கே போனான். தமையனும் மற்றவர்களும், "அது போனால் போகட்டும்" என்று தடுத்தார்கள். ஒதேனன் கேட்கவில்லை; புறப்பட்டுப் போனான். பாதி வழியில் ஒதேனனுடைய நெற்றியில் சத்தத்தோடு ஒரு குண்டு பாய்ந்தது. அவன் அருகில் இருந்த பள்ளுவன்

ஒருவன் இதைப் பார்த்தான்; மறைந்திருந்து ஒதேனனை அடித்த 'ஒளும் பன் பப்பன்' என்பவனை வெளியே வரும்படி செய்து, ஒதேனனுடைய கோடரியைக் கொண்டே அவனை வெட்டி வீழ்த்தினன். நெற்றியில் ரத்தம் பெருக ஒதேனன் கிடந்தான். பள்ளுவன் அவனுக்கு இளநீர் முதலியவற்றைக் கொடுத்துவிட்டு ஓடி, ஒதேனனின் தமையனிடமும் மற்றவர்களிடமும் நடந்ததைத் தெரிவித்தான். அவர்கள் விரைந்து ஓடிவந்து அவனுக்கு எவ்வளவோ சிகிச்சை செய்தும் பயன்படவில்லை. "என்னைச் சேர்ந்தவரில் ஒருவனாவது இருக்கும்வரையில் பள்ளுவருக்கு 'மாணிக்கோத்து'க் குடும்பத்திலிருந்து செலவுக்குக் கொடுக்கவேண்டும்" என்று கடைசியில் ஒதேனன் தமையனிடம் சொல்லிவிட்டு உயிர் துறந்தான்.

இன்றும் அந்தக் குடும்பத்தார் அங்கே உள்ள பள்ளுவரை மதித்து அவர்களை ஆதரித்து வருகிறார்கள். மாசிமாதம் 10-ஆம் தேதி ஒதேனன் வீர சொர்க்கம் புகுந்தான். மாசி 10 முதல் 12-ஆம் தேதி இரவு சுமார் 9-30 வரையில் அவனுக்காக உற்சவம் நடத்திவருகிறார்கள். இதை நடத்துபவர் 'பொன்னியம்' என்ற இடத்தைச் சேர்ந்த 'பெருமண்ணான்மார்'. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஜனங்கள் இந்த உற்சவத்தைப் பார்க்க வருகிறார்கள்.

கடவுளின் கவனம்

"கடவுள் நம்மை எப்போதும் கவனித்துக்கொண்டே இருப்பார்" என்று ஒரு சின்னப் பையனிடம் யாரோ சொன்னார். பையன் சற்று யோசித்தான்; பிறகு, "சரி; அவர் எப்படிக் கவனிக்கிறார் என்று எனக்குத் தெரிந்தால் நல்லது. பள்ளிக்கூடத்தில் எங்கள் சட்டாம்பிள்ளை நான் மெதுவாகப் பேசினால் கூட உடனே கவனித்து வாத்தியாரிடம் சொல்லிவிடுகிறான்; அவர் மார்க்கைக் குறைத்துவிடுகிறார். ஆனால் அப்பாவோ என்னை வேறு விதமாகக் கவனித்துக்கொள்கிறார்; நான் கடற்கரையில் விளையாடுகிறபோது அதிக ஆழத்துக்குப் போய்விடாமல் பார்த்துக்கொண்டேயிருக்கிறார். அப்பா மாதிரி கவனித்தால்தான் எனக்குப் பிடிக்கும்" என்றான்.

—முடி மந்த்வி

இரண்டும் ஒன்றே

மென்ஷியஸ் என்ற சீன அறிஞர் லியாங் நாட்டு அரசனோடு பேசிக்கொண்டிருந்தார்.

"ஒரு மனிதனைத் தடியால் அடித்துக் கொல்வது, கத்தியால் குத்திக் கொல்வது இந்த இரண்டுக்கும் ஏதாவது வித்தியாசம் உண்டா?" என்று அவர் கேட்டார்.

"இல்லை" என்றான் அரசன்.

"குடிகளைக் கத்தியால் குத்திக் கொல்வதற்கும் ஆட்சிமுறையால் கொல்வதற்கும் வித்தியாசம் உண்டா?"

"இல்லை."

—ஹூ ஷி, 'வொர்ல்டு ரெவ்யூ'

கார்ட்டூன் கதம்பம்

இதில் இவ்வளவு அவசரம் கூடாது
என்கிறார் ராஜேன் பாபு
புராதன ஹிந்து
சட்டம்
பிரீ இந்தியா.


ஐஸ்பெட்டிக்குள் போகிறது
இந்தியக் குடியரசு
அமிர்தபஜார் பத்திரிகை



நியூயார்க் டைம்ஸ்

சீனு போதிக்கும் பாடம்

—ஸின்ஸினட்டி எஞ்சினீர்.

குழந்தையைப் பிடியுங்கள்

—சங்கர்ஸ் வீக்லி.

சிறு கதை:



சினிமா பேரம்

சரத் பந்த்யோபாத்யாய

ஒரு சினிமாப் படம் வந்தால் உடனே அதைப்பற்றிச் சுலபமாக நமக்குத் தோன்றின அபிப்பிராயத்தைச் சொல்லிவிடுகிருேம். ஆனல் ஏராளமாகப் பணத்தைப் போட்டுவிட்டு வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு காத்திருக்கும் முதலாளியும், தம் சாமர்த்தியத்தை வெளிக்காட்ட விரும்பும் டைரெக்டரும் படும் சங்கடம் நமக்குத் தெரிகிறதா? அதைத்தான் வர்ணிக்கிறது இந்தக் கதை. ஆசிரியர் பிரபல வங்க எழுத்தாளர். சினிமாத் துறையில் நல்ல அநுபவம் உள்ளவர்.

இந்தப் பக்கத்தில் தீபாவளி பண்டிகை என்ருல் விசேஷம். புதிதாகப்பேரேடுபோட்டு வியாபாரிகள் மறுபடியும் தொழிலைத் தொடங்குவார்கள். அந்தத் தடவை தீபாவளிக்குக் கொஞ்ச நாள் முன்னேதான் சோமநாதனுடைய படம் எடுத்து முடிந்தது.

படம் தயாராகச் செலவு அதிகம் பிடிக்கவில்லை; எல்லாம் 75,000 ரூபாய்க்குள்ளேயே முடிந்துவிட்டது. ஆனல், இந்த ரகசியம் டைரெக்டர் சோமநாதன், பிரதான நடிகன் பாண்டுரங்கன், முதலாளி ருஸ்தம்ஜீ இவர்கள் மூன்று பேரைத் தவிர வேறு யாருக்குமே தெரியாது. அநாவசியமான பகுதிகளை யெல்லாம் வெட்டிச் சீர்திருத்தின பிறகு மூன்று பேரும் அதைத் திரையில் போட்டுப் பார்த்தார்கள். ஆனல் அவர்களுக்கு அதைப்பற்றி எந்த விதமான அபிப்பிராயமும் சொல்லத் தெரியவில்லை.

சோமநாதன் மேஜைமேல் கையை ஊன்றிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். 'ஒருவேளை பொது ஜனங்களுக்கு இது பிடிக்காவிட்டால் என்ன செய்வது? முன்னே ருஸ்தம்ஜீ எடுத்த படங்களுக்கு நேர்ந்த கதி இதற்கும் நேர்ந்துவிட்டால்?' - இப்படி எண்ணமிட்டு அவன் மூளை குழம்பினதுதான் மிச்சம். படம் எடுக்க ஆரம்பித்த போது இருந்த உற்சாகமெல்லாம் எங்கோ பறந்தோடிவிட்டது. அப்போது அவனுக்கு மிகவும் பிடித்திருந்த அதே கதை இப்போது பார்த்தால் சப்பென்று இருந்தது. அதே அபிப்பிராயந்தான் பாண்டு

காப்பிரைட்: பாரதவர்ஷ, (வங்காளி: ஏப்ரல் '49), கல்கத்தா.

ரஙகனுக்கும் கதாசிரியர் இந்து பாபுவுக்கும். ஆனுல் ருஸ்தம்ஜீ மட்டும், ''பயப்படாதே, அப்பா! நான் இதற்கு ஒரு வழி செய்கிறேன், பார்'' என்று அவனைத் தட்டிக்கொடுத்தார்.

மறுநாள் மாலை அவர் தம் நண்பர்கள் சிலரை ஸ்டேடியோவுக்கு வரவழைத்தார். அன்று இரவு ஒரு விருந்துக்கும் ஏற்பாடு செய்திருந்தார். வந்தவர்கள் எல்லாரும் சினிமாப் படம் விநியோகிக்கும் தரகர்கள்; அவர்களோடு சோமநாதன், பாண்டுரங்கன், இந்து பாபு இவர்களையும் அழைத்திருந்தார்.

பேஷான விருந்துச் சாப்பாடு. கூடக் கொஞ்சம் 'புட்டி'யும் உண்டு. ஒரு பெரிய மேஜையைச் சுற்றி எல்லாரும் உட்கார்ந்தார்கள்; கேலி, தமாஷா செய்துகொண்டே சாப்பிட ஆரம்பித்தார்கள். 'ஏதோ விசேஷம் இருக்கிறது; அதனுல்தான் இந்த விருந்து' என்று அவர்களுக்குத் தெரியும்; ஆனுலும் அதைப்பற்றி யாருமே பிரஸ்தாபிக்கவில்லை.

விருந்து முடிந்ததும் அவர்களை ஸ்டேடியோவில் உள்ள 'ப்ரொஜெக்ஷன்' அறைக்கு ருஸ்தம்ஜீ அழைத்துக்கொண்டு போனுர். நீளமான அறை. ஒரு பக்கம் திரை போட்டிருந்தது. தலைக்கு மேலே கூரையில் மினுக் மினுக் என்று மங்கலாக ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. எல்லாரும் உட்கார்ந்ததும் விளக்கு அணைந்தது. படம் ஓட ஆரம்பித்தது.

இரண்டு மணி நேரம் கழித்து அவர்கள் ஆபீஸ் அறைக்குத் திரும்பி வந்தார்கள். பாண்டுரங்கன் மட்டும் ருஸ்தம்ஜீயிடம் சொல்லிவிட்டுச் சீக்கிரமாகவே புறப்பட்டுப் போய் விட்டான். வந்தவர்களைப் பார்த்து, ''சரி; படம் எப்படி இருந்தது?'' என்று ருஸ்தம்ஜீ கேட்டார். அவர்கள் ஒருவரை ஒருவர் ஓரக்கண்ணுல் பார்த்துவிட்டு முகத்தை ஒருமாதிரி வைத்துக்கொண்டார்கள். இதைக் கண்டதும் சோமநாதனுக்கு வயிற்றில் 'பக்' என்றது. பொதுவாக, படம் எவ்வளவு நன்ருக இருந்தாலும் விநியோகஸ்தர்கள் யாரும் அதை மனம்விட்டுச் சொல்ல மாட்டார்கள். சொன்னுல் படத்தின் மதிப்பு விறுவிறு என்று ஏறிவிடுமே! ஆனுல் இந்தப் படத்தைப் பொறுத்தவரையில் நிஜமாகவே இது சப்பை என்றுதான் அவர்களுக்குத் தோன்றியிருக்கவேண்டும்; இல்லாவிட்டால் மூஞ்சியை ஏன் அப்படி வைத்துக்கொள்ளுகிருர்கள்?

வாஞ்சுபாயி என்ற தரகர் சினிமாப் பட விஷயத்தில் நல்ல அநுபவம் உள்ளவர். அவர், ''என் ருஷிபாயி, படத்தை டைரெக்ட் செய்தது யார்?'' என்று கேட்டார்.

ருஸ்தம்ஜீ சோமநாதனைக் காட்டி, ''இவர்தான்'' என்ருர்.

வாஞ்சுபாயி சோமநாதனைச் சற்று மறைவாக அழைத்துக்கொண்டு போனுர். என்ன என்னவோ உபதேசமெல்லாம் செய்தார். மனிதர் படிப்பாளியல்ல; ஆனுல் இதமாகப் பேசுவார். ''முதல் முதல் டைரெக்ட் செய்வதற்குப் படம் தேவலை. ஆனுலும் பொதுஜனங்களுக்குப் பிடிக்கும்படி ஒரே நாளில் எடுத்துவிட முடியுமா? அதற்குப் பழக்கம் வேண்டும்'' என்ருர். பிறகு என்ன என்ன 'போடுவான்' போட்டால் படம் சுவாரஸ்யமாக இருக்கும் என்று சில பிரபல படங்கள் வெற்றியடைந்த ரகசியத்தை எடுத்துச் சொன்னுர். சோமநாதனுக்கு இது சகிக்கவில்லை. ஆனுலும்

வேறு வழி இல்லாமல் கம்மென்று கேட்டுக்கொண்டிருந்தான். நடுவில் ஒரு தரம் திரும்பிப் பார்த்தான். இந்த பாபுவையும் இதேமாதிரி நாலைந்துபேர் சூழ்ந்துகொண்டிருந் தார்கள். அவரோ பாவம், அவர்க ளிடம் மாட்டிக்கொண்டு ஆந்தை மாதிரி விழித்தார். "இரண்டோர் இடத்தில் துப்பாக்கி அது இது வந்து எவனாவது 'வில்லன்' ஒரு பெண்ணைத் தூக்கிக்கொண்டு போகிற கட்டமும் இராவிட்டால் ரசப்படாது." - இப்படி ஒருவர் மாற்றி ஒருவர் காதில் ஓதினால் அவர் எத்தனை நேரம் அதைச் சகித் துக்கொண்டிருப்பார்! சட்டென்று எழுந்து ருஸ்தம்ஜீயிடம் விடை பெற்றுக்கொண்டு வெளியே போய் விட்டார்.

இப்படியே சில பேர் ருஸ்தம் ஜீயையும் சூழ்ந்துகொண்டு அவ ரிடம் அநுதாபப்படுவது போல் ஏதேதோ சொன்னார்கள்; இன்னும் சிலர் எவ்வளவு செலவாகியிருக்கும் என்று சுற்றி வளைத்துக் கேட்டுப் பார்த்தார்கள். கடைசியில் ஒருவர், "பெயர் எடுத்த ஆசாமியாக யாரை யும் காணோமே படத்தில்? நல்ல பாட்டோ நடனமோ எதுவும் இல்லையே? அப்படி அதிகமாகச் செலவழிந்திராது என்று நினைக் கிறேன்" என்று பேச்சை எடுத் தார்.

ருஸ்தம்ஜீ முகத்தில் எந்தவித மான மாறுதலும் இல்லாமல், "1½ லட்சம் ஆயிற்று" என்றார்.

எல்லாரும் முகத்தை ஒரு தூக் குத் தூக்கி, "ஓ! ரொம்ப அதிகம்! புது ஆசாமிகளை வைத்துக்கொண்டு எடுத்தாலே இப்படித்தான்! போட்ட அவ்வளவு தொகை வராதே, ருஷிபாயி!" என் றார்கள்.

ருஸ்தம்ஜீ, "அவ்வளவுதான் ஆயிற்று; எனக்கு அதிக லாபம் வேண்டியதில்லை. 3 லட்சம் கிடைத் தால் போதும். படத்தை விற்று விடத் தயார்" என்றார்.

அவர்கள் பதில் ஒன்றும் சொல்ல வில்லை. கொஞ்சநேரம் கழித்து ஒவ்வொருவராக விடைபெற்றுக் கொண்டு போனார்கள்.

மறுநாள் காலை சோமநாதன் தன் அறையில் டீயும் ரொட்டியும் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். அப்போது பாண்டுரங்கன் உள்ளே வந்தான். அவனுக்கும் ஒரு தட்டில் ரொட்டி வைத்து, "என்ன விசேஷம் இன்றைக்கு; இவ்வளவு சீக்கிரமாக வந்துவிட்டாய்?" என் றான் சோமநாதன்.

பாண்டுரங்கன் பதிலே சொல்ல வில்லை. டீ பாத்திரத்தை எடுத்து ஒரு கோப்பையில் ஊற்றிக் கொண்டான். பிறகு ஒரு ரொட்டித் துண்டை வாயில் போட்டு மெல்ல ஆரம்பித்தான். இதைப் பார்த்த தும் சோமநாதன் கட்டாயம் ஏதோ விசேஷம் இருக்கிறது என்று புரிந்துகொண்டான்.

"என்ன சமாசாரம்? சொல் லேன்" என்று ஆவலோடு பாண்டு ரங்கனை விசாரித்தான்.

"நம் படம் பேஷான படம்" என்று அப்போதுதான் வாயைத் திறந்தான் பாண்டுரங்கன்.

"என்ன, யார் சொன்னார்?" என்று பரபரப்போடு கேட்டான் சோமநாதன்.

"என் பெண்டாட்டி."

"உன் பெண்டாட்டியா? அவ ளுக்கு எப்படித் தெரியும்? அவள் எங்கே பார்த்தாள்?"

"நேற்று ராத்திரி யாருக்கும் தெரியாமல் அவளை அழைத்துக்

கொண்டு வந்திருந்தேன். 'ப்ரொ ஜெக்ஷன்' அறையில் ஒளிந்து கொண்டு பார்க்கச் சொன்னேன்."

"அப்படியா? அப்புறம்?"

"அவள் அநாவசியமாக எந்தப் படத்தையும் புகழமாட்டாள். ஆனால் அவளுக்குப் பிடித்த படம் எதுவாயிருந்தாலும் சரி, அது கட்டாயம் பெயர் எடுக்கிறது, பார்த்திருக்கிறேன்."

"இது பிடித்ததாமா?"

"பிடித்தது என்றா கேட்கிறாய்? நேற்று ராத்திரி அவள் என்னைத் தூங்க விட்டால்தானே? முழுக்க முழுக்க இதைப்பற்றியே தான் பேசித் தீர்த்துவிட்டாள்."

சோமநாதன் உற்சாகத்தோடு, "சாதாரண ஜனங்களில் ஒருத்தி. அவள் சொல்வது சரியாகத்தான் இருக்கும்..." என்றான்.

நண்பர்கள் இருவரும் மோட்டாரில் புறப்பட்டார்கள்.

ஸ்டுடியோவுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். ருஸ்தம்ஜீயைப் பார்த்ததும் பாண்டுரங்கன், "சேட்ஜீ! நேற்று ஒரு தவறு செய்துவிட்டேன். மன்னிக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டு முந்தின நாள் தன் மனைவியை ரகசியமாக அழைத்து வந்த விவரத்தை அவருக்குத் தெரிவித்தான். ருஸ்தம்ஜீ சிரித்துக் கொண்டே, "அப்பா! பிரமாதமான தவறுதான்; போயேன்! உன் பெண்சாதிக்குப் பிடித்ததாமா?" என்று கேட்டார்.

"ஆமாம், சேட்ஜீ!"

"எனக்குக்கூடத்தான் பிடித்திருக்கிறது."

சோமநாதன் ஆவலோடு, "யாராவது அப்படிச் சொன்னார்களா?" என்றான்.

ருஸ்தம்ஜீ தம் மார்பைத் தட்டி, "அவர்கள் சொல்வானேன்? என் மனசு சொல்கிறது. அவர்கள் நன்றாயில்லை என்றுதான் சொல்வார்கள்......அது இருக்கட்டும். வாஞ்சுபாயி சற்றே முன்னேதான் 'போன்' செய்தான்" என்றார்.

"என்ன சொன்னார்?"

"கொஞ்சநேரம் ஏதோ குற்றங் குறை சொல்லிவிட்டு, 'இந்தியா முழுமைக்கும் உரிமை தரவேண்டும். 75,000 கொடுக்கிறேன்' என்றான்."

"குறைந்தபட்ச உத்தரவாதத்தின் பேரிலா?"

"இல்லை; இல்லை. அப்படியே விற்றுவிட வேண்டுமாம். உங்கள் இரண்டுபேர் அபிப்பிராயம் என்ன? கொடுத்துவிடலாமா?"

'அதில் ஒரு லாபமுமில்லையே' என்று முதலில் சோமநாதன் எண்ணினான். 'ஆனால் நஷ்டமில்லையே; அது மேல் அல்லவா?' என்று உடனே தோன்றிற்று. "வேறு யாருமே கேட்கவில்லையா?" என்றான்.

"ஊஹூம். மற்றவர்களெல்லாம் கம்மென்றுதான் இருக்கிறார்கள். வாஞ்சுபாயி விஷயம் தெரிந்தவன்; நம் படம் புதுத் தினுசாக இராவிட்டால்கூட அதில் சரக்கு இருக்கிறது என்று அவனுக்குத் தெரியும். அதனால்தான் ஆசாமிக்குச் சபலம் தட்டுகிறது. சற்றே இழுத்துப் பிடித்தோமானால் இரண்டு லட்சத்துக்கு ஏறலாம்."

சோமநாதன், "அப்படியானால் விட்டுவிடலாமே?" என்றான்.

ருஸ்தம்ஜீ பாண்டுரங்கனைப் பார்த்து, "நீ என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டார்.

அவன் சற்று வருத்தத்தோடு, "போயும் போயும் ஒரு லட்சத்துக்கும் அரை லட்சத்துக்குமா விற்றுவிடுவது? உங்களுக்கு என்ன தோன்றுகிறது?" என்றான்.

ருஸ்தம்ஜீ, "படம் நன்றாக இருக்கும் பட்சத்தில் அவசரப் பட்டுக்கொண்டு விற்பது அசட்டுத்தனம். நானும் வியாபாரிதான். அப்படி ஏமாந்து விடமாட்டேன்" என்றார்.

"அப்படியானால் என்ன செய்யப் போகிறீர்கள்?"

"மூன்று லட்சத்திலேயே இருக்கப் போகிறேன். அதற்கு அவர்கள் ஒப்புக்கொள்கிறார்களா பார்க்கிறேன். இல்லாவிட்டால் வேறு வழி இருக்கிறது."

"எப்படி?"

ருஸ்தம்ஜீ பதில் சொல்லவில்லை; சற்றே சிரித்தார்.

மூன்று லட்சத்துக்கு யாரும் சம்மதிக்கவில்லை. வாஞ்சுபாயி ரூ. 1,80,000 வரைக்கும் போனார். மற்றவர்கள் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

சோமநாதனுக்கு, பாவம், ஒன்றுமே தோன்றவில்லை. 'படத்தின் உண்மையான மதிப்பைத் தெரிந்து கொள்ள வழியே இல்லையா? கண்ணை மூடிக்கொண்டு ஏதோ தோன்றின விலைக்குக் கொடுத்துவிடுவதா? நாம் அன்றாடக் கூலியை மட்டும் வாங்கிக்கொண்டு உடம்பை ஓடாக உழைப்பது; எவனோ தரகன் அதன் பலனை அநுபவிப்பதா? இதுதான் வியாபார நீதியா?' - இப்படியெல்லாம் எண்ணி மனம் புழுங்கினான். கொஞ்ச நாளாகத்தான் சோமநாதனுக்கு வியாபாரத்தில் பரிசயம். 'வியாபாரம் என்றால் லேசல்ல; மலைப் பாம்பு போல் மெதுவாக நெளிந்து ஊர்ந்து போகவேண்டியிருக்கும். பல சிக்கல்கள் வேறு உண்டு; பாம்பின் தலையிலிருந்து மாணிக்கம் எடுப்பதற்கு எவ்வளவு துணிவு வேண்டுமோ அவ்வளவு துணிவும் சாமர்த்தியமும் வியாபாரத்திலும் வேண்டும்' என்று இப்போதுதான் அவனுக்குப் புரிந்தது; இதுவரையில் அவனுக்கு அந்த அநுபவம் இல்லை.

ருஸ்தம்ஜீ ஒரு நாள் அவனை அழைத்து, "நீ அதற்குள்ளேயே பயந்துவிட்டாயே! வியாபாரத்திலே இப்படி இருந்தால் முடியுமா? மூளை குழம்பாமல் நிதானமாக இருக்கவேண்டும். சரி. வருகிறாயா? வாஞ்சுபாயியைப் போய்ப் பார்க்கலாம்" என்றார்.

வாஞ்சுபாயி அவர்களை மிகவும் மரியாதையாக வரவேற்றார். ருஸ்தம்ஜீயிடம் வெற்றிலைப் பெட்டியும் சோமநாதனிடம் ஒரு சிகரெட்டும் நீட்டினார். ஆனால் மனிதர் எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. "ருஷிபாயி, இந்தப் படத்துக்கு அதற்கு மேலே கொடுத்தால் என் குழந்தை குட்டி பிழைக்க வேண்டாமா? வேண்டுமானால் மேலே பத்தாயிரம் தருகிறேன். அதற்குமேல் என்னால் முடியாது" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்.

ருஸ்தம்ஜீ, "சரி; குறைந்த பட்ச உத்தரவாதத்தின்மேல் கொடுக்கச் சம்மதமா?" என்றார்.

வாஞ்சுபாயி நாக்கை நீட்டி, "அது முடியாது, பாயி; எல்லாரும் என்னவோ நான் கொள்ளையடித்துப் பணமாக வாருகிறேன் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். உண்மையிலே சொல்லப்போனால் ஒன்றும் கிட்டவில்லை" என்று மிகவும் சாதுபோல் முகத்தை வைத்துக்கொண்டார்.

ருஸ்தம்ஜீ நாற்காலியை விட்டு எழுந்தார்; "இப்போது ஒப்புக்கொள்ளாவிட்டால் அப்புறம் அவ்வளவு நயமாகக் கிடைக்காது. வேண்டுமானால் பாருங்கள்" என்றார்.

ஸ்டுடியோவுக்குத் திரும்பியதும் அவர், "சோமநாத்! நான் சற்று யோசித்துச் சொல்கிறேன். நாளைக் காலை வருகிறாயா?" என்றார். சோமநாதன் முகம் வாடி வீட்டுக்குத் திரும்பினான்.

மறுநாள் சோமநாதன் ருஸ்தம்ஜீயிடம் வந்ததும் அவர், "படத்தை யாருக்கும் விற்கப் போவதில்லை. கொட்டகைக்கு வாடகை கொடுத்து நானே காட்டப் போகிறேன்" என்றார்.

சோமநாதன் கொஞ்ச நேரம் திகைத்து நின்றான். பிறகு, "அப்படியானால் இன்னும் செலவு தானே?" என்று ஆரம்பித்தான்.

அதற்குள் அவர், "விளம்பரத்துக்கு 30,000 ரூபாய் பிடிக்கும். அதோடு கொட்டகைக்கு வாடகையும் மற்றச் செலவும் சேர்ந்தால் மொத்தம் 50,000 ஆகப்போகிறது; படம் ஜனங்களுக்குப் பிடித்துவிட்டால் கேட்பானேன்?" என்றார்.

"பிடிக்காவிட்டால்?"

ருஸ்தம்ஜீ சோமநாதன் தோளைத் தொட்டு, "சிறு பிள்ளையாயிருந்து நீ இப்படிப் பயப்படலாமா? கொஞ்சங்கூட உனக்குத் தைரியமில்லையே!" என்றார்.

"என்னைப்பற்றிக் கவலை இல்லை, சேட்ஜீ! உங்களிடம் இருக்கிற கொஞ்ச நஞ்சம் பணத்தையும் இப்படிச் சூதாட்டம் ஆடுவது நன்றாயில்லை. அப்படியும் லாபம் கிட்டாவிட்டால்?"

"என் தொழிலே அதுதானே, அப்பா! வாழ்நாள் முழுதும் நான் சூதாடிப் பழகினவனாச்சே! சூதாட்டம் என்று தெரிந்துகொண்டு தானே படத்தை ஆரம்பித்தேன். இப்போதும் அப்படித்தான். வந்தால் வரட்டும்; வராவிட்டால் போகட்டும். எதற்கும் துணிந்திருக்கிறேன். வாஞ்சுபாயி அப்படி இப்படி என்று சொல்லி நம்மைப் பயமுறுத்தி ஆட்டம் காட்டுகிறான். நான் அவனுக்குத் திகில் மூட்டி அவனை ஆட்டி வைக்கிறேன், பார்."

கிழ ருஸ்தம்ஜீ ஒரு பிடி பிடித்தால் அவரை யாரும் தடுத்து நிறுத்த முடியாது; அதைச்செய்தே முடிப்பார். சோமநாதனுக்கும் அந்தச் சூதாட்ட வெறி தொற்றிக் கொண்டது.

"சரி, உங்களுக்குத் தைரியம் இருந்தால் பேஷாகச் செய்யுங்களேன்" என்றான்.

"தீபாவளி எப்போது வருகிறது?"

"இன்னும் பத்துப் பதினைந்து நாள் இருக்கிறது."

"பலே! அன்றைக்கு நம் படத்தை 'ரிலீஸ்' பண்ணிவிட்டால் போகிறது."

தீபாவளி அன்று அவர்கள் படம் ஆரம்பமாயிற்று. முதல் வாரம் வசூல் ஆன தொகை ரூ. 14,000. இரண்டாம் வாரம் ரூ. 26,000.

முன்னே வந்துவிட்டுத் திரும்பிக் கூடப் பார்க்காத பேர்வழிகளெல்லாம் இப்போது, 'நான் முன்னே; நீ முன்னே' என்று ருஸ்தம்ஜீயைத் தேடிக்கொண்டு வந்தார்கள். ஆனால் அவர் யாரையும் உள்ளே விடவில்லை.

பாண்டுரங்கனை அழைத்து அவன் கையில் இருபது சவரன் தங்கச் சங்கிலி ஒன்றைக் கொடுத்தார்; "உடனே வீட்டுக்குப் போய் இதை உன் பெண்சாதிக்குப் போடு. அவள் சொன்னதை நம்பித்தான் கையில் இருந்த கொஞ்ச நஞ்சம் பணத்தையும் போட்டேன்" என்றார். பிறகு சோமநாதனைப் பார்த்து, "என்ன வேண்டுமானாலும் கேள். என் சொத்தையே கூடக் கொடுக்கத்

தயார்'' என்று உற்சாகம் பொங்கச் சொன்னார்.

சில நாள் கழித்து வாஞ்சு பாயி நெட்டித் தள்ளிக்கொண்டு எப்படியோ ருஸ்தம்ஜீயின் அறைக்குள் நுழைந்துவிட்டார். இரண்டு பேரும் சற்று நேரம் பேசாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு இருந்தார்கள். பிறகு வாஞ்சுபாயி, "ருஷி பாயி! உங்களுக்குத்தான் ஜயம்; ஒப்புக்கொள்கிறேன்...சரி; எவ்வளவு தொகை வேண்டும்? கேளுங்கள்'' என்று பேச்சை எடுத்தார்.

ருஸ்தம்ஜீயின் முகத்தில் பெருமை தாண்டவமாடியது; வெற்றிப் புன்னகை தவழ்ந்தது. ஆனால் ஒன்றுமே பேசவில்லை. வாஞ்சுபாயி மறுபடியும், "முன்னே மூன்று லட்சத்துக்குக் கொடுத்து விடுவதாகச் சொன்னீர்களே; இதோ தயார்'' என்றார்.

ருஸ்தம்ஜீ தலையை மெதுவாக அசைத்தார்; "அது அப்போது; இப்போது அது முடியுமா?'' என்றார்.

"பின்னே எவ்வளவு வேண்டும்?''

"ஐந்து லட்சம்.''

வாஞ்சுபாயி வெகு நேரம் கம்மென்று உட்கார்ந்திருந்தார்; பிறகு, "அதற்குக் குறைந்து முடியாதா?'' என்றார்.

"ஊஹூம்.''

"கொஞ்சம் அவகாசம் கொடுங்கள். வீட்டுக்குப் போய் யோசித்துச் சொல்கிறேன்.''

"தாராளமாகப் போய் வாருங்கள். ஆனால் அதற்குள்ளே யாராவது இன்னும் மேலே கொடுக்க வந்தால் அப்புறம் அதற்குக் குறைந்து தர முடியாது.''

வாஞ்சுபாயி அதற்கு மேல் பேச்சை ஓட்டவில்லை. ஜேபியிலிருந்து செக் புத்தகத்தை எடுத்தார்.

சற்று நேரம் கழித்து ருஸ்தம்ஜீ சோமநாதனை அழைத்து ஒரு செக்கை உறையில் வைத்து அவனிடம் நீட்டினார்; அவன் கையைப் பிடித்து மகிழ்ச்சியோடு குலுக்கினார்; பிறகு, "கொஞ்ச நாள் எங்கேயாவது வெளியூர் போய்விட்டு வா; அப்புறம் புதுப்படம் ஆரம்பிக்கலாம்'' என்றார்.

வெளியே வந்ததும் சோமநாதன் ஜேபியிலிருந்த செக்கைப் பிரித்துப் பார்த்தான். ரூ. 1,30,000! சட்டென்று அவன் மனத்தில் இருந்த பாரமெல்லாம் எங்கோ போய்விட்டது. 'பணம் சம்பாதிப்பதென்றால் இவ்வளவு சுலபமா? கொஞ்சம் சாமர்த்தியம், பிடிவாதம் இந்த இரண்டும் இருந்தால் போதும்; வேறு ஒன்றுமே வேண்டியதில்லை! அப்படி இருந்தும் இதற்காக எத்தனை பேர் மண்டையை உடைத்துக் கொண்டு சாகிறார்கள் என்று முதலில் லேசாக எண்ணினான்.

பிறகு ஒரு பெருமூச்சு விட்டான்; இனிமேல் அவனுக்குச் சோற்றுக் கவலை விட்டது! அவன் இப்போது லட்சாதிகாரி.

மனிதனே விலக்கு

தான் மிருகம் அல்ல என்று சொல்லிக்கொள்ளும் ஒரே ஒரு மிருகம் மனிதமிருகந்தான்.

—'ரெவு தெ பீ.'

"ஓர் உயர்குலப் பிராமணப் பெண்ணும் அவளுடைய வைசிய ஜாதிக் கணவரும் எனக்கு மிக நெருங்கின நண்பர்கள்; மிக அந்யோந்யமாய் வாழ்க்கை நடத்துகிறவர்கள்; காதல் மணம் புரிந்தவர்கள். அவர்கள் செய்தது தவறு என்று என்னால் கருத முடியவில்லை. ஆனால் வேறு சிலர் அதைக் கண்டித்தார்கள். இப்படிப்பட்ட விவாகத்தையும் அநுதாபத்துடன் நோக்கவேண்டும் என்று காட்டவே இதை எழுதினேன்" என்கிறார் முன்னுரையில் 'குமுதினி'.

காப்பிரைட் : கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், விலை ரூ. 1-0-0 - தமிழ் நாவல்.

திவான் மகள்

வைகாசி மாத ஆரம்பம். குற்ருலத்தில் இருக்கும் என் பங்களாவில் சில காலம் வசிக்கலாமென்று சென்றேன். அந்தப் பங்களா, முன்பு ஆற்றுமலை ஜமீன்தாருக்குச் சொந்தமானது. ஜமீன் சொத்துக்களை வாங்கும் சமயம் அதையும் சிற்றப்பா வாங்கியிருந்தார்.

ஒரு நாள் பகல் பதினெரு மணி இருக்கும். என் தோப்பில் ஒரு மகிழமரத்தடியில் இருந்த ஆசனத்தில் உட்கார்ந்து, கதைப் புத்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தேன்.

அப்போது அவர்கள் தோன்றினர்கள்: சிரித்துப் பேசிக்கொண்டு நடந்துவரும் இரண்டு யுவதிகள்; அவர்களுக்குப் பின்புறம் ஒரு மாட்டு வண்டியில் கிழவி ஒருத்தி ஒரு டிபன் பாத்திரத்தை ஆர்வத்துடன் அணைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

என் தோட்டத்தின் அருகே வந்ததும், பெண்களில் ஒருத்தி, "ஜானகி, இதைப் பார்த்தாயா? எவ்வளவு அழகான தோட்டம்! எனக்குப் பசிக்கிறது. இங்கேயே சாப்பிடலாமா?" என்ருள். மற்றவள், "இது யாருடைய தோட்டமோ? இதற்குள் உத்தரவில்லாமல் போகலாமோ?" என்று சொல்லித் தயங்கி நின்ருள்.

நான் மரத்தின் மறைவில் உட்கார்ந்திருந்ததால் அவர்கள் என்னைக் கவனிக்கவில்லை. இப்பொழுது நான் எழுந்து வேலியண்டையில் சென்றேன். "நீங்கள் தாராளமாக இங்கே வந்து பலகாரம் சாப்பிட்டுவிட்டுப் போகலாம்" என்றேன்.

நான் இப்படிச் சொன்னதும், ஜானகி வெட்கத்தினுல் முகம் சிவக்கத் தயங்கி நின்ருள்.

மற்றவளோ தயக்கம் ஒன்றும் இல்லாமல் என்னை நிமிர்ந்து நோக்கிவிட்டு, "தோட்டத்தின் சொந்தக்காரர் நீங்கள்தானே? ஆற்றுமலை ஜமீன்தாருடையது என்று கேள்விப்பட்டோம்" என்ருள்.

நான் "ஆம்" என்று தலையசைப்பதற்குள் வண்டி நின்றது; அதில் இருந்த கிழவி கீழே இறங்கி வந்தாள்.

உடனே அந்தப் பெண், "கனகப் பாட்டி, இவர்தான் இந்தத் தோட்டத்துக்குச் சொந்தக்காரராம். ஆற்றுமலை ஜமீன்தார் சாதாரண வேஷ்டி உடுத்திருக்கிருரே என்று யோசிக்காதே! முன்பெல்லாம் விக்கிரமாதித்தன் செய்வான் பார், அந்தமாதிரி மாறுவேஷம் போட்டுக்கொண்டு வந்திருக்கிருர். இவர் நம்மை இங்கே சாப்பிடலாமென்று சொல்லுகிருர்" என்ருள்.

பாட்டியம்மாள் டிபன் பாத்திரத்தை வண்டியிலிருந்து இறக்கினுள். மூவரும் தோட்டத்துக்குள் நுழைந்தார்கள்.

புத்தகத்தைப் படிக்க நான் கையில் எடுத்தபோதிலும், என் மனம் அதில் பதியவில்லை. தூரத்தில் அந்தப் பெண்கள் பேசும் இனிமையான குரலும் சிரிப்பும் சிறிது சிறிது காதில் பட்டன. அவர்கள் யாரென்று அறிய ஆவல் ஏற்பட்டது. வண்டிக்காரனைக் கேட்டேன்.

"திவான் கொளந்தைங்க! மைசூர் ராஜா பங்களாவிலே இருக்காங்க. அவர் வடக்கே திவானும்."

குவாலியரின் திவான் ஸ்ரீமான் ராமையரைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். 'இவர்கள் அவர் வீட்டைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்க வேண்டும்' என்று தீர்மானித்தேன். அப்போது வடக்கே தென் தேசத்துத் திவான் வேறு எவரும் இல்லை.

சாப்பிட்டுவிட்டு அந்தப் பெண்கள் மாத்திரம் திரும்பி வந்தார்கள். நான் எழுந்து நின்றேன். ஜானகியின் தோற்றத்தினுல் அவளே திவான் மகளென்று ஊகித்து அவளை நோக்கி, "நீங்கள் இந்த ஊரில் தங்கும்வரையில் இங்கே தாராளமாக வரலாம். திவான் இந்தப் பக்கம் வருவாரோ?" என்று கேட்டேன்.

அந்தப் பெண் தன் விரிந்த கண்களால் வெட்கத்தோடும் வியப்போடும் என்னை ஒரு முறை பார்த்துவிட்டு ஏதோ சொல்ல வாயெடுத்தாள். ஆனுல் அதற்குள் மற்றவள் தன் கைகளால் சட்டென்று ஜானகியின் வாயை மூடி, அவள் காதில் ஏதோ சொல்லிவிட்டு, "திவான் ராமையரின் பெண் இவள் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கிறதே!" என்ருள்.

"வண்டிக்காரன் சொன்னுன்" என்றேன்.

"ஆமாம். அவன் சொன்னது சரிதான். இந்த அம்மாள் அவருடைய ஒரே பெண். நான் அவருக்குத் தூரபந்து. இவளுக்குத் தாய் இல்லை. அதனுல் இவளுக்குத் தோழியாக நான் இருக்கிறேன். திவான் இப்போது இங்கே வருவதாக இல்லை" என்ருள்.

"இதை உங்கள் தோட்டம் போல உபயோகிக்கலாம்" என்று மறுபடியும் சொன்னேன்; "நான் வேறு ஏதாவது ஒத்தாசை செய்யக் கூடுமானுலும் தெரிவிக்க வேண்டும்" என்றேன்.

ஜானகி வெட்கத்துடன் தன் தோழியைப் பார்த்துத் தயங்கி நின்ருள். வெட்கம் என்பதே என்ன என்று தெரியாதவள்போல் தோன்றிய மற்றவள் உடனே எனக்குப் பதில் சொன்னுள். "ஆகா, அதற்கென்ன தடை? ஏதாவது வேண்டுமானுல் அவசியம் சொல்லுகிருேம். கனகப்பாட்டி இன்னும் சாப்பிட்டு முடியவில்லை" என்று சொல்லி மகிழமரத்தடியில் கிடந்த ஆசனத்தைப் பார்த்தாள். நான் குறிப்பறிந்து சட்டென்று, "இங்கே சற்று நேரம் உட்கார்ந்திருக்கலாமே" என்றேன்.

அவள் உடனே ஜானகியின் கையைப் பிடித்து அழைத்து வந்து ஆசனத்தில் அமர்த்தித் தானும் பக்கத்தில் உட்கார்ந்தாள். "நீங்களும் அங்கே உட்காரலாமே" என்று ஒரு கற்பாறையைச் சுட்டிக் காட்டிவிட்டு, "உங்கள் வீட்டில் யார் யார் இருக்கிறீர்கள்? நீங்கள் எவ்வளவு நாளாய் இங்கே இருக்கிறீர்கள்? எல்லா விவரமும் சொல்லுங்கள். நானும் எங்கள் கதையைச் சொல்கிறேன்" என்ருள்.

அவள் சாதுரியமாக அநேகம் கேள்விகளைக் கேட்டுச் சீக்கிரத்தில் என் வரலாறு முழுவதையும் தெரிந்துகொண்டு விட்டாள்.

பிறகு தோழி நிமிர்ந்து உட்கார்ந்து திவான் மகளைப் பார்த்து, "ஜானகி, இவரிடம் நம் கதையைச் சொல்லலாமா? உனக்கு ஆட்சேபம் இல்லையே?" என்று

கேட்டுவிட்டு, "கேளுங்கள், ஜமீன்தாரவாள். இவள் தகப்பனார் திவான் ராமையருக்கு வேறு குழந்தை இல்லை. நாங்கள் குவாலியரில் அதிக காலம் வசித்த போதிலும் சில சமயம் ஒரு மாதம் லீவு எடுத்துக்கொண்டு சென்னையில் வந்து தங்கியிருப்பது வழக்கம். இந்த வருஷம் சென்னைக்கு வந்ததும் ஜானகி மிகவும் தேகம் மெலிந்து சோர்வுற்று வாடியிருப்பதாகக் குடும்ப வைத்தியர் சொன்னார். அவரையும் ஜோஸ்யர்களையும் கேட்டதில் இங்கே குற்றாலத்தில் வந்திருந்து அருவியில் ஸ்நானம் செய்து கோயிலில் சில பிரார்த்தனைகளைச் செலுத்தினால் சித்தசுத்தி பித்தசுத்தி இரண்டும் ஏற்படும் என்று சொன்னார்கள். அதனால் இங்கே வந்தோம். ஆனால் திவான் எங்களுடன் வரச் சௌகரியப் படவில்லை. அவருக்குக் குவாலியரில் அவசரமான காரியம். கனகப்பாட்டி திவானின் தாயாருக்குச் சிநேகிதி; ஓர் அநாதை, ஏழை. திவானின் தாயார் பரமபதம் அடைந்தது முதல் இவள் எங்களுடனே இருந்து எங்களைப் பார்த்துக்கொள்ளுகிறாள். என் தாய் தந்தையர் மிகவும் ஏழைகள்; ராமையருக்குத் தூர பந்துக்கள். பெரிய ஸம்ஸாரிகள். ஜானகி தன் இளகிய மனத்தினால் என்னைத் தன்னுடனே வைத்துக்கொண் டிருக்கிறாள்" என்றாள். ஜானகிக்கு இந்தப் பேச்சுப் பிடிக்கவில்லை. அவள் எழுந்து வண்டியை நோக்கிச் சென்றாள். பாமாவும் குதித்தெழுந்து அவளைப் பின் தொடர்ந்தாள்.

நான் சில மங்குஸ்தான் பழங்களைப் பறித்துக்கொண்டு அவசரமாக அவர்கள் பின்னே சென்றேன்; ஜானகியிடம் அவைகளைக் கொடுத்துவிட்டு, "என் பங்களாவுக்கு ஒரு நாள் வரவேண்டும். அங்கே பல புஷ்பச் செடி வைத்திருக்கிறேன். அந்தத் தோட்டத்தையும் வந்து பார்க்கலாமே" என்றேன்.

ஜானகி பதில் சொல்லாமல், 'இப்படி வாலிபப் பெண்கள் ஓர் அந்நியனுடன் பழகுவது ஒழுங்காகுமோ?' என்று யோசிப்பது போல் தன் தோழியின் முகத்தைப் பார்த்தாள்.

பாமா தயங்காமல் சட்டென்று, "ஆகா, அதற்கென்ன தடை? அதில் ஒன்றும் பிசகில்லையே!" என்றாள்.

அவர்கள் சென்றார்கள்.

இப்படி அந்தப் பெண்களுடன் எதிர்பாராதபடி பழக்கம் ஏற்பட்டதில் எனக்கு அளவற்ற மகிழ்ச்சி. மறுநாள் அவர்கள் என் வீட்டுக்கு வரப்போவதை எண்ணி நான் பலவித ஏற்பாடுகள் செய்தேன். நான்கு மணிக்கு அவர்களை அழைத்து வர என் மோட்டாரை அனுப்பினேன். ஜானகி முதல் நாளைவிட அதிகச் சோபையுடன் விளங்கினாள். கூந்தலை மிக நேர்த்தியாகக் கட்டி வலது காதண்டையில் ஒரு கமல 'க்ளிப்' அணிந்திருந்தாள். எனக்காகவே இப்படி அலங்கரித்துக்கொண் டிருக்கிறாள் என்று என் வாலிபச் செருக்கில் எண்ணினேன்.

பாமா முதல் நாளைவிடக் குறைவாகவே பேசினாளென்றாலும், ஜானகி தன் நாணம் குன்றி அதிகமாக என்னோடு பேசினாள். கனகப் பாட்டி காவலாகக் கூடவே இருந்தபோதிலும் எங்கள் சந்தோஷத்துக்குக் குறைவு ஒன்றும் இல்லை.

டீ குடித்த பிறகு அவர்களை என் பங்களாவுக்குள் அழைத்

துச் சென்று எல்லா அறைகளையும் காட்டினேன்.

அன்று அவர்கள் சென்ற பிறகு எனக்கு மனத்தில் நிம்மதி இல்லை. ஒரு வேலையிலும் மனம் செல்லவில்லை. என் சிற்றப்பாவின் கிராமங்களையும் சொத்துக்களையும் கணக்கிட்டேன். கடைசியில் என் மனத்தில் ஒரு தைரியமான எண்ணம் உதித்தது.

அந்த எண்ணத்தின் விதை சீக்கிரத்தில் ஒரு விருட்சமாக வளர்ந்து என் உள்ளம் முழுவதும் குடிகொண்டு என்னை வருத்தியது. இப்படி ஒரு திவான் மகளைத் தனிமையில் சந்திக்க நேர்ந்ததே ஆச்சரியம். அவளோ அதி ரூபவதி. அவளை அடிக்கடி சந்தித்துப் பேசுவதும், அவளுடன் சகஜமாய்ப் பழகுவதும் எனக்குத் தாங்கமுடியாத பெருமையைத் தந்தன.

ஜானகியின் தோழியான பாமா சீக்கிரத்திலேயே என் சீர்குலைந்த மன நிலைமையை உணர்ந்தாள். அவள் எனக்குப் பலவிதமான சகாயம் செய்து என் காதல் தீயைக் கொழுந்துவிட்டு எரியும்படி செய்தாள். எப்படியாவது ஏற்பாடு செய்து நாங்கள் மூவரும் தினமும் சந்திக்கும்படி செய்வாள்.

இப்படி ஒரு நாள் மாலைப் பொழுதை அவர்களுடன் கழித்துவிட்டுப் பிரிந்த சமயம் ஜானகி வழக்கத்தைவிட அதிக அன்போடு என்னைப் பார்த்ததாகத் தோன்றியது.

அன்று இரவு முழுவதும் நிம்மதியற்றுப் படுத்திருந்த நான் மறுநாள் வெள்ளிக்கிழமை அருவியில் ஸ்நானம் செய்துவிட்டுக் கோயிலில் பிரதட்சிணம் செய்து மனத்தைச் சிறிது சாந்தப்படுத்திக்கொள்ள எண்ணினேன். கோயில் பிராகாரத்தைச் சுற்றி வரும்போது எனக்கு முன்னால் ஜானகி, கனகப் பாட்டி, பாமா மூவரும் செல்வதைக் கண்டேன். இந்த மன நிலையில் அவர்களைச் சந்திக்க விரும்பாமல் அவர்கள் போகட்டுமென்று மெதுவாக நடந்தேன். ஆனால் பாமா என்னைக் கண்டுவிட்டு என்னிடம் ஏதோ சொல்ல விரும்பிப் பின் தங்கினாள். நான் அருகில் போனதும், "ஆவல் கொண்ட காதலரா நீங்கள்? ஏன் இப்படித் தயங்குகிறீர்கள்? நாங்கள் சுதந்தரமாக இன்னும் அதிக நாள் இங்கே இருக்க முடியாது" என்று மெல்லிய குரலில் சொன்னாள்.

"என்ன கேலி இது! ராமையரின் பெண்ணை க்ஷத்திரியனாகிய நான் கல்யாணம் செய்துகொள்ள முடியுமா? இது நடக்கக்கூடிய விஷயமா?" என்றேன்.

அதற்குப் பாமா சற்றுத் தயரம் கலந்த குரலில், "அவள் தகப்பனாரின் இஷ்டம் நிறைவேறினால் அவர் பெரிய துக்கத்துக்கு ஆளாவாளே! அதைவிட இது நலம் அல்லவா?" என்றாள்.

ஜானகியின் அந்தரங்கத் தோழியாக இருந்து அவளுடைய விஷயங்கள் எல்லாவற்றையும் அறிந்த பாமாவின் வாயிலிருந்து இந்த வார்த்தைகள் வந்தும் நான் தயங்கினேன். 'அவள் தகப்பனார் இதற்குக் கட்டாயம் சம்மதிக்கமாட்டார். அப்பொழுது இப்படி நான் ஆசைப்பட்டது வெளியில் தெரிந்து நான் பரிகாசத்துக்கு ஆளாவேன்' என்ற எண்ணமே அதற்குக் காரணம்.

அன்று முழுவதும் என் மனம் ஒரே குழப்பமாக இருந்தது. இரவு சாப்பாடானதும் ஒரு முடிவுக்கு வந்து உட்கார்ந்து

ஜானகிக்கே ஒரு கடிதம் எழுதினேன்.

ஒரு பிராம்மணப் பெண்ணை க்ஷத்திரியனாகிய நான் மணக்க ஆசைப்படுவது மிகவும் துணிகரமான செயல் என்று மன்னிப்புக் கேட்டு, அப்படி இருந்தும் பாளையக்காரர்களாகிய எங்கள் குலமும் மிக உயர்ந்ததே என்றும் என் ஜமீன் சொத்து விவரங்களையும் சேர்த்துக் கவனிக்கும்போது என்னை மணப்பதால் கௌரவம் அதிகரிக்குமே தவிரக் குறையாது என்றும் காட்டுகிற தோரணையில் எழுதினேன். அவள் சம்மதித்தால், என் உறவினர் மூலம் அவள் தகப்பனாரிடம் அவளை மணக்க அநுமதி கேட்க ஏற்பாடு செய்வதாகவும் எழுதினேன்.

கடிதத்தை எழுதிக் கவரில் போட்டு ஒட்டின பிறகே தூங்கினேன். ஆனால் பொழுது விடிவதற்கு முன் கண் விழித்தேன். ஓர் ஆள் வசம் அதைத் தந்து திவான் மகளிடம் கொடுக்கச் சொன்னேன்.

காலை எட்டு மணிக்குப் புறப்பட்டுச் சென்ற அந்த ஆள் பத்து மணிக்குப் பிறகே பதில் கொண்டு வந்தான்.

வழக்கமான மரியாதைகள் ஒன்றும் இல்லாமல், "ஜமீன்தாரே!" என்று ஆரம்பித்திருந்தது அந்தக் கடிதம். "தாங்கள் எழுதியிருக்கும் யோசனை புத்திசாலித்தனமல்ல. இதைப்பற்றி என் தகப்பனாரைக் கேட்டால் எப்படிப்பட்ட மரியாதை தங்களுக்குக் கிடைக்குமென்பதை எண்ணும்போது எனக்குச் சிரிப்பும் அழுகையும் சேர்ந்து வருகின்றன. ஒரு சநாதனியின் மனப்பான்மை தங்களுக்குச் சிறிதும் தெரியாது. இருந்தாலும் தீரப் பிரபுவே, தாங்கள் என்னைக் காதலிப்பதாகச் சொல்லுகிறீர்கள். தங்கள் பாக்கியம் முழுவதையும் என்னுடன் பகிர்ந்து கொள்வதாகவும், என்னை மிக அன்புடன் காப்பதாகவும் கூறி என்னைக் கௌரவப்படுத்தி யிருக்கிறீர்கள். அதனால் தங்களிடம் ஓர் அந்தரங்க விஷயம் சொல்லுகிறேன். என் வாழ்க்கை எனக்குச் சாரமற்றதாக இருக்கிறது. என் வீட்டில் எனக்கு எப்படிப்பட்ட பாக்கியம் தயாராகிக்கொண் டிருக்கிறது என்று எனக்குத் தெரியும். அதைவிடத் தங்களையே அடைவது உத்தமம். ஆகவே, தங்கள் கேள்விக்குச் 'சம்மதம்' என்று விடை கூறுவதே உசிதம். ஆனால் செய்ய வேண்டிய காரியங்களை என் தகப்பனாருக்குத் தெரியாமல் ரகசியமாக நாமே செய்துகொள்ளவேண்டும். காட்டருவிக்குச் செல்லும் பாதையில் மலை யடிவாரத்தில் இன்று மாலை என் தோழி பாமாவைச் சந்தித்தால் அவள் எல்லா விவரமும் சொல்லுவாள்."

கையொப்பம் 'திவான் மகள்' என்று மாத்திரம் இருந்தது.

அன்று காலையிலிருந்து பெய்து கொண்டிருந்த மழை பிற்பகலில் நின்றது.

நான் நான்கு மணிக்கே மலையடிவாரம் சென்றுவிட்டேன். அங்கிருந்து காட்டருவிக்கு ஏறிச்சென்ற சமயம் அங்கே மேய்ந்துகொண் டிருந்த ஓர் ஆடு, பாறை வழுக்கி ஒரு பள்ளத்தில் விழுந்து வெளிவர முடியாமல் கத்திக்கொண் டிருந்தது. அதன் கால்களைப் பிடித்து மெதுவாக மேலே தூக்கிவிட்டேன். எலும்பு முறியாமல் இருக்கிறதா என்று பார்த்துக்கொண் டிருந்தேன். திடீரென்று திரும்பிப் பார்த்தேன்; என் அருகில் பாமா நின்றுகொண் டிருந்தாள். அவள் வந்ததே எனக்குத் தெரியாது.

தன் கூரிய கண்களால் அவள் ஒரு முறை என்னைப் பார்த்தாள். "நீங்கள் செய்ததை நான் பார்த்துக்கொண்டே இருந்தேன். அந்த ஆடு முதலில் உங்களைக் கண்டு பயந்தது. பிறகு கொம்பினால் முட்டப் பார்த்தது. அப்படி முட்டி, இந்தப் பாறையில் வழுக்கிக் கீழே விழுந்திருந்தால் நீங்கள் பாதாளம் போய்ச் சேர்ந்திருப்பீர்கள். ஆனால் இந்த அற்பப் பிராணிக்காக உயிர் துணிந்து, அதை அடக்கி, காலைப் பிடித்து மேலே தூக்கிவிட்டீர்கள். உங்கள் வேஷ்டியெல்லாம் சேறாகி விட்டது!" என்றாள்.

நான் சுருக்கமாக, "இன்று பேச வந்ததற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?" என்றேன்.

"சம்பந்தம் இருக்கிறது, ஐயா, இருக்கிறது. என் சொந்த நன்மையாகவே திவான் பெண்ணின் நன்மையை நான் கருதுகிறேன். அவளைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறவர் கருணை மிகுந்தவர் என்று அறியும்போது எனக்குச் சந்தோஷமாக இருக்கிறது" என்றாள்.

"திவான் பெண் உன்னிடம் ஏதாவது சொல்லி அனுப்பினாளா?" என்று கேட்டேன்.

அவள் சொன்னாள்: "எந்தத் தினமும் குவாலியரிலிருந்து கடிதம் வரும். நாங்கள் உடனே புறப்பட்டுப் போக வேண்டியிருக்கும். விவாகம் செய்து கொள்வதென்றால் உடனே செய்து கொள்வதுதான் நல்லது. ஜானகி கேட்பதெல்லாம் ஒரு கோயிலில் பகவான் சந்நிதியில் தனக்கு விவாகம் நடக்க வேண்டும் என்பதே."

"ஆற்றுமலையில் பத்மநாப ஸ்வாமி கோயில் இருக்கிறது" என்றேன்.

"இந்த விவாகத்தைப்பற்றியோ, யாரைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறீர்கள் என்பதைப் பற்றியோ, விவாகம் நடக்கும் வரையில் ஒருவரிடமும் சொல்வதில்லை என்று சபதம் செய்யுங்கள்" என்றாள்.

நான் அப்படியே செய்தேன்.

"சரி, நான் ஒரு புரோகிதரை விவாகத்துக்குப் பொருத்தமாக முகூர்த்த நாள் கேட்டேன். அவர் நாளைக்கு மறுநாள் திங்கட்கிழமை காலை பத்து மணிக்கு நல்ல முகூர்த்தம் இருக்கிறது என்றார். நீங்கள் நாளைக்கே புறப்பட்டு ஆற்றுமலைக்குச் செல்லுங்கள். திங்கட்கிழமை விடியற்காலை உங்கள் மோட்டாரைச் செங்கோட்டை ஸ்டேஷனுக்கு அனுப்பி வையுங்கள். அங்கே திவான் பெண்ணும், அவளைச் சிறு வயது முதல் வளர்த்த நாச்சியார் என்ற வேளாள ஸ்திரீ ஒருத்தியும் காத்திருப்பார்கள். ராகுகாலத்துக்கு முன் புறப்பட்டால் முகூர்த்த வேளைக்குள் அங்கே வந்து சேருவார்கள்" என்றாள் பாமா. அப்போது அவள் குரலில் சோர்வு தட்டியது. மேலும், "திவான் பெண்ணின் தோழியை இனி நீங்கள் பார்க்க நேரிடாமல் போகலாம். என் வேலை முடிந்து விட்டது" என்று தழுதழுத்த குரலில் சொல்லிக் கைகளைக் கூப்பினாள்.

இந்த வார்த்தைகள் என் மனத்தை உருக்கின. இத்தனை நாளாய் அவள் செய்த உதவியாலே அல்லவா என் எண்ணம் சாத்தியமாயிற்று? அவளை நன்றியுடன் பார்த்தேன். அந்திப் பொழுது நெருங்கி இருட்டி விட்டது. இந்தச் சொற்ப வெளிச்சத்தில் சற்றே துக்கம் தோய்ந்த புன்

சிரிப்புடன் என்னைப் பார்த்த அவள் வதனத்தின் பொலிவையும் அங்கங்களின் மென்மையையும் அப்போதுதான் நான் கவனித்தேன். அவள் அதரங்களின் லாவண்யமும், கன்னக்குழிகளின் வசீகரமும் எனக்கு வியப்பைத் தந்தன. 'இந்தப் பாமாவும் மனிதரை மயக்கும் வனப்புடையவளே' என்ற எண்ணம் எனக்கு உண்டாயிற்று.

அடுத்த கணம் அவள் தன் சுபாவமான துஷ்டத்தனத்துடன் எனக்கு ஒரு பொய்க் கும்பிடு போட்டுவிட்டு, "போய் வருகிறேன், மன்மதரே!" என்று சொல்லித் தன் கைகளைத் தட்டினாள். சிறிது தூரத்தில் ஒரு மரத்துக்குப் பின்புறமிருந்து ஓர் உருவம் வெளிவந்தது. அதுதான் அவர்களுடைய வேலைக்காரியாகிய நாச்சியார் என்று நான் ஊகித்தேன். இருவரும் மறைந்தார்கள்.

நானும் என் குடையை எடுத்துக்கொண்டு புறப்பட்டேன்.

என் விவாகத்துக்கு முதல் நாளெல்லாம் எனக்கு ஒருவிதப் பரபரப்பு ஏற்பட்டது. பாமா சொன்னபடி ஞாயிறு காலையில் புறப்பட்டு ஆற்றுமலைக்கு வந்தேன். காரியஸ்தனைக் கூப்பிட்டு மறுநாள் என் விவாகத்துக்குரிய ஏற்பாடுகளைச் செய்யச் சொன்னேன்.

ஆனி மாதம்; திங்கட்கிழமை. மேகங்கள் சூழ்ந்து இருட்டிக்கொண்டு காற்றும் தூற்றலுமாக இருந்தது. நான் விடியற்காலையில் பாமாவின் ஏற்பாட்டின்படி மோட்டாரைச் செங்கோட்டைக்கு அனுப்பியிருந்தேன்.

ஒன்பதரை மணிக்குக் கணக்குப் பிள்ளை ஒருவன் வந்து மோட்டார் வந்துவிட்டதாகவும், மணப்பெண் கோயிலில் காத்திருப்பதாகவும் சொன்னான். நான் சுபவேளையில் கோயிலுக்குச் சென்றேன். அதற்கு முன்னால் என் மனத்தில் தோன்றிய சம்சயங்களெல்லாம் விலகின. சந்தோஷத்தினால் என் நெஞ்சம் துள்ளிற்று.

காலையில் கோயிலுக்குள் ஒருவரும் வரக்கூடாதென்று நான் கண்டிப்பாக உத்தரவிட்டிருந்த போதிலும், கோயில் வாசலில் கிராமத்து ஜனங்கள் கூடிவிட்டார்கள்.

கோயிலின் முன் தாழ்வாரத்து மாடத்தில் ஒரே ஒரு சிறிய விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அந்தச் சொற்ப வெளிச்சத்தில் ஒரு தூணண்டை நாச்சியார் நிற்பதைக் கண்டேன். நான் உள்ளே சென்றேன்.

கர்ப்பக்கிருகம் ஒரே இருட்டாக இருந்தது. சந்நிதியில் பல சிறிய அகல் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. ஒரு புரோகிதர் உட்கார்ந்து ஏதோ மந்திரத்தைச் சொல்லிக்கொண்டிருந்தார். தெய்வத்தை வணங்கினேன். ஹோம குண்டத்தின் எதிரில் எனக்குரிய ஆசனத்தில் உட்கார்ந்தேன். அடுத்த கணம் ஓர் உருவம் கர்ப்பக்கிருக வாயிலண்டை தெரிந்தது; சிவப்பு வர்ணப் பட்டாடை தரித்துக் கம்பீரமாக வரும் அந்த மின்னற்கொடியைக் கண்டதும் என் நெஞ்சம் துள்ளிற்று. ஆனால் மறு கணமே வியப்பு உண்டாயிற்று. அவள் மௌனமாக என் அண்டையில் இருக்கும் ஆசனத்தில் வந்து உட்கார்ந்தாள். அவள் பக்கம் திரும்பினேன். இருட்டில் அவளை உற்று நோக்கினேன். என் பிரமை அவளுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

"ஆமாம்; நான்தான்" என்று சொன்னாள் அவள்.

என் பக்கத்தில் உட்கார்ந்தவள் பாமா!

நான் பித்துப் பிடித்தவன் போல் திரு திருவென்று விழித்தேன். சற்றுநேரம் பேசவுமில்லை, நகரவுமில்லை.

பிறகு சட்டென்று எழுந்து, 'என் பின்னால் வா' என்று அவளுக்குச் சைகை செய்துவிட்டுப் பிராகாரத்தின் ஒருபுறம் போய் நின்றேன். அவளும் அங்கே வந்தாள்.

"இதற்கென்ன அர்த்தம்?" என்றேன்.

"இதெல்லாம் உங்கள் நன்மைக்காகத்தான்."

"ஐயோ! ஏன் இப்படிச் செய்தாய்?" என்று கேட்டேன்.

கருணையோடு அவள் என்னைப் பார்த்து, "நிஜமாகவே ஒரு பெரிய குடும்பத்துப் பெண் இந்தமாதிரி தகப்பனார் உத்தரவு இல்லாமல் ரகசியமாக வந்து உங்களைக் கல்யாணம் செய்துகொள்வாளென்று நினைத்தீர்களா? இது என்ன, கதையா?" என்று கேட்டாள்.

சவுக்கடிபோன்ற இந்த ஏளனச் சொல்லினால் என் ரத்தம் சில்லிட்டது. கோபம் பொங்கி எழுந்தது.

"உன் எண்ணந்தான் என்ன? நீதானே என்னைத் தூண்டினாய்?... ஐயோ!...எல்லாம் ஒரே குழப்பமாக இருக்கிறதே!" என்று பதறினேன்.

அவளைக் கல்யாணம் செய்து கொள்ள நான் மறுக்கலாம்; "திரும்பிப் போ!" என்று சொல்லலாம். ஆனால் நான் எப்படித் திரும்புவது? என் நிலைமை என்னவாகும்? கல்யாணம் நின்றுவிட்டது என்று சொல்லி இவ்வளவு ஜனங்களின் எதிரிலும் எப்படிச் செல்வேன்? மணமகள்போல் புதுப் புடைவை உடுத்து அலங்கரித்துக்கொண்டு வந்திருக்கும் பாமாவை - மணையில் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்த பாமாவை - எப்படி விலக்குவேன்?

எனக்குப் பைத்தியம் பிடித்து விடும்போல் இருந்தது. நான் பேசாமல் உள்ளே சென்றேன். கனவிலே நடப்பதுபோல் புரோகிதர் சொல்படி தாலியை வாங்கி மௌனமாக அவள் கழுத்தில் கட்டினேன். தெய்வத்தை நமஸ்கரித்துவிட்டு நாங்கள் வெளி வந்தோம். என் மனத்தில் ஒரே ஒரு வெறி குடிகொண்டது. 'இவ்வளவுக்கும் இவளைப் பழி வாங்குவேன். தள்ளிவைத்துத் திண்டாடச் செய்வேன்' என்று எண்ணினேன். 'பழி வாங்குவேன், பழி வாங்குவேன்' என்ற இதே ஜபந்தான்.

என் விவாகத்துக்குப் பிறகு நான் நடந்துகொண்ட விதத்தைச் சொன்னால் நம்பமுடியாது.

பாமாவை அடக்கி ஆள உத்தேசித்தேன்; அவள் துணிச்சலைக் கண்டிக்க எண்ணினேன். ஆனால் ஆள்வதற்கு உத்தேசித்த நான் அடிமையிலும் அடிமையானேன்.

என்னை அவள் மந்திரம் போட்டு மயக்கிவிட்டாளென்றே தோன்றும்.

அவள் நிர்ப்பந்தமாக என்னை மணந்ததனால் என்னிடம் சிறிதாவது பயம் கொண்டிருக்க வேண்டும்; கொஞ்சம் அடக்க ஒடுக்கமாவது காட்டியிருக்க வேண்டும். ஆனால் அவளோ ஒரு சக்கரவர்த்தினியைப் போல் செருக்குடன் இருந்தாள்.

'அன்ன நடையும் அன்னமிவா
ஐயர் நடையும தளர்வெய்தக்
கன்னி நடக்கும் நடை கற்றாள்
கருமபு கசக்கும் மொழி பெற்றாள்.

தன்னை அரியன் என அறிந்து
தானே மனத்தில் தருககுற்றாள்'

என்பது அவளுக்கே பொருந்தும்.

என் உள்ளம் அணுவளவும் புண்படாதபடி என்னிடம் பிரியமாக இருப்பாள். என்றாலும், அவளுடைய மனம் முழுவதையும் எனக்குக் கொடுக்கவில்லை, ஏதோ ஒளித்து வைத்திருக்கிறாள் என்று எனக்குத் தோன்றும். அது என்னவென்று எனக்குத் தெரியாது. அதை அறிய வேண்டும் என்று ஆவல் கொண்ட நான், மானைத் துரத்திப் பிடிக்க முயலும் ஒரு வேடனைப்போல் மேலும் மேலும் அவளிடம் தலைகால் தெரியாமல் அன்பு கொண்டுவிட்டேன்.

எங்கள் தனிமை வாழ்க்கையைக் கெடுப்பதற்கு ஒருவரும் வரவில்லை. ஒரு பிரத்தியேக உலகத்தில் வசிப்பவர்கள்போல் நாங்கள் வசித்தோம்.

என் மனைவியை ஒதுக்கி வைக்கும் எண்ணமே நாளடைவில் எனக்குப் பிடிக்காமல் போயிற்று. அவளை இழந்தால் வாழ்க்கையே சாரமற்றதாகும் என்று தோன்றிற்று. இருந்தும் அவளைத் தள்ளி வைக்கலாமென்ற எண்ணமும் என் உள்ளத்தில் சற்றுச் சற்றுத் தோன்றும்.

பாமாவை நாச்சியார் சிறு வயது முதல் வளர்த்தாளாம். பாமாவின் மீது மிகுந்த அன்பு செலுத்தினாள். அதனால் கூடவே இருப்பதற்காக அவள் இங்கே வந்துவிட்டாள்.

ஆவணி மாதம் சென்றது; புரட்டாசி பிறந்தது. ஒரு நாள் காலையில் தபால் வந்தது. அதில் பாமாவுக்கும் ஒரு கடிதம் இருந்தது. அதை எடுத்துக்கொண்டு அவள் நகர்ந்தாள். நான் என் கடிதங்களைப் பிரித்தேன்.

என் தமக்கையிடமிருந்து வந்தது ஒரு கடிதம். என் மனைவியைப் பார்க்கவேண்டுமென்று தனக்கு ஆசையாக இருப்பதாகவும், கூடுமானால் நானும் என் மனைவியும் மாயவரத்துக்கு வந்து தன்னைப் பார்க்க வேண்டுமென்றும் அவள் கேட்டிருந்தாள்:

"அவள் யார் வீட்டுப் பெண்? அதைப்பற்றிய விவரம் நீ ஏன் எழுதவில்லை? எனக்கு ஏதோ காதில் பட்டதே! ஊரார் பலர் பலவிதம் சொல்லுகிறார்கள்; எதை நமபுவது? யாரோ ஒரு பார்பபாரப் பெண்ணை நீ கல்யாணம் செய்துகொண் டிருக்கிறாயென்று அவர்கள் வம்பு பேசுகிறார்கள். தாய் தகபபன் இல்லாத அநாதை என்றும் சொலகிறார்களே! நான இந்தமாதிரி எழுதுவதற்கு வருத்தப்படாதே. உனக்கு எவ்வளவோ உயர்ந்த இடங்களிலிருந்து பெணகள் வந்ததை வேண்டாமெனறு மறுத்தாயே! நீ தப்புக் காரியம ஒன்றும செய்ய மாட்டாயென்றும் எனக்குத் தெரியும். அவள் யார் வீட்டுப் பெண் என்பதை எனக்கு எழுது. ஊரார் வம்பு பேசுவதை நான கண்டிக்கிறேன்."

இப்படி அவள் கடிதத்தில் எழுதியிருந்தாள்.

எனக்கு இதைப் படிக்கும்போது கோபம் உண்டாயிற்று. பாமா என்னை ஏன் இந்தமாதிரி சூழ்ச்சிக்கெல்லாம் உட்படுத்தினாள் என்று தோன்றிற்று.

பாமாவின் கால் சிலம்பின் ஓசை கேட்டது. அவள் மெதுவாக வந்தாள். அவள் இந்தச் சமயத்தில் வந்தது ஆபத்தாக முடிந்தது.

அவள் கையில் ஒரு கடிதம் வைத்திருந்தாள். என்னைக் கண்டதும் வெட்கத்தோடு அதை மடியில் வைத்து மூடிக்கொண்டாள்.

என் தமக்கையின் கடிதத்தை எடுத்து அவளிடம் நீட்டி, "இதைப் படி" என்றேன்.

அவள் அதை வாங்கி வாசித்தாள். அவள் முகத்தில் சற்று வருத்தம்

தென்பட்டது. இருந்தும் அதை அடக்கிக்கொண்டு, "நல்லது, இப்போது என்ன செய்யவேண்டும் என்கிறீர்கள்?" என்று புன்சிரிப்புடன் கேட்டாள். ஏதோ ஒரு வேடிக்கையான ரகசியத்தை ஒளித்து வைத்திருப்பவள்போல் அவள் கண்கள் பிரகாசித்தன. உதடுகளில் சிரிப்புத் ததும்பிற்று. "ஜமீன்தாரே, ஏன் இப்படி வருத்தப்படுகிறீர்கள்? தலை நிமிர்ந்து என்னைப் பார்த்து, 'நீ யாராக இருந்தால் என்ன? திவான் பெண்ணானால் என்ன, தரித்திரன் பெண்ணானால் என்ன? பிராம்மணப் பெண்ணானாலும் பள்ளப் பெண்ணானாலும் எனக்குப் பாதகம் இல்லை. நமக்குள் அன்பு இருக்கிறது. அதுவே போதும்' என்று சொல்லுங்கள்" என்றாள்.

பாமாவின் இந்தப் பேச்சு எனக்குப் பிடிக்கவேயில்லை. என் கோபம் அதிகமாயிற்று. நான் ஆத்திரத்துடன் எழுந்து நின்றேன்.

"என் இஷ்டத்தினால் மாத்திரமே நீ இங்கே இருக்கிறாய். நான் ஒதுக்கி வைக்க இஷ்டப்பட்டால் அப்படியும் செய்ய முடியும். தெரியுமா?" என்று கர்ஜித்தேன்.

"என்ன சொல்லுகிறீர்கள்?" என்று ஆத்திரத்துடனேயே அவளும் கேட்டாள்.

"நீ சதி செய்து என்னை மணந்து கொண்டதை நான் நிராகரிக்க முடியும். நம் இருவருக்கும் நடந்த விவாகத்தை இல்லை என்றால் நீ என்ன செய்வாய்?"

"பகவத் சந்நிதானத்தில் மணந்தீர்களே?" என்று மெல்லிய குரலில் கூறித் திக்பிரமை அடைந்தவள் போல் பாமா தன் இரு கைகளாலும் தலையைப் பிடித்துக் கொண்டாள்.

பிறகு, "இதுதான் உங்கள் நேர்மையோ?" என்று சொல்லிச் சட்டென்று திரும்பி அறையை விட்டுச் சென்றாள்.

பாமாவின் குரலில் இருந்த இகழ்ச்சி என்னை ஓர் ஈட்டிபோல் குத்தியது. அவள் என் காலில் விழுந்து கெஞ்சினாலன்றி இனி அவளை மன்னிப்பதில்லை என்று தீர்மானித்தேன். 'வீட்டில் யார் எஜமானன் என்பதை அவளுக்கு நன்றாகக் கற்பிக்க வேண்டும். அவள் எனக்குச் செய்த தீங்கையெல்லாம் தனிமையில் கிடந்து நினைத்து நினைத்து வருந்தட்டும். அவள் துணிவு, அவள் சூழ்ச்சி! ஒரு நன்றி கெட்ட பதர்-'

என் கோபத்திலே காரியஸ்தனைக் கூப்பிட்டு நான் திருநெல்வேலி போகப் போகிறதாகவும் வருவதற்கு ஒரு வாரம் செல்லுமென்றும் சொல்லிவிட்டு மோட்டாரைக் கொண்டுவரச் சொல்லி அதில் ஏறிச் சென்றேன். பாமாவுக்குத் தெரிவிக்கவில்லை.

இரவு திருநெல்வேலி போய்ச் சேர்ந்தேன். அங்கே முசாபரி பங்களாவில் படுத்திருந்தேன். காலையில் எழுந்ததும் தாமிரபர்ணி நதிக் கரையில் இருக்கும் சிறிய கிராமம் ஒன்றைப் பார்வையிடச் சென்றேன்.

இரவு உணவு கொள்ள எனக்குச் சிறிதும் பிடிக்கவே இல்லை. என் மனப்பான்மை காலையில் இருந்த மாதிரி இல்லாமல் மாறிவிட்டது. பாமாவைப் பார்த்து உடனே அவளுடைய மன்னிப்பைக் கேட்க வேண்டும் என்ற ஆவல் மேலிட்டது. என்னால் பொறுத்திருக்க முடியவில்லை.

உடனே திரும்பி ஆற்றுமலைக்கு வந்தேன். அப்போது இரண்டு மணி

இருக்கும். உள்ளே சென்று மாடியில் படுக்கையறைக்கு ஓடினேன்.

உள்ளே இருட்டாக இருந்தது. அவளை எங்கும் காணவில்லை. நான் வெறிகொண்டவன் மாதிரி வீட்டிலுள்ள மற்ற அறைகளிலெல்லாம் நுழைந்து அவள் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டேன். என் கௌரவம், மானம் எல்லாவற்றையும் மறந்தேன். கடைசியில் காரியஸ்தன் தயக்கத்துடன் என் எதிரில் வந்து, "எஜமானி அம்மாளும் அவர்களுடைய வேலைக்காரியும் எங்கேயோ புறப்பட்டுப் போய்விட்டார்கள்" என்றான்.

ஸ்டேஷனுக்குப் போய் விசாரித்ததில் அவர்கள் செங்கோட்டைக்கு டிக்கட் வாங்கிக் கொண்டார்கள் என்று தெரிந்தது.

ஏழெட்டு நாளுக்குப் பிறகே நான் செங்கோட்டைக்குச் செல்ல முடிந்தது. 'ஒருகால் ஜானகி இவ்வளவு நாளும் குற்றாலத்திலேயே தங்கி யிருக்கலாம்; பாமா அவளிடம் போயிருக்கலாம்' என்ற எண்ணத்துடன் மிகவும் ஆவலாய் மைசூர் ராஜாவின் பங்களாவுக்குச் சென்றேன். அங்கே விசாரித்ததில் பத்து நாளுக்கு முன்பே அவர்கள் எல்லாரும் புறப்பட்டுப் போய்விட்டதாகத் தெரிந்தது.

அந்தப் பங்களாவின் தோட்டக்காரனை விசாரித்தேன். நான் தெரிந்துகொண்ட விவரம் இது தான்: ஜானகியும் கனகப்பாட்டியும் அந்தப் பங்களாவிலேயே இருந்திருக்கிறார்கள். சுமார் பன்னிரண்டு நாளுக்கு முன்பு கனகப்பாட்டி திடீரென்று நோய் கண்டு இறந்துவிட்டாள். உடனே திவானுக்குத் தந்தி கொடுக்கவே, அவர் தம் மகளைத் திரும்பி வரும்படி தந்தி அடித்தாராம். மறு நாள் என் மனைவியும் வேலைக்காரியும் வந்திருக்கிறார்கள். எல்லாரும் அவசரமாகச் சாமான்களைக் கட்டிக் கொண்டு சென்னைக்குப் புறப்பட்டு விட்டார்கள்.

பாமா என்னைவிட்டுப் போன இரண்டு மாதங்களுக்கெல்லாம் நானே ரெயில் ஏறிக் குவாலியருக்குப் போனேன். ஒரு முறை அவளைப் பார்த்துவிட்டு வரவேண்டும் என்று ஆவல். என்னோடு வசிக்க இஷ்டமில்லையென்றால் அந்த வார்த்தையை அவள் வாயிலிருந்து நேரே கேட்க விரும்பினேன். நான் நேரில் சென்றால் கட்டாயம் என்னுடன் வருவாள் என்று எண்ணினேன். என் கண்மணி என்னை மன்னிக்காமல் இருக்கமாட்டாளென்று நிச்சயமாக நம்பினேன்.

குவாலியரில் திவான் பங்களா ஊருக்கு வெளியில் இருந்த ஒரு புதுக் கட்டிடம்.

அங்கிருந்த குமாஸ்தாவிடம், "திவான் வீட்டில் ஒரு பெண்ணைப் பார்க்கவேண்டும். நான் தென் தேசத்திலிருந்து வந்தவன். அவளுக்குத் தெரிந்தவன்" என்று இங்கிலீஷில் சொன்னேன்.

"யாரை? எந்தப் பெண்ணை?"

"திவான் மகளுடன் கூடவே இருப்பவளை."

"உங்கள் பெயரை எழுதிக் கொடுங்கள். நான் போய் அந்த அம்மாளிடம் சொல்லி அநுமதி கேட்டுக்கொண்டு வருகிறேன். பிற்பாடு பார்க்கலாம்."

நீராதென்று கண்டதும் ஒரு காகிதத் துண்டில் அந்தக் குமாஸ்தாவுக்குப் புரியாமல் இருப்பதற்காகத் தமிழில்,

"பாமா, தயை செய்து என்னைச் சற்று நேரம் பார்க்கச் சம்மதி.

உன் கணவன்,
ரங்ககிருஷ்ணன்"

என்று எழுதிக் கொடுத்தேன்.

குமாஸ்தா உள்ளே போனன். தூரத்தில் மரங்களுக்கு இடையில் ஒரு பங்களாவும் அதன் வராந்தாவில் ஒரு பாராக்காரன் உலாவுவதும் தெரிந்தன. நான் வெளிக் 'கேட்'டண்டையே காத்து நின்றேன்.

அரை மணி நேரம் ஆயிற்று. அந்தக் குமாஸ்தா வரவில்லை. வேறோர் ஆள் வந்தான். நான் கொடுத்த கடிதத்தையே திருப்பிக் கொண்டு வந்து என் முன் வீசி எறிந்து விட்டு, "ஜா, ஜா" என்றான்.

நான் ஒன்றும் புரியாமல் விழித்தேன். பாமா இவ்வளவு கல்நெஞ்சம் படைத்தவளா! மோட்டாரில் ஏறிக்கொண்டு ஹோட்டலுக்கு வந்து சேர்ந்தேன்.

திவான் பங்களாவில் கண்ட குமாஸ்தா அரைமணி நேரத்துக்கெல்லாம் என்னைத் தேடி வந்தான். பரிதாபத்துடன் பார்த்து, என்னிடம் ஒரு கடிதத்தை நீட்டினன். அதில் இங்கிலீஷில், "ஸ்ரீயுத ரங்ககிருஷ்ணன், இந்தக் குவாலியரை விட்டு உடனே வெளிச் செல்ல வேண்டும்" என்ற உத்தரவு திவான் கையெழுத்துடன் இருந்தது.

வேறு வழி இல்லாமல் குவாலியரை விட்டுப் பகல் பதினெரு மணிக்குப் புறப்பட்டு நேரே சென்னைக்கு வந்தேன்.

ஆற்றுமலைக்குத் திரும்பிச் செல்லச் சிறிதும் பிடிக்கவில்லை; சென்னையிலேயே மயிலாப்பூரில் விடுதி வைத்துக்கொண்டு வசித்தேன். என் தமக்கை வற்புறுத்தியும் அவளைப் பார்க்கப் போகவில்லை.

ஒரு தினம் பாமா என்னை மன்னித்து எனக்குச் சொல்லி அனுப்புவாள் என்ற அற்ப ஆசையை வைத்துக்கொண்டு ஜீவித்திருந்தேன். பாமா என்னை விட்டுப் போய் ஒரு வருஷமும் ஒரு மாதமும் ஆகி விட்டன. ஒரு நாள் காலை பத்து மணி இருக்கும். மழை தூறிக்கொண்டே இருந்தது. தெருவில் ஒரு ஜட்கா வண்டி மெதுவாக வந்தது.

வண்டியிலிருந்து ஒரு கிழவர் இறங்கினர். அவருடைய கர்நாடக மான கோட்டும், மார்வாடித் தலைப்பாகையும் அவர் ஒரு சுதேச மன்னரின் ஸம்ஸ்தானத்தைச் சேர்ந்தவர் என்பதைக் காட்டின.

"ஆற்றுமலை ஜமீன்தார் நீங்கள் தானே?"

"ஆம்" என்று தலையசைத்து, "நீங்கள் குவாலியரிலிருந்து வருகிறீர்களா?" என்றேன்.

"ஆமாம். நேரே ஆற்றுமலைக்குப் போயிருந்தேன். ஆனல் நீங்கள் அங்கே இல்லை என்று சொன்னர்கள். அதனல் இங்கே வந்தேன்."

"நீங்கள் என் மனைவியிடமிருந்துதானே வருகிறீர்கள்?"

"கேளுங்கள், ஜமீன்தார்: நான் வந்து, உம்..நீங்கள் நினைக்கிற மாதிரி...உம்....நீங்கள் குறிப்பிடுகிற பெண்ணிடமிருந்துதான் வந்திருக்கிறேன். இசைகேடாய் ஏற்பட்டுவிட்ட.... உம்....அந்தச் சம்பவத்தைப்பற்றி எனக்குத் தெரியும். அந்த அம்மாள்...... சிறு பெண், பாவம். ஏதோ அறியாமையில் செய்த காரியம். வக்கீல்களைக் கேட்டதில் சட்டப்படி இது செல்லாது என்கிறார்கள். இந்தத் தவருன கல்யாணத்தை மறந்துவிடு

வதில் உங்களுக்கு ஆட்சேபம் இராதே?" என்ருர்.

"என்ன! எங்கள் கல்யாணத்தை மறப்பதா! யாரையா நீர்? என் மனைவி உம்மை அனுப்பியிருக்க மாட்டாள்!" என்று கத்தினேன்.

கிழவர் எழுந்து நின்ருர். "சற்று இருங்கள், அவசரப்படாதீர்கள்" என்று சொல்லித் தம் சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து என்னிடம் நீட்டினுர். அந்தக் கையெழுத்து எனக்குத் தெரிந்ததே. அது பாமாவின் கையெழுத்து!

"ஆற்றுமலை ஜமீன்தாருக்கு-ஏற்கனவே ஜமீன்தாரவர்கள் அபிப்பிராயப்பட்ட அந்த விஷயத்தில் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய என் சார்பாக ஸ்ரீமான் சிவராமையரை நியமித்திருக்கிறேன். அவர் செய்வதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்."

அதற்குமேல் ஒரு வரியும் இல்லை. பச்சாத்தாபமும் இல்லை; கோபமும் இல்லை. ஒரே நிர்த்தாட்சிண்யமான ரோஷம்! அந்த வரிகளைப் பார்த்தபடி நான் அசைவற்று நின்றேன். கோபம் என்னையும் மீறிக் கிளம்பிற்று. அப்பொழுது என்ன நடந்ததென்று எனக்குத் தெரியாது. வீடே அதிரும்படி நான் சத்தம் போட்டது வேறே யார் குரல் போலவோ என் காதில் பட்டது. நான் மறுபடியும் சுயபுத்தி பெற்ற சமயம் அந்தப் பத்திரத்தை என் கையில் சுக்குச் சுக்காகக் கிழித்துக் கொண்டு நிற்பதை உணர்ந்தேன். அவைகளை ஒரு கவருக்குள் போட்டு ஒட்டி வீல் வைத்து, "ஸ்ரீமதி சத்தியபாமா ரங்க கிருஷ்ணன்" என்று அழுத்தமாக மேல் விலாசம் எழுதிச் சிவராமையரிடம் கொடுத்தேன்.

"இந்தாருங்கள், ஐயரவாள்; இதை என் மனைவியிடம் கொடுங்கள். பகவான் சந்நிதியில் நடந்த அந்த விவாகத்தை மறப்பதற்கு எனக்குத் துணிவு இல்லை என்று சொல்லுங்கள்" என்றேன்.

அவர் சற்றுக் கடுமையான குரலில், "நீங்கள் பெரிய தப்புச் செய்கிறீர்கள், ஜாக்கிரதை!" என்ருர்.

மறுமொழி சொல்லாமல் மாடிக்குச் சென்றேன். அவரும் போய்விட்டார்.

நான் இப்போது ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிறேன். இங்கு வந்து இரண்டு மாதங்கள் ஆகின்றன. ரஸ்தாவில் ஒரு மோட்டார் மழையினுல் வழுக்கி, மோட்டார் ஓட்டியின் கைக்கு அடங்காமல் திரும்பி வேகமாய் என் முதுகில் தாக்கிற்றும்; நல்ல வேளையாக என் பக்கத்தில் இருந்த ராந்தல் கம்பத்தையும் அந்தச் சமயத்தில் அது மோதினபடியால் நான் இந்தமட்டும் உயிரோடு இருக்கிறேனும். என்னை உடனே ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்தார்களாம். இந்த விவரங்களையெல்லாம் நான் சிறிது சிறிதாகத் தெரிந்துகொண்டேன்.

நான் இறந்துவிடுவேன் என்றே முதலில் எல்லாரும் எண்ணினுர்களாம். என் நண்பன் சுந்தரம் ஒரு நாள் என்னைப் பார்க்க வந்தபோது, "இதைக் கேட்டாயா? உன் சொத்து யாருக்குக் கிடைத்தது என்று ஒருவர் என்னைக் கேட்டார். 'வேறொருவருக்கும் கிடைக்கவில்லை; அவரேதான் வைத்துக் கொண்டிருக்கிருர்' என்று நான் சொன்னேன். 'ஆற்றுமலை ஜமீன்தார் இறந்துபோய் மூன்று மாதம் ஆகிவிட்டதே! வட இந்தியப் பத்திரிகைகளிலெல்லாம் போட்டிருந்

ததே!' என்ருர். இது வேடிக்கையாக இல்லையா?'' என்ருன்.

இரண்டு நாளுக்கெல்லாம் சுந்தரம் மறுபடியும், ''ரங்கா, உன் கருமாதிக்காக மூவாயிரம் ரூபாய் செலவழித்தார்களாம். இதை இன்று ஒருவர் என்னிடம் சொன்ஞர்'' என்று சிரித்தான்.

இந்தமாதிரி கதைகளை வடக்கே பம்பாய், குஜராத் பக்கங்களிலிருந்து வருபவர்களே சொன்ஞர்களென்று தெரிந்தது. அங்கே இருப்பவர்களில் யாரோ, நான் மோட்டாரில் அடிபட்டேன் என்ற காரணத்தை வைத்துக்கொண்டு, வேண்டுமென்றே இந்தக் கதைகளைப் பரவச் செய்கிறமாதிரி இருந்தது. ஏன் இப்படிச் செய்ய வேண்டும்? வட இந்தியாவில் எனக்கு விரோதி யார்?

பங்குனி மாதத்தில்தான் நான் மீண்டும் குவாலியருக்குப் புறப்பட முடிந்தது. என் நண்பன் சுந்தரம் என்னைத் தனியே போகவிடச் சம்மதிக்காமல் தானும் வந்தான்.

நாங்கள் இரவு குவாலியர் சென்ளூேம். மறுநாள் பொழுது விடிந்ததும், சுந்தரத்தை ஊருக்குள் அனுப்பி, திவான் மகளுடன் கூட இருந்த பெண்ணையும் அவள் தாய் தந்தையரையும்பற்றி விசாரித்து வரும்படி சொன்னேன். நான் ஒரு மார்வாடியைப் போலத் தலையில் ஒரு பெரிய பாகையைக் கட்டி என் முகத்தைப் பாதி மறைத்துக் கொண்டு வெளியே சென்றேன்.

பாமாவைப்பற்றி நினைத்தபடி நடந்துகொண்டேயிருந்தபோது தெருவின் ஒரு வீட்டிலிருந்து ஒருத்தி வெளியே வந்தாள்.

நாச்சியார் என்று கண்டேன். ''நாச்சியார், நாச்சியார், நல்ல வேளை, நீ அகப்பட்டாயே!'' என்று சொல்லி அவள் என்னை அடையாளம் கண்டு கொள்வதற்காக என் முண்டாசை நீக்கினேன். அவள் உடனே என்னைத் தெரிந்துகொண்டாள். முதலில் கடுகடுத்திருந்த அவள் முகம் மாறுபட்டது. கைகள் இரண்டையும் சேர்த்துக் கன்னத்தில் வைத்து, ''ஐயோ, சாமி, நீங்களா! நீங்களா!'' என்று திரும்பத் திரும்பச் சொன்ஞள்.

''நாச்சியார், என் பெண்சாதி எங்கே? அவள் என்ன செய்கிருள்? அவளை நான் பார்க்கவேண்டும். நாச்சியார், என்னை அவளிடம் அழைத்துப் போ. என்னை இந்த ஊருக்குள் வரக்கூடாதென்கிருர்கள். அந்த அவமானத்தையும் பொறுத்துக்கொண்டு நான் வந்திருக்கிறேன். அவளைக் காணவிட்டால் என்ஞல் உயிரோடு இருக்க முடியாது'' என்று கெஞ்சினேன்.

அவள், ''என் பின்ஞல் வாருங்கள்'' என்று சொல்லித் திரும்பிப் பாராமல் வேகமாய்ச் சென்ருள். நானும் அவள் பின் சென்றேன். ஏதோ சந்துகளில் நுழைந்து ஒரு சிறிய குடிசைக்குள் புகுந்தாள்.

இருட்டாக இருந்த அந்தக் குடிசைக்குள் நான் நுழைந்ததும் வாசல் கதவைத் தாழிட்டுவிட்டு அங்கிருந்த ஒரு மாடத்திலிருந்து பேஞ, மைக்கூடு, ஒரு மோட்டாக் காகிதம் இவைகளை எடுத்து ஒரு பெஞ்சியின் பேரில் வைத்து, ''எழுதுங்கள்'' என்று என்னிடம் சொன்ஞள்.

அவள் கருத்தை நான் புரிந்து கொண்டேன்.

ஒரே குழப்பத்துடன், கைகள் நடுங்க, நான் குனிந்து அந்தப் பெஞ்சியில் காகிதத்தை வைத்து என் மனைவிக்கு எழுதினேன். என்ன எழுதினேஞே

நானே அறியேன். நான் செய்தது, நான் கஷ்டப்பட்டது, அவள் பேரிலுள்ள என் காதல், அவள் கல் நெஞ்சம், என் அளவற்ற ஆசை இவைகளையெல்லாம் ஒன்றோடொன்று கலந்து குழறி எழுதினேன். கடிதத்தை நாச்சியாரிடம் கொடுக்கப் போகும் சமயம் வெளியில் யாரோ கதவைத் தட்டினார்கள். நாச்சியார் சட்டென்று அதை வாங்கித் தன் இடுப்பில் ஒளித்துக்கொண்டு, "நீங்கள் எங்கே இருககிறீர்கள்?" என்று கேட்டாள்.

நான் இருக்கும் விடுதியின் பெயரையும் தெருவையும் சொல்லி, "சொககநாதன் என்ற பெயரோடு இருக்கிறேன்" என்றேன். அவள் புரிந்துகொண்டதாகத் தலையை ஆட்டி, கொல்லைக் கதவைத் திறந்து விட்டு, "நீங்கள் இருக்கும் இடத்துக்குப் போங்கள். அதை விட்டு வெளியே வர வேண்டாம். அபாயம். நான் செய்தி கொண்டு வருகிறேன்" என்றாள். நான் என் விடுதியை அடைந்தேன்.

சுந்தரமும் வந்தான். "என் சுந்தரம், என்ன சமாசாரம்?" என்று ஆவலாய்க் கேட்டேன்.

சுந்தரம் பதில் சொல்லத் தயங்கி நின்றான். பிறகு, "வா; நாம் திரும்பி ஊருக்குப் போகலாம், ரங்கா. நாம் இந்த ஊரில் இருக்கவேண்டாம். தரித்திரம் பிடித்த ஊர்" என்றான்.

என் ஆத்திரத்தில் அவன் தோளைப் பிடித்துக் குலுக்கினேன். "என்ன செய்தி? சொல்லித் தொலை" என்றேன்.

"அந்த அம்மாள்.........அந்த அம்மாள் உன் மனைவி அல்ல. அவளுக்கு வேறு கல்யாணம் ஆகிவிட்டது" என்றான்.

"மாப்பிள்ளை யார்?" என்று கேட்டேன்.

"ஒரு டாக்டராம். சங்கரன் என்று பெயர். திவான் தயவால் அவனுக்கு இந்த ஊர் ஆஸ்பத்திரியிலேயே வேலை ஆகியிருக்கிறது. நூறு ரூபாய் சம்பளமாம். கீழ ராஜ வீதியில் 10-ஆம் நம்பர் வீட்டில் இருக்கிறார்கள்."

நான் ஸ்தம்பித்து நின்றேன். ஏமாற்றத்துக்குமேல் ஏமாற்றம்! இதென்ன மோசச் செய்கை! இன்னும் என்னதான் செய்வார்களோ?

நான் வெளியே புறப்பட்டுக் கீழே ராஜவீதியை அடைந்தேன். அன்று காலையில் நான் வந்த தெரு இதுவே. இதில் பத்தாம் நம்பர் வீட்டைச் சுலபமாகக் கண்டேன். அந்த வீட்டிலிருந்துதான் காலையில் நாச்சியார், வெளி வந்தாள். அந்த வீட்டு ஜன்னலின் வழியாக ஒரு வேலைக்காரப் பெண் தன் தலையை நீட்டினாள். அவள் பேசினது எனக்குப் புரியவில்லை; நான் பேசினது அவளுக்குப் புரியவில்லை. "டாக்டர் நஹி" என்றாள். நான் கற்றிருந்த ஒன்றிரண்டு ஹிந்தி வார்த்தைகளைக் கொண்டு, வீட்டு எஜமானி அம்மாளைப் பார்க்க வேண்டுமென்று அவளுக்குத் தெரிவித்தேன். "ஆஓ ஆஓ" என்று சொல்லி ஒரு சிறிய அறைக்குள் என்னை அவள் அழைத்துச் சென்றாள். அங்கே இருக்கும்படி சொல்லிவிட்டு உள்ளே போனாள்.

பத்து நிமிஷங்கள் கழிந்தன. அறைக்கு வெளியே யாரோ நடந்து வரும் காலடி ஓசை கேட்டது. கதவு திறந்தது. உள்ளே வந்தவள் பாமா அல்ல; திவானின் மகள் ஜானகி!

இவள் இங்கே ஏன் வந்தாள்? இதென்ன! நான் முன்பு இவளை எதிர்பார்த்த சமயம் பாமா வந்தாள்;

இப்போது பாமாவைக் காண எண்ணும்போது இவள் வருகிறாள்!

ஜானகி என்னைக் கண்டதும், "ஐயோ, ஜமீன்தாரா!" என்று சொல்லி ஆச்சரியப்பட்டாள்.

"அம்மா, நீங்கள் எப்போதும் என்னிடம் தயையுடன் இருந்தீர்கள். என் மனைவி மறுபடியும் கல்யாணம் செய்துகொண்டுவிட்டாளென்று கேள்விப்பட்டேன். நான் அவளை ஒரு முறை பார்க்க வேண்டும். தயை செய்து அவளைக் கூப்பிடுங்கள்" என்று வேண்டினேன்.

ஜானகி இதற்கு விடை ஒன்றும் சொல்லாமல் ஆச்சரியம் நிறைந்த கண்களுடன், "ஏன் ஜமீன்தாரே, தோழி யார், திவான் மகள் யார் என்று இன்னுமா உங்களுக்குத் தெரியவில்லை?" என்று கேட்டாள்.

உடனே பளிச்சென்று எனக்கு எல்லாம் விளங்கியது. அவள் மேலே சொல்லவேண்டிய அவசியமே இல்லை. என்ன மூடன் நான்! ஏன் இது முன்பே எனக்குத் தெரியாமல் போயிற்று! என் பாமாதான் திவானின் பெண்; ஜானகி அல்ல. இதை எப்படி முன்பே தெரிந்து கொள்ளாமல் போனேன்! பாமாவின் கம்பீரம், நேர்மை, அழகு எல்லாம் எனக்கு ஞாபகம் வந்தன. ராணியைப்போல் இருந்த அவளை ஏழைப் பெண் என்று நினைத்து நான் எப்படி ஏமாந்தேன்!

"எல்லாம் பாமாவின் குறும்புச் சேஷ்டையினால்தான் ஆரம்பித்தது" என்று ஜானகி சொன்னாள்.

நான் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து இந்த வரலாறு முழுவதையும் கேட்க விரும்பினேன்.

"முதலிலிருந்து சொல்லு. முன்பு குற்றாலத்தில்—"

"ஆமாம். முன்பு, முதல் நாள் நீங்கள் என்னைத் திவான் மகளென்று எண்ணிப் பேசியபோது அப்படியே இருக்கட்டும் என்று பாமா என் வாயை அடக்கித் தான் ஓர் ஏழைபோல் நடித்து வந்தாள். ஆனால் இந்த விளையாட்டு இவ்வளவு தூரத்துக்கு வரும் என்று எனக்குத் தெரியாது. உங்கள் கல்யாணத்துக்குப் பிறகு நானும் கனகப் பாட்டியும் குற்றாலத்திலேயே இருந்தோம்! கனகப் பாட்டிக்கு நோய் கண்டது; அவள் இறந்து விட்டாள். இதை நான் பாமாவுக்கு எழுதினேன். அதே சமயத்தில் உங்களுக்குள் சண்டையும் ஏற்பட்டது போல் இருக்கிறது. பாமா உடனே திரும்பிக் குற்றாலம் வந்தாள். அப்போது எங்களை உடனே புறப்பட்டு வரச் சொல்லித் திவானிடமிருந்து தந்தி வந்தது. நாங்கள் போனோம். பாமா இஷ்டப்பட்டிருந்தால் இந்தக் காரியத்தை ஒளித்திருக்கலாம். ஆனால் அவள் சுபாவம் அந்த மாதிரி இல்லை. அவளுக்குத் தைரியம் அதிகம். திவானிடம் நேரே சென்று தன் தாலியைக் காட்டித் தனக்கு விவாகமான விவரத்தைச் சொன்னாள்; என்றாலும் இனித் தன் கணவரைத் தான் பார்க்கப் போகிறதில்லை என்றும் சொன்னாள். அப்பப்பா! அன்று திவான் திட்டியதும் கோபித்ததும் இன்னும் ஏழேழு ஜன்மத்துக்கும் போதும். பிறகு ஒரு வருஷம் வரையில் உங்களிடமிருந்து ஒரு தகவலும் இல்லை. அதனால் உங்களுக்கு வேறு கல்யாணம் செய்துகொள்ள விருப்பம் இருக்கும் என்றும், தான் ஏதாவது ஜீவனம்சம் கேட்

கலாமென்று நீங்கள் தயங்கப் போகிறீர்களே என்றும் அவள் நினைத்தாள். அதனால் 'சிவராமையரை அனுப்புகிறேன்' என்று தன் தகப்பனார் சொன்ன யோசனைக்குச் சம்மதித்தாள். நீங்கள் மறுத்துவிடவே, ஒருகால் நீங்கள் தன்னை அழைத்துக் கொள்ளலாம் என்று ஆசை வைத்திருந்தாள். அவளுக்கு உங்கள் பேரில் உண்மையான அன்பு. திவான் அவளை மிகவும் துன்புறுத்தினர். வீட்டைவிட்டு எங்கும் செல்லக் கூடாதென்று கட்டுப்படுத்தினர். பழைய வேலையாட்களை யெல்லாம் போகச் சொல்லிவிட்டு, புது ஆட்களுக்கு ஏற்பாடு செய்தார். கைதியைப்போல் வைத்திருந்தார். எப்படியாவது இந்தக் கல்யாணத்தை இல்லை என்று மறுக்க அவளைச் சம்மதிக்கச் செய்ய முயன்றூர். ஆனல் அவள் ஒரே பிடிவாதமாக இருந்தாள். இந்த ஊரில் கோல் கொண்டா சுப்பையர் என்பவர் ஒரு கோடீசுவரர். வயது முப்பதுதான். மூத்த மனைவி இறந்துவிட்டாள். அவருக்குப் பாமாவைக் கல்யாணம் செய்து கொடுக்கத் திவானுக்கு ஆசை. பாமாவுக்கு அவரைக் கண்டாலே ஆகாது. அவள் கர்வத்தை அடக்க வேண்டுமென்றே அவளைக் கல்யாணம் செய்துகொள்ளச் சுப்பையர் ஆசைப்பட்டார். அது முடியாமல் போயிற்று. அவர்தான், நீங்கள் செத்துவிட்டீர்கள் என்று சென்னையிலிருந்து செய்தி கொண்டு வந்தார்! அப்பொழுது அவள் எவ்வளவு அழுதாள், என்ன துக்கப்பட்டாள்! என்று கண்ணீர்விட்டாள்.

அவள் சொன்ன விஷயங்களினல் நான் அளவற்ற சந்தோஷம் அடைந்தேன்.

"அம்மா! இனிமேல் என்னை ஒருவராலும் விரட்ட முடியாது. நீ மாத்திரம் நான் இங்கே வந்த செய்தியை ஒருவரிடமும் சொல்லாதே. உன் பாமா தன் புருஷனுடன் சந்தோஷமாக வாழ்வதைச் சீக்கிரம் காண்பாய்" என்று சொல்லிவிட்டு நான் வெளியே வந்தேன்.

பாமாவை அழைத்துக்கொண்டு ஊருக்குப் போய்விடுவது என்று தீர்மானிப்பது எளிது. ஆனல் அந்தக் காரியத்தை எப்படிச் செய்வது? நாச்சியாரை எப்படியாவது மறுபடியும் கண்டு பேசினல்தான் இது கைகூடும் என்று நான் எண்ணியபோது அவளே எங்கள் இருப்பிடத்துக்கு வந்தாள். "நாச்சியார், என்ன சமாசாரம்?பாமா என்ன சொன்னுள்?" என்று கேட்டேன்.

அவள், "எஜமான், கடுதாசை அம்மாளிடம் கொடுத்தேன். அம்மா ரொம்ப அழுதார்கள். எஜமானைக் காப்பாற்றியதற்காகச் சாமியைக் கும்பிட்டார்கள்" என்றுள்.

பிறகு அவளும் நானுமாக யோசித்து அன்று இரவே பாமாவை அழைத்துக்கொண்டு போய் விடுவதென்று தீர்மானித்தோம்.

திவான் பங்களாவில் வடபுறத்து மதில்சுவரில் ஒரு திட்டிவாசல் இருந்தது. அன்று இரவு எட்டு மணிக்கு என்னை அதன் வழியாக உள்ளே விடுவதாக நாச்சியார் சொன்னுள்.

இரவு ஏழே முக்கால் மணிக்குக் குறிப்பிட்ட இடத்துக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கே நாச்சியார் வந்து என்னைக் காவலாட்களின் கண்ணில் படாமல் திட்டிவாசல் வழியாகத் தோட்டத்துக்குள் அழைத்துச் சென்றுள். பிறகு நாங்கள் இருவரும் பங்களாவின் பின் பக்கமாகச் சுற்றி வந்தோம். அங்கே பங்களாவின்

இடது பக்கச் சுவரோரமாக என்னை அழைத்துப் போனாள். மாடியில் விளக்கு எரியும் ஒரு ஜன்னலைச் சுட்டிக்காட்டி, "அதுதான் எசமானி அம்மாளின் அறை" என்று சொல்லி விட்டுப் போனாள்.

அந்த அறையைக் கண்டதும் என் உள்ளம் துள்ளிற்று. அப்போது மழை தூற ஆரம்பித்தது. மையிருள். அந்த அறையிலிருந்து வந்த வெளிச்சத்தில் அருகில் இருந்த வாதா மரம் சிறிது தெரிந்தது. அதைத் தடவிப் பிடித்துக்கொண்டு மெதுவாக ஏறினேன். ஓர் அடி பிசகினாலும் கீழே விழுந்து விடுவேன். அறைக்கு வெளிப்புறத்துச் சுவரின் கொடுங்கையில் காலை ஊன்றி அறைக்குள் யாராவது இருக்கிறார்களா என்று எட்டிப் பார்த்தேன்.

அறை விசாலமாகவும் சித்திர அலங்காரங்கள் நிறைந்தும் இருந்தது. ஒரு மூலையில் கிடந்த சோபாவின் முதுகுப்புறம் எனக்குத் தெரிந்தது. அதிலிருந்து ஒரு காசிப் புடைவையின் தலைப்புத் தொங்கிக் கீழே புரண்டுகொண்டிருந்தது. அதில் இழைத்திருந்த தங்கப் பூக்கள் மின்னின.

'என் பாமா இதற்குள் சாப்பாடு முடிந்து இங்கே வந்து விட்டாளோ?' என்று எண்ணினேன். அடுத்த கணம் அறையின் கதவு திறந்தது. ஒரு பரிசாரகன் வெள்ளித் தட்டில் வைத்த ஒரு டம்ளரில் கஞ்சியும் செம்பில் தண்ணீரும் எடுத்து வந்தான். தான் கொண்டு வந்த தட்டை மேஜைமேல் வைத்துவிட்டு அவன் வேகமாய் வெளியே சென்றான்.

இன்று பாமா தன் தகப்பனருடன் சாப்பிடச் செல்லவில்லை. தனக்கு உடம்பு சரியில்லை என்று சொல்லிக் கஞ்சி மாத்திரம் அனுப்பச் சொல்லியிருக்கிறாள்!

பரிசாரகன் சென்றதும் துள்ளி எழுந்து கதவைப் படீரென்று அடைத்துத தாழிட்டாள். பிறகு அவள் திரும்பியபோது எங்கள் இருவர் கண்களும் சந்தித்தன. அடுத்த கணம் நான் ஜன்னல் மேல் கால்வைத்து உள்ளே குதித்தேன். ஓர் அலை எழுந்து கரையில் வந்து விழுவதுபோல் ஒரே துள்ளாக வந்து அவள் என் மார்பில் சாய்ந்தாள். அந்தச் சமயத்தின் இனிமையை எப்படி வர்ணிப்பேன்! நான் பட்ட கஷ்டத்தையெல்லாம் அந்த விநாடியே மறந்தேன்.

நாச்சியார், சுந்தரம் இருவரின் உதவியாலும் நாங்கள் அன்றிரவே குவாலியரை விட்டுப் புறப்பட்டுச் சென்னைக்கு வந்தோம். உடனே ஆற்றுமலைக்குச் சென்றோம்.

இரண்டு மூன்று தினங்கள் கழித்துப் பத்திரிகையில் கீழ்வரும் செய்தியைப் படித்தேன்:

"திவான் ராமையரின் உத்தியோகத் திறமை எவ்வளவு பிரசித்தமானதோ அவ்வளவு அவருடைய தெய்வ பக்தியும் சமயப்பற்றும் பிரசித்தமானவை. அவருடைய ஒரே புத்திரியான ஸ்ரீமதி சத்தியபாமா இந்தச் சிறு வயதிலேயே சந்நியாசம் வாங்கிக்கொண்டு காசிக்குச் சென்று விட்டாளென்று தெரிகிறது."

மருமகன் ஒரு க்ஷத்திரியன் என்று சொல்வதைவிட மகள் காசிக்குப் போய்விட்டாள் என்று சொல்வதே மேல் என்று திவானுக்குத் தோன்றியது போலும்!

க்விஸ் விடை

(17 - ஆம் பக்கத்திலுள்ள கேள்விகளுக்கு விடை)

நம் நாடு:

1. விசாகபட்டணம்.

2. அசோகன்.

3. (அ) 6,85, 665. (ஆ) 2316.

விஞ்ஞானம்:

1. ஹார்மோனியம்: டிபெயின். டிராம்வே: பிரான்ஸிஸ் ட்ரெயின். டைப்ரைட்டர்: போகால்ட், விட்ஸ்டோன். தையல் மெஷீன்: எலியாஸ் ஹவ்.

2. 16 முதல் 18 தடவை.

3. ஒன்றோடு ஒன்று மோதும். ஓடும் காற்றின் உட்புறத்தில் ஓரளவு சூன்யவெளி ஏற்படுகிறது. சுற்றிலும் நிலையாக உள்ள காற்றின் அமுக்கம் இந்த வஸ்துக்களை அந்தச் சூன்யவெளிக்குள் தள்ளி விடுகிறது. இதுதான் காரணம்.

இந்துமத தத்துவம்:

1. முண்டகோபநிஷத்தில் வருகிறது, இந்த உவமை. அரசம் பழம் தின்பது கர்மபலனை அநுபவிக்கும் ஜீவாத்மா. ஒளிவீசும் மற்றது கர்மபலன் ஒட்டாத பரமாத்மா.

2. அதிதியான நசிகேதஸைத் தன்னை அறியாமல் மூன்று இரவு பட்டினி கிடக்கவிட்ட குற்றத்துக்கு வருந்தித்தான் அந்த மூன்று வரங்களையும் அளித்தான்.

பொது:

1. மகாராஜா என்பவரே நிர்வாகத் தலைவர்; அவரே உண்மையில் ஆட்சி புரிபவர். மகாராஜாதிராஜா என்பவர் பெயருக்கு ராஜா; நிர்வாகம் எதிலும் கலக்கமாட்டார்.

2. உழவு: (அ) சித்திரை; (ஆ) ஆடி, ஆவணி (இ) வைகாசி.

விதைப்பு: (அ) வைகாசி; (ஆ) ஆவணி, புரட்டாசி; (இ) ஆனி.

அறுவடை: (அ) ஆடி; (ஆ) தை, மாசி, பங்குனி (இ) ஐப்பசி.

3. வைவஸ்வத மநு (19 - ஆம் பக்கத்திலுள்ள கட்டுரையைப் படித்தால் இது தெரியும்.)

தப்பு விடை:

1. 64.

2. 1-1-1900.

3. சூரியன்.

4. சமம்.

யுக்தி:

ரெயிலைவிட விமானம் சுமார் 10,000 அடி அதிக தூரம் பிரயாணம் செய்யும். 5000 அடி ஏறி இறங்குகிறதல்லவா? அதனால் விமானந்தான் பிந்திவிடும்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS 4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

சில கடிதங்கள்

'மஞ்சரி'யில் உள்ள பலவித அம்சங்களும் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டன. பத்திரிகை அதிகக் கவர்ச்சியுள்ளதாக இருக்கிறது.........ஒவ்வொரு மாத இதழும் ஒவ்வொரு விதமாகக் காட்சி அளிக்கிறது. ....முதல் பக்கத்திலிருந்து கடைசிப் பக்கம் வரை (அட்டைப்படம் உட்பட) விஷயம் பொதிந்திருக்கிறது. கடந்த மூன்று மாதங்களாகத் தங்கள் பத்திரிகையைப் படித்து வருகிறேன். இதன் மேல் பழைய இதழ்களை மிகவும் சிரமப்பட்டு என் நண்பர்களிடமிருந்து வாங்கிப் படித்து இன்புற்றேன்......வாழ்க மஞ்சரி!

—வி. கேசவலு, தாலூகா ஆபீஸ், உதகமண்டலம்.

ஓயாமல் வெளிவந்துகொண்டிருக்கும் காதல் கதைகள் மட்டும் நம்மை முன்னேற்றி வைக்கும் என்று எண்ணுவது தவறு. எத்தனையோ கலைகளில் நாம் தேர்ச்சி பெறவேண்டும். இதற்கான பணியை உங்கள்-இல்லை, இல்லை-எங்கள் 'மஞ்சரி' மேற்கொண்டிருக்கிறது என்பது மிகையல்ல......'மஞ்சரி'யை ஒரு பக்கங்கூட விடாமல் வாசிக்கத் தோன்றுகிறது......'மஞ்சரி'யைப் படித்து வருவதால் எவ்வளவோ நல்ல விஷயங்களெல்லாம் அறிவது எனக்குச் சாத்தியமாகிறது.

—அ. நா. சுவாமிநாதன், திப்பிராஜபுரம்.

'மஞ்சரி' மே மாத இதழைக் கண்ணுற்றேன். இது போன்ற 'டைஜெஸ்ட்' பத்திரிகை தமிழில் வர வேண்டுமென்று பல நாட்களாக நண்பர்களும் நானும் காத்திருந்தோம். புத்தகச் சுருக்கப் பகுதி மிக நல்ல அம்சம். இந்த மாத இதழில் வெளியான ஜே. பி. ரைன் எழுதிய 'எல்லையற்ற மனம்' (The Reach of the Mind) அறிவுக்கு விருந்து.

—கே. பி. வேங்கடபாலசுப்பிரமணியன், உடுமலைப்பேட்டை.

'மஞ்சரி' பிப்ரவரி இதழை ஆவலுடன் படித்தேன். பலவிதச் சுவையோடு பொதுஜன ரஞ்சகமான கட்டுரைகள் அடங்கிய அருமையான பத்திரிகை. பழைய இதழ்களை வாங்க விரும்புகிறேன். தங்களிடம் கிடைக்குமா? அல்லது தங்கள் ஏஜெண்டு யாரிடமாவது கிடைக்குமா?

—எம். எஸ். சேஷன், ஜம்ஷேத்பூர்.

'மஞ்சரி' குறிப்பிட்ட நாளில் கைக்குக் கிடைக்காவிட்டால் மிகவும் கவலையாக இருக்கிறது......இன்னும் சில வெளிநாட்டுப் பத்திரிகைகளிலிருந்து வரலாறு, கட்டுரை, ஆராய்ச்சி, பொன்மொழி முதலியவைகளை அதிகமாகப் போட்டுப் பத்திரிகையை ஏன் இன்னும் சற்றுப் பெரிதாக்கி விலையைக் கூடுதலாகச் செய்யக்கூடாது? மாதம் இரு முறையாகச் செய்தலும் தகும்.

—த. முருகன், ஜலகண்டபுரம்.